உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

களந்தை, ஆதியப்பனாரியற்றிய

# திருக்களர்ப் புராணம்.

இது

களப்பாள் ஸ்ரீமாந்

## கு. ஸ்ரீநிவாஸமுதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி

கும்பகோணம்

டவுன்ஹைஸ்கூல் முதல் தமிழ்ப்பண்டிதராகிய

பின்னத்தூர்

### அ. நாராயணசாமி ஐயரால்

ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு

ஒருவாறு பரிசோதித்து

திருக்களர்

### மு. சாமிநாத உபாத்தியாயர்

முயற்சியால்

கும்பகோணம் "ஸ்ரீவித்தியா முத்திராக்ஷரசாலையில்"

அச்சிடப்பட்டது.

*Copyright Registered.*

**1902.**

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

கடல்புடைசூழ்ந்த நெடுநிலவரைப்பில்
ஏணாட்டிய புகழ்ச் சோணாட்டிடையே
மூவா முக்கண் மூர்த்தி யோவா
ஆடல் கொண்டருளிய பாடல் சால் சிறப்பின்
மருக்கிளர் பொழில்சூழ் திருக்களரென்னுந், திவ்ய க்ஷேத்திரத்திற்கு 'அருந்தமிழ்த் திறந்தேர் ஆதியப்பன்' என்பவராலியற்றிய இப்புராணம் மிக்கசிதைவுற்ற பிரதி ஒன்று எனக்குக்கிடைக்கப்பெற்று அதனைப் பெயர்த்து எழுதிவருங்காலத்தில் திருக்களரிலிருக்கும் மு. சாமிநாதஉபாத்தியாயரென்பவரிதனைக் கேள்வியுற்று அடுத்த களப்பாள் ஸ்ரீமாந் கு. ஸ்ரீநிவாஸமுதலியாரவர்களிடத்தில் தெரிவித்து அவர் முயற்சியால் என்னிடம்வந்து இப்புராணத்தை 'அச்சிடுதற்காவனவற்றைச் செய்ததுமன்றி இன்னம்இரண்டு ஏட்டுப்பிரதிகளும் சேகரித்து என்னிடம்கொடுத்தனர்; அம்மூன்றுபிரதிகளையும் ஒருசேரவைத்துப்பரிசோதிக்கும்போது சிலவிஷயங்கள் விளங்காமலே பிழைபட்டவண்ணமாகவிருந்தன; அதனையறிந்த பின்னத்தூர் ப்ரஹ்மஸ்ரீ ஸா. சுந்தரசாஸ்திரிகளவர்கள் தம்மிடமிருந்த திருக்களர் ஸம்ஸ்கிருதபுராணப் பிரதியொன்றனை அன்போடு உதவினார்கள்; அதனைக்கொண்டு ஒருவாறுதிருத்தி அச்சிட்டனன்.

இதன்மத்தியில் யான் நேரில் முற்கூறிய திருக்களரு க்குச் சென்றபொழுது அவ்வூர்க்கோயிலிலுள்ள செப் பேட்டுச்சாதனங்களையும் அக்கோயிலிலெழுதப்பட்டுள்ள சிலசாதனங்களையும்நோக்கி அவற்றையுஞ்சேர்த்து வெளி யிட்டால் பண்டைக்காலத்து விஷயங்கள் சில புலப்படு மென்றெண்ணி அங்ஙனமே சிதைவுற்றவையன்றி மற்றவற் றை எழுதி இதனோடுசேர்த்து புராணவசனச் சுருக்கமும் எழுதி அச்சிட்டிருக்கிறேன்.

மேற்கூறிய சாதனங்கள் வடவெழுத்து விரவப்பெற் றிருந்தமையால் தமிழ்மாத்திரம் பயின்றோர் வாசித்தற்கு இயலாதென்று அவற்றைத் தமிழெழுத்தாகவேமாற்றி எழுதியிருக்கிறேன்.

யான் திருத்தியவற்றில் பிழைகள் மிக்கிருப்பனவாயி னும் அவற்றை அறிவுடையோர் பொறுத்தருளும்படி வேண்டுகிறேன்.

சுபகிருது ஆடி மீ கடுஉ } அ. நாராயணசாமிஐயன்.
பின்னத்தூர்

**நூலாசிரியர்:—**இவர் தருமபுரவாதீனம் அழகிய சிற்றம் பலதேசிகர் காலத்தவரென்று சிறப்புப்பாயிரத் தாலறியப் படுதலின் (உஉ) வதுபட்டம் அழகியசிற்றம்பல தேசிகர் தொடங்கி (க0) பட்டம் நடந்திருப்பதால் உத்தேசம் உ00 வருஷத்துக்கு முற்பட்டவரென்று சொல்லலாம். அக்காலத்தில் திருக்களர் க்ஷேத்திரம் தருமபுர வாதீனத் தார் விசாரணையிலிருந்தததென்று தெரிவதால் அவர்கள் கட்டளையிட்டபடி இவர் பாடினாரென்று சிறப்புப் பாயிரத் திற் கூறியதும் அமைவாகவே யிருக்கிறது. மற்றும் இவ ரது சரித்திரமானது இன்னம் பலவித்வான்கள் சரித்திரத் தோடு வெளிவரக் கூடுமெனில் அக்காலத்திலறிந்து கொள்க.

**திருக்களர்:—**இவ்வூர் தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடித்தாலூகா வைச்சார்ந்தது ; . மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டிக்குப் போகிற ரோட்டின் (11) வது மயிலிற் பிரிந்து முத்துப்பேட்டைக் குச்செல்லுகிற மார்க்கத்தில் மூன்றாவது மயிலிலும் திருத்துறைப் பூண்டி ரெயில்வேஸ்டேஷனிலிருந்து மேற்கே (5) மயில்தூரத்திலு முள்ளது.

சைவசமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரப்பதிகம் பெற்றுள்ளது.

பெரியபுராணம் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம்.

"மற்றவ்வூர் தொழுதேத்தி மகிழ்ந்து பாடி
மாலயனுக் கரியபிரான் மருவுந் தானம்
பற்பலவுஞ் சென்றுபணிந் தேத்திப் பாடிப்
பரவுதிருத் தொண்டர்குழாம் பாங்கி னெய்தக்
கற்றவர்வாழ் தண்டலைநீ ணெறியுள் ளிட்ட
கனகமதின் திருக்களருங் கருதார் வேள்வி
செற்றவர்சேர் பதிபிறவுஞ் சென்று போற்றித்
திருமறைக்கா டதன்மருங்கு சென்று சேர்ந்தார்." (ருஎசு)

என்றசெய்யுளால் ஆளுடையபிள்ளையார் இவ்வூர்வழியே திரு மறைக்காட்டுக்குச் சென்றருளினாரென்றும் ஷை புராணம்

"பொன்னிவளந் தருநாடு புகுந்து மிக்க
பொருவில்சீர்த் திருத்தொண்டர் குழாத்தி னோடும்
பன்னகப்பூ ணணிந்தவர்தங் கோயி லூறும்
பத்தருடன் பதியுள்ளோர் போற்றச் சென்று
கன்னிமதில் திருக்களரும் போற்றிக் கண்டங்
கறையணிந்தார் பாதாளீச் சுரமும் பாடி
முன்னணைந்த பதிபிறவும் பணிந்து போற்றி
முள்ளிவாய்க் கரையணைந்தார் முந்நூன் மார்பர்." (அகூசு)

என்ற செய்யுளால் ஆளுடையபிள்ளையார் மதுரையிலிருந்து மீண்டு சோழநாடு புகுந்து இவ்வூர்வழியே சென்றருளினரென்று தெரிகிறது. இவ்வூரின் பிரதிநாமங்கள் ;—களரி, கற்பகவனம், தருவனம், பாரிஜாதவனம், மந்தாரவனம் என்பன.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த க்ஷேத்திரக்கோவை.

"மண்ணிப்படிக்கரைவாளொளிபுற்றூர்
வக்கரைமந்தாரம்வாரணாசி
வெண்ணிவிளத்தொட்டிவேள்விக்குடி
விளமர்விராடபுரம்வேட்களத்தும்
பெண்ணையருட்டுறைதண்பெண்ணாகடம்
பிறப்பில்பெரும்புலியூர்பெருவேளூருங்
கண்ணைகளாக்காறைகழிப்பாலையுங்
கயிலாயநாதனையேகாணலாமே." (ரு)

இதனுள் மந்தாரமென்பது திருக்களரினைப் போலும். இவற்றாலும் புராணகதைகளாலும் இத்தலத்தின்சிறப்பை ஆராய்ந்தறிந்து கொள்க.

## திருக்களர்
## செப்பேட்டுச்சாதனங்கள்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் மதுரையும் ஈழமுங் கருவூரும் பாண்டியன்முடித்தலையுங்கொண்டருளியஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு-உசுவது திருக்களர்முளைத்த நாய

ளூர்கோயில் திருவாபரணத்துக்கு முதல் குடிஞக்கல்லிடை திருக்கோளகை (க)ம், இதன் மேல்பர்மமும் உட்பட வு உளு மாறி பொன் நூற்றொருகழஞ்சரை இதன்விளிம்பிற்றிரைத்த வெள்ளி பதினூறு கழஞ்சேமுக்கால். திருவொதாரமாலை பொற்பூபதிஞறி ஞல் வு உ மாறிபொன் பன்னிருகழஞ்சு. திருவுத்தரியம் (க) ஞல் வு உ மாறிபொன் இருகழஞ்சே நாலுமஞ்சாடியும் ஆறுமா. திருப்பி றை (க)ஞல் வு முக்கால் மாறி பொன் முக்கால். கன்னபுஷ்பம்(௩) ஞல் வு பொன் இருகழஞ்சேகால். திருப்பட்டிகை பலகை (க)ஞல் வு வ. மாறிபொன் அறுபத்து நாற்கழஞ்சரை இதன்விளம்பிற்றிரைத்தவெள்ளி பத்தொன்பதின் கழஞ்சரையே நாலுமஞ்சாடியும் ஆறுமா. இதனுள் பலவிடத்துந்தைத்த இடை ஆறரைப்பலம். அன்னியுடையாரிட்ட பொற்பூ (க) ஞல் பொன்கழஞ்சு, இது கோத்த வெள்ளிக்காறை(க)ஞல் வெள்ளி அரைக்கழஞ்சு (உ௰க)வது மாளிகைமூல பண்டாரத்தினின்றும் வந்த திருப்பட்டம் (க)ஞல் பொன் ஏழுகழஞ்சேகால். திருப்பள்ளியறை நாச்சியாருக்கு சாத்துகிற சிவதாலிசமமணி (க)ஞலும் பொன் இரண்டுமஞ்சாடியும் நாலுமா. இதுமாற்று வு உ. இது கோத்தகாறை (க)ஞல் வெள்ளிக்கால் திருமங்கலநாண் சமதாலி சமகொக்குவாய் ப உ கண் உட்பட ௬ மாறி பொன்கழஞ்சு. அரவாபரணதேவர்க்குச்சாத்தியருள உ௬வதுபொதி மங்கலமுடையான் இராசாண்டாஞன சோழவிச்சாதரப் பல்லவதரையர் செய்வித்த திருவாசிகை (க) ஞல் வப மாறி பொன் இருநூற்றைம்பத்து ஐங்கழஞ்சேகாலே மூன்றுமஞ்சாடியுமஞ்சுமா.— அபிஷேகம் (க) ஞல் ௬உ மாறிபொன் பதிஞறுகழஞ்சரை. இத்தேவர் திருவாரம் (க) ஞல் ௬வ மாறிபொன் நாற்கழஞ்சே முக்காலே இரண்டுமஞ்சாடியும் ஏழுமா. இவர் திருத்தோடு (உ)ஞல் வு வ. மாறிபொன் முக்கழஞ்சு. இவர் நாச்சியார் அபிஷேகம் (க)ஞல் வு மாறி பொன்பதிஞன்கழஞ்சு. இவர்திருவாரம்(க)ஞல் வு உ மாறி பொன் இருகழஞ்சேகால். இவர் தோடு (உ)ஞல் வு உ மாறி பொன் இருகழஞ்சு திருவட்டமணி (உச) ஞல் வு உ மாறி கழஞ்சரை. திருவட்டமணிவடம்(க)ஞல் மணி ௬0 ஞல் வு உ மாறி பொன்கழஞ்சே இரண்டுமஞ்சாடியும் நாலுமா. திருவட்டமணிவடம் (க)ஞல் மணி ௬Cஞல் வு மாறிபொன் ப முந்திரியின் கீ ஒ திருவட்டமணிவடம் (க)

ஞல்மணி சூ௦ஞல் வு மாறி பொன்இருகழஞ்சு. திருச்சிலம்பு ஒரணையி ஞல் வு ஐ. மாறி பொன் நாற்கழஞ்சு. விறைதவஞ்செய்த நாச்சியாரு க்கு சாத்தியருள திருவையாவுடையாரிட்ட திருவபிஷேகம் (க) ஞல் க மாறி பொன்பதினைங்கழஞ்சரை. திருநெற்றித்திரணை (க) ஞல் வு ற மாறிபொன் ஐங்கழஞ்சேகால். திருமங்கல நாண்சமதாலி கடைத்தோறுட்பட வு ற மாறி பொன்கழஞ்சு. திருத்தாவடம் (க) ஞல் மணி (சூக) ஞல் க மாறி பொன்கழஞ்சு. திருக்கைச்சரி (சூ) ஞல் ௬ மாறி பொன் இருகழஞ்சே முக்காலே மஞ்சாடி. வெள்ளி மணி ௩௫ ஞல் வெள்ளி முக்காலே இரண்டுமஞ்சாடியு மூன்றுமா. வெள்ளிக்காறை (க) ஞல் வெள்ளி முக்காலே இரண்டு மஞ்சாடி இதில் கோதகதாலி(க)ஞல் வு ற மாறிபொன் அரைக்கழஞ்சு. திரு த்தோடு (உ) ஞல் வு ஐ மாறிபொன் கழஞ்சரை. திருவாரம் (க) பொன் ...... .... .. . ... சிரச்சக்கரம் (க) ஞல் க மாறி பொன் இருகழஞ்சு. திருக்கண்டாவளி (உ) ஞல் க மாறிபொன் மு க்கால் உடையார்க்கு திருமஞ்சனத்துக்குச் சாத்தியருள உடையார் சோழவிச்சாதரப் பல்லவதரையர் இட்ட திருவுத்தரியம் (க) ஞல் முக்காலே நாலுமஞ்சாடியும் ஆறுமா. மாற்றுகாசுமித்திருவாசிகைப் புரிமத்தில் பாம்பு (க) ஞல் பொன்கழஞ்சேமுக்காலே இரண்டுமா.

2. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் குலோத்துங்க சோழதேவர்க்குயாண்டு இருபத்தெட்டாவது இராசேந்திர சோழ வளநாட்டுப் புறங்கரம்பைநாட்டுத் திருக்களருடைய மாதேவர்க்கு அமாவாசி அரவாபரணதேவர் திருவிழாவெழுந்தருளுகைக்கு அற் றைநாளில் தேவர் பெரும் திருவமுது செய்விக்கவும் பிள்ளையாருக் கு திருவமுதுசெய்விக்கவும் ஸ்ரீ மூலத்தானமுடையார் அமுதுசெய் தருளவும் அற்றைநாளில் தேவரடியாரை அமுதுசெய்விக்கவும் நெ ன்மலிநாட்டு தண்ணீர்க்குன்றமுடையார் சிவன் தில்லைநாயகன் பக் கல்கொண்ட நம்பிசெய்த உபயமாவது இக்கோயில் சிவப்பிராம ணர்களில் திருவெண்காடன் பட்டனும் காசியவாக்காருயிலமுளை ச்சானும்-கௌசிகன் ஆதித்தன் ஆடவல்லானும் உள்ளிட்ட சிவப் பிராமணரும் இவர்பக்கல் இவ்வாட்டை வைகாசி மாசத்து நாங்கள் பொலியூட்டுகொண்டமுதல் நெல்லு அறுபதின் கலத்துக்கு கலத்

துக்கு முக்குறுணியாக பலிசைப்பொலியும் நெல்லு பதினைஞ்சுகல த்துக்கும்செலவாக அமாவாசிதோறும் கலனே முக்குறுணியாக சந் திராதித்தவரைமுகசின்றேமே செயக்கடவோமாகவும். இவ்வூர் அரவாபரண நாடு நீதபாதமான திருச்சிற்றம்பலக்காலான் அரவா பரணன் இயபாநாதனம் ஆடவலான் அன்புருவனான பத்தகனாயக பிச்சனும் அரவிகுதக்குரகனான நாற்பத்தெண்ணாயிரப்பிச்சனும் கத் தன்கங்கைகொண்டானான சிவசரணசேகர மூவேந்த வேளானும் இவை சிவன் தில்லைநாயகன் பக்கல் நாங்கள் உபயம்பண்ணிப்பொலி யூட்டுக்கொண்ட நெல்லு நூற்று இருபதின் கலத்துக்கும் கலநெல் லுக்கு முக்குறுணியாக ஓராட்டை நாளைக்கு பலிசைநெல்லு முப் பதின்கலம் அமாவாசி ஒன்றுக்கு நெல்லு இந்த கலநெல்லில் பதக் காக தேவர் அடியார் மூலமங்கலம் அமுது செய்விக்கக்கடவோம் எங்களில் அனைவரும் சந்திராதித்தவரை ஸ்ரீமாஹேச்சுரர் பிகண பெற்றமாஹேசுவரக்காணியாசிறக யினவாரெழுக.

3. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் ஸ்ரீஇராஜராஜ தேவர்க்குயாண்டு இருபத்தெட்டாவது நானூற்றெண்பதில் இராசே ந்திரசோழவளநாட்டுப் புறங்கரம்பைநாட்டுத் திருக்களர் மூளைத்த மாதேவர்க்கு அமாவாசி எழுந்தருளி தேவரடியாரை அமுதுசெய்வி க்கச் சுங்கந்தவிர்த்தருளின குலோத்துங்க சோழதேவர்க்கு இரு பத்தெட்டாவது தண்ணீர்க்குன்றமுடையான் சிவன்தில்லைநாயகன் பக்கல் இத்தேவர் திருமடைக்கத்திருக்கும் ஆண்டார்கள் உபயமாக் கொண்டநெல்லுக்கு அமுது செய்விக்கும்படிக்கு முன்புவெட்டின செப்பேட்டுப்பட்டியில் உபயங்கொண்டு அமுதுசெய்வித்துவருகிற ஆண்டார்களில் ஆண்வழியற்றுப் பெண்வழியான கொத்துக்கு, அமுதுசெய்விக்கும்படி கனகராயரும் ஸ்ரீமாஹேசுவரர் அறுதிபண் ணுகிற இடத்துப்பொலியூட்டுப் பெண்வழியும் வருமென்று ஸ்ரீ மா ஹேசுவரர் நிச்சயித்தமையில் இப்படிச்சம்மதித்துப் பெண்வழியி லார் இட்டதிட்டப்படி ஆடவல்லான் பூர்வசிவன் பத்தகநாயகப் பிச் சன்மகளைக்கொண்டகண்பெற்றான், மன்றுநிறைந்தானான், அன்பர்க் கடியான் அமுதுசெய்விக்கும்பேர் மூன்று. இவன் கொழுந்திமகன் தேவன் மாரன் உள்ளிட்டார் அமுதுசெய்விக்கும்பேர் மூன்று.ஆண்

வழி திருச்சிற்றம்பலக்காலான் அமுது செய்விக்கும் ஐஞ்சுகூறிட்டி ரண்டுபேரால் போட எந்நாளும். அமுதுசெய்விக்க.

ச ஸ்வஸ்திஸ்ரீ

திருமன்னி வளர விருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந்
தன் பெருந் தேவிய ராகி யின்புற
நெடிதிய லூழியு ளிடைதுறை நாடுந்
தொடர்வன வேலிப் படர்வன வாசியுஞ்
சுள்ளி சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையு
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடகமும்
பொருகட லீழத் தரசர்த முடியு
மாங்கவர் தேவிய ரோங்கெழின் முடியு
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியு மிந்திர னாரமுந்
தெண்டிரை யீழ மண்டல முழுவது
மெறிபடைக் கேரளன் முறையிற் சூடுங்
குலதன மாகிய பலர்புகழ் முடியுஞ்
செங்கதிர் மாலையுஞ் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல்பழந் தீவுஞ்
செருவிற் சினவி யிருபத் தொருகா
லரசுகளை கட்ட பரசுராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதி
யிருத்திய செம்பொற் றிருத்திய முடியும்
பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்
டொளித்த சயசிங்க னளப்பரும் புகழொடும்
பீடிய லிரட்ட பாடி யேழரை
யிலக்கமு நவநிதிக் குலப்பெரு மலைகளும்
விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமு
முதிர்வட வெல்லை மதுரைமண் டலமுங்
காமிடை தருவள நாமணைக் கோணையும்
வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்

பாசடைப் பழன மாசுணி தேசமு
மயர்வில்வண் கீர்த்தி யாதிநக ரகவையிற்
சந்திரன் றொல்குலத் திந்திர தனை (யனை)
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையுங்
கிட்டருஞ் செறிமிளை யொட்ட விஷயமும்
பூசுரர் சேர்நற் கோசல நாடுந்
தன்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரனை முரணுகத் தாக்கித்
திக்கணை கீர்த்தித் தெக்கண லாடமுங்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமுந்
தொடுகழற் சங்கு வொட்டல் மஹிபாலனை
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி
யொண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமு,
நித்தில நெடுங்கட லுத்திர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையு
மலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசயோத் துங்க பன்ம
னாகிய கடாரத் தரசனை வாகையம்
பொரு கடல் கும்பக் கரியொடு மகப்படுத்
துரிமையிற் பிறக்கிய பெருநிதிப் பெருக்கமும்
ஆர்த்தவ னகநகர்ப் போர்த்தொழில் வாயிலில்
விச்சா திரத்தோ ரணமு மொய்த்தொளிர்
புனைமணிப் புதவமுங் கனமணிக் கதவமு
நிறைசீர் விசயமுந் துறைநீர்ப் பண்ணையும்
வன்மலை யூரெயிற் றொன்மலை யூரு
மாழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமுங்
கலங்கா வல்வினை யிலங்கா சோகமுங்
காப்புறு நிறைபுனன் மாப்பப் பாளமுங்
காவலம் புரிசை மேவிலிம் பங்கமும்

விளைப்பைந் துறுடை வளைப்பந் தூறுங்
கலைத்தக் கோர்புகழ் தலைத்தக் கோலமுந்
தீதமர் வல்வினை மாதமா லிங்கமுங்
கலாமுதிர் கடுந்திற லிலாமுரி தேசமுந்
௬௫. தேனக்க வார்பொழின் மாநக்க வாரமுந்
தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமு

மாப்பொரு தண்டாற் கொண்டகோப் பரகேஸரிவர்மரான உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழதேவர்க்குயாண்டு இருபதின் எட்டாவது [அருமொழிதேவர் நாட்டுப்புறங்கரம்பைநாட்டு ஸங்கூருக் களத் திருக்களர் மஹாதேவர் தேவதானம் நிலம் இறையிலியாகவும் வந்த நிலவளையரசுற்றும் சிதக்குறவு உள்ளடங்கா வீரபாண்டியனறலையும் சோலை சாலேயும் லங்ககயும் தண்டார் கொண்டசரராஜகேசரி வர்மரான உடையார் ஸ்ரீ ராஜ ராஜதேவர்க்குயாண்டு உ௰ ஆவதுஅத ரமாநாகநாயகனுன மஹிபால குலகாலப் பிராமணருக்குருமணப்பிச்சன் உடையார்க்கு முன்பு திரவார்திரைசெயும் பிராமணந்தேவனும் தாமண்டப் பிச்சன் சேதனி வந்தங்கொண்டு செயும்பிராமணன் தாவனுமாக இரவாருள X கு ஜ கவ ஆகள ஒ ரரரரரய ரரஐயா விட்டநி X வகுத்தறுப்பு திருவாணை ||o]

இவ்விஷயங்கள் செப்பேடு ஐந்திலிருந்தெடுக்கப்பட்டன. பிராசெட்டுக்குள்ளடங்கியவை செப்பேட்டில் விளக்கமாகத்தெரியவில்லை.

## சிலாசாதனங்கள்

### சுவாமி சந்நிதி பெரியமண்டபம் உட்பக்கம் மேலைச்சுவர் வடபக்கம்.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் குலோத்துங்க சோழதேவர்க்குயாண்டு ௩வது இராஜேந்திர சோழவளநாட்டுப்புறங்கரம்பைநாட்டு உடையார் திருக்களருடையார் கோயிற்காணியுடைய சிவப்பிராமணரில் கௌசிகன் ஆடவிடங்கப்பட்டனும் இக்கோத்திரத்துப் பஞ்சவன் மஹாதேவிப்பட்டனுள்ளிட்டோமும் அர

வாபரணப்பட்டனுள்ளிட்டோமும் நியாயபரிபாலப்பட்டனும் ஆலாலசுந்தரப்பட்டனுள்ளிட்டோமும் சிவபட்டனும் மூவாயிரப்பட்டனுள்ளிட்டும் இவ்வனைவரும் இக்கோயில் ஸ்ரீ மாஹேஸ்வரக்கண்காணி சிறுகுடையான் மறைதேடும்பொருள் பேரம்பலக்கூத்தர் பக்கல் நாங்களுடையமாகத்திருநந்தாவிளக்கெரிக்கக் கைக்கொண்ட காசு-ரு-இக்காசு நூறுக்கும் நாள் ஒன்றுக்கு பொலிசையால்வந்த எண்ணெ யாழாக்குக்கொண்டு வித்தமொரு திருநந்தாவிளக்குச் சந்திராதித்தவரை செலுத்தக்கடவோமானோம் இவ்வனைவோரும்.

மஹாமண்டபம் தென்புறம் வெளிச்சுவர்.

(2) ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்குயாண்டு சவது இராஜேந்திர சோழவளநாட்டுப் புறங்கரம்பைநாட்டு பிர்மதேயம் ஸ்ரீ குலோத்துங்க சோழச் சதுர்வேதிமங்கலங்கடக நாயிறுமுதல்.........கிராம காரியம் செலுத்துகிற கூட்டப்பெருமக்கள் எழுத்து இந்நாட்டுத்திருக்களருடையார் கோயிலில் தானத்தார் கண்டு இந்நாயனார் கோயிலில் கருணாகரத்திருமண்டபத்துக் கீழைத்திருவாசல் தென்பக்கம் எழுந்தருளியிருக்கும் மூவாயிர விநாயகப்பிள்ளையாருக்கு (ச)வது முதல் ஊர்க்கீழிறையிலியாகவிட்ட எங்களூர்ப்பிடாகை திருச்சிற்றம்பலநல்லூர் ஸ்ரீ பிரும்மாவாஸ்துவுக்குக் கிழக்கு, ராஜாதிராஜவாய்க்காலுக்குத் தெற்கு மூன்றுங்கண்ணாற்றூரறலாத்துண்டத்துவடக்கடைய நிலமூன்றுமா நீக்கி இதன்தெற்கு நாங்கள்நீர்வார்த்தநிலம் இரண்டுமா. இந்நிலம் இரண்டுமாவால்வந்த மடக்கு ஊரிலோரட்டும் இறுக்கக்கடவோமாகவும் ; இந்நிலத்தால்வந்த மடக்குக்கு ஆட்டாண்டுதோறும் ஊரமாயிந்தக்கடமையிலே அந்தராயத்துக்கு இவ்வூரில் தேவர்கள் சிவநாமத்து எழுதினநிலங்கள் அந்தராயம் இறுத்தபடி இறுத்து அல்லாதது பிள்ளையாருக்குத் திருப்படிமாற்றுக்கு உடலாவதாகவும்; இந்நிலம் இவ்வாண்டுமுதல் கைக்கொண்டு இந்த நியோகப்படி கல்வெட்டிக்கொள்ளக்கடவதாகச் சொன்னோம்.

இதன் மேற்கு.

ஸ்வஸ்திஸ்ரீ இராஜேந்திர சோழவளநாட்டுப் புறங்கரம்பைநாட்டுத் திருக்களருடையார் கோயிலில் தேவகன்மிகளுள்ளிட்ட பலமணியந்தக்கரமாகக்கண்டு உடையார்கோயில் ஸ்ரீமாஹேச்வரக்

கண்காணியும் திருப்பதிகக்காணியும் நம்தேவாரத்துக்குத் திருப் பதிகம்பாடும் பெரியான்றனித்தேடும் பொருளான் அருளங்கயினை னுக்கு அவன் வம்சத்தார்க்கும் காணியாகக் கண்காணிக்கச்செய்யக் கடவன்; இவனிறுத்தி னவன்கண்காணிப்பட்டுப் பட்டுச்செய்யப் பண்ணி இப்படி கணிவட்டம்பண்ணுக; இத்திருவாய்மொழிந்தரு ளின திருமுகப்படி. சுவஸ்தி.

## இதன் மேற்கு மேல்

4. ஸ்வஸ்திஸ்ரீ மஹாமண்டலேஸ்வரன் அரியராயவிபாடன் பாஷைக்குத்தப்புவராதகண்டன் மூவராயர்கண்டன் ஸ்ரீ வீரஅரி ஹரஉடையார் குமாரன் ஸ்ரீ வீர விருப்பண்ணஉடையார் இராச்சி யம்பணிணியருளாநின்ற சகாப்தம் ௲...... மேல் செல்லாநின்ற ஸ்ரீமுகவரு மகரநாயிற்று அமரபக்ஷத்து சோதியும் நவமியும்பெற்ற ஞாயிற்றுக்கிழமை நாள் இராஜேந்திர சோழவளநாட்டுப் புறங்கர ம்பைநாட்டுத்திருக்களருடையார் அடைந்தார்க்கருள்செய்யாநின்ற நாயனார்கோயில் திருக்களர் முளைத்தஉடையார் திருமடத்து முதலி களும் தனிமாஹேசுரரும் உள்ளுக்கோயில் மாஹேசுரரும் கைக் கொள்முதலுக்கு..................மந்தாகாரரும் எல்லோரும் நிறை வறநிறைந்து குறைவறக்கூடிக் கருணாகரத்திருமண்டபத்தில் வந் திருந்து ஜெயசிங்க குலகாலவளநாட்டுத் தானவநாட்டுக் டிகண் யூரில் காணியுடைய ஆண்டார்களில் மண்ணகமுடையான் வனத் தான திருநட்டப்பெருமாள் முன்னாள் பிரசோற்பத்திவருஷம் க்ஷாமத்திலே இக்கோயிலுக்கு முதலும் இந்நாயனார் பூசையும் சூனி யமாய்த்திருப்பணியும்இன்றிப் பரிகரமுங்குலைந்து போகையில் இந் நாளிலே இத்திருநட்டப்பெருமாள் தன்னுடைய முதலிலே நானூறு பணமும்இட்டுப் பூசையும் திருப்பணியும் நடத்திப் பரிகரமுஞ்சேர் த்துக் குடியும்அமர்த்திப் பயிர்செய்வித்து நடத்திப்போதுகையில் உடையார் அடைந்தார்க்கருள்செய்த நாயனார் திருவாய்மலர்ந்தருளி சண்டேசுவரத்திருமுகங்கொடுத்தருளின மாடாபத்தியம், உட்கண் காணி, இராசியம், எழுத்து, இலச்சினை இவையுங்கொடுத்து இவ னுக்குக்கொடுத்த மனையாவது சந்நிதித்தெருவில் தெற்குவாஸ்து முடிந்தமனையும இந்தமனைக்குஉரித்தான புழைக்கடைஃதறகுஒடை யளவும் இதில்மேனோக்கிய மரமுங் கீழ்நோக்கிய கிணறும் மற்றும்

எறப்பிய பட்டசமூறகப்பிராப்த்தியும் சந்திராதித்தவரையும் காணியாட்சியாகப் பெறக்கடவனுகவும்; இந்தக்காணியாட்சி இவனுக்கு தானுதியும் விற்று ஒற்றிக்கிரையங்களுக்குரித்தாவதாகவும் ; இப்படிக்கு நாயனுர் அடைந்தார்க்கருள்செய்த நாயனுர் திருவாய்மலர்ந்தருளி சண்டேசுவரத் திருமுகங்கொடுத்தருளினது ஸ்வஸ்திஸ்ரீ

இதன் கீழ்

5. ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்க்குயாண்டு ௰உ-வது திருக்களரிலிருக்கும்வெள்ளாட்டி சோறின்செல்கலேன் திருக்களருடைய மஹாதேவர்க்கு சனியெண்ணெய்க்காப்புச்சாத்தப்பொலியூட்டு இக்கோயிலில் சிவப்பிராம்மணர் உய்யக்கொண்டான்பட்டனும் மஹாதேவப்பட்டனும் தருணேந்துசேகரப்பட்டனும் மூவாயிரசோகியும் அரவாபரணப்பட்டனும் நாற்பத்தெண்ணுயிரப்பட்டனும் இவ்வனைவரும் மேயசனிதோறும் ஆழாக்குத்திருவெண்ணெய்க்காப்பும் மஞ்சள் நெல்லிமாக்காப்பும் திருவமுதரிசி நானுழியும் கறியமுது ஐம்பலமும் நெய்யரைப்பிடியும் ...... ரூ ற த......... பிடும்தயிர் உரையும் பாக்கு நாலும் இலைஎட்டும் உப்பும் சந்திராதித்தவரை செலுத்தக்கடவர்களாகக் காசுஐஞ்சும் கொடுத்துப்பொலியூட்டுச் செய்தேன். சோறின்செல்கலேன்.

இதன் மேற்கு மேல்.

6. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்கிரவர்த்திகள் ஸ்ரீராஜராஜதேவர்க்குயாண்டு ௰௩-வது இராஜேந்திரசோழவளநாட்டுப் புறங்கரம்பைநாட்டுத் திருக்களர் மூலைத்தநேவர்கேயில் காணியுடைய சிவப்பிராம்மணர் கௌசிகன் அரவாபரணப்பட்டனும் இராராப்பட்டனும் சிறுபட்டனும் கொதுகுலப்பட்டனும் உய்யக்கொண்டான்பட்டனும் மூவாயிரப்பட்டனும் பஞ்சவன்மாதேவிப்பட்டனும் இவ்வனைவோரும் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மேலமலைப் பழையனுருடையான் வேதவன உடையான் கருணுகரத்தேவராண்டார் கோனுர் பக்கல் நாங்கள் பழையனூர் உபயமாகத் திருக்களரில் விளக்கெரிக்கைக்குக்கைக்கொண்ட காசு நூறு இக்காசு நூறுங்கைக்கொண்டு இக்காசால்வந்த பலிசைக்கு நித்தம் உழக்கெண்ணெய்கொண்டெரிக்குந் திருநுந்தாவிளக்கொன்றுஞ் சந்திராதித்தவரை எரிக்கக்கடவோமானேம் இவ்வனைவோரும்.

## இதன் கீழ்.

7. ஸ்வஸ்தி ஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வரன் ஆரியராசவிபாடன் பாஷைக்குத்தப்புவராதகண்டன் மூவராயர்கண்டன் ஸ்ரீவீரபூபதி உடையார் பிருதுவிராச்சியம்பண்ணி யருளாநின்ற சகாப்தம் தரு௱சயரு-ன்மேல் செல்லாநின்ற சார்வரிஞு மிதுனநாயிற்று அமரபக்ஷத்துப் பிரதமையும் மங்களவாரமும் பெற்ற மூலத்தினம் இராஜேந்திர சோழவளநாட்டுபுறங்கரம்பைநாட்டுத் திருக்களர் நாயனார் அடைந்தார்க்கருள்செய்யாநின்ற திருக்களருடையார்கோயில் முதலிகளும் மாஹேசுரரும் தேவகன்மிகளும் வைகாசித்திருநாளில் திருத்தேருடையான் திருமண்டபத்தில் நிறைவறநிறைந்து குறைவறக்கூடி ஆதிசண்டேசுரதேவர் திருவாய்மலர்ந்தருளினபடிக்கு கண்ணப்பெருமான் மானங்காத்தபிச்சற்குப் பலமுதல் கண்காணி காணியாட்சிகொடுத்த இந்நாள்முதல் இக்கோயில் பலமுதல் கண்காணித்துடைத்தும், இலச்சினையும், இராசயமும் இவர்க்குக் காணியாட்சியாகக்கொடுத்தருளினமைக்குக் கோயிலில் பெரும்பலசுவந்திறங்களும் தெற்கில்திருவீதியில் இவர்க்கு சாமநாயகமாகக்கொடுத்த மனைக்குக் கிழக்குமனை ஒன்றும் மனைப்புழக்கடையும் மேல்நோக்கியமரமும்கீழ்நோக்கிய கிணறும் ஸர்வமான்யமாகச் சந்திராதித்தவரையும் அனுபவிக்கக்கடவராகவும்.' ஒற்றிவிக்கிறையங்களுக்கும் உரித்தாகக்கோவிலுக்குத்திருப்பணி நடாத்தில்ஒடுக்கினவெள்ளைபணம்உ௱ இப்பணம் இருநூறும்கொண்டு ......... நடத்த செலவப்ப...........மடத்தில் முதலிகளுமாஹேஸ்வரரும் உள்ளூர்(தான)த்தாரும்கோயிலிலுள்ள பரிகரத்தாருங் கல்வெட்டிக்கொடுத்தமைக்கு இது பன்மாஹேசுவரர் இரக்ஷையாகக் கல்வெட்டினேன். இவ்வூர் காணியுடைய சிற்பரில் பத்தராவி சோழமண்டல ஆசாரியன் எழுத்து.

## அர்த்தமண்டபம் தென்புறம் வெளிப்பக்கம்.

8. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கிரவர்த்திகள் ஸ்ரீ இராஜேந்திர சோழதேவர்க்கு யாண்டு உ-வது இராஜேந்திரசோழவளநாட்டுப்புறங்கரம்பைநாட்டுத் திருக்களருடைய நாயனார்கோயிற் காணியுடைய சிவப்பிராம்மணரில் கௌசிகன் ஆடவிடங்கப்பட்டனுள்ளிட்டு சிவநாமதேவிபட்டனுள்ளிட்டோமும் அரவாபரணப்பட்டனுள்ளிட்டோமும் மூவாயிரப்பட்டனுள்ளிட்டோமும் காசிபன்

நாற்பத்தெண்ணுயிரப்பட்டனுள்ளிட்டோமும் இவ்வனைவோரும் இந்நாயனுர் திருக்களர்முளைத்த உடையார் திருத்துறைப்பூண்டியுடையார்கோயில் மடபதி திருத்துறைப்பூண்டியுடையானுந் திருமாளிகைப்பிச்சர் பக்கல் நாங்கள் உடையார் திருக்களர் விளக்கெரிக்கைக்குக்கொண்டகாசு -ரூய-இக்காசு அறுபதுங்கைக்கொண்டு ஆண்டுதோறும்வந்த பொலிசைகொடுத்த உழக்கு எண்ணெய்கொண்டு எரிக்குந் திருநந்தாவிளக்கு சந்திராதித்தவரை எரிக்கக்கடவோமானேம் இவ்வனைவரும்.

## மஹாமண்டபம் தேன்பக்கம் வாசற்கீழ்பால் திரணைவரி.

9. ஸ்வஸ்திஸ்ரீ மஹாமண்டலேசுவரன் ஆரியராஜவிபாடன் பாஷைக்குத் தப்புவராதகண்டன் மூவராயகண்டன் பூர்வ தக்ஷிண பச்சிம ஸமுத்திராதிபதி ஸ்ரீ விருப்பண்ணஉடையார் பிருதிவிராச்சியம்பண்ணியருளாநின்ற சகாப்தம் ௲ருளசயிஎ மேல் செல்லாநின்ற சார்வரிவருஷத்து மகரநாயிற்று பூர்வபக்ஷத்து உத்திரமுந் துவாதசியும்பெற்ற வெள்ளிக்கிழமைநாள் திருக்களர்உடையார் அடைந்தார்க்கருள்செய்த நாயனுர் திருவாய்மலர்ந்தருளி சண்டேசுவரத்திருமுகக்காணி கொடுத்தருளின இக்கோயிலுக்குப் பூர்விகக்காணியுடையவர்கள் பூருவிகண்கணைத்தரும? இல்லாத தொழிலாளியில் இந்தநாளில் இக்கோயிலுக்குப் பூஜகர்இன்றி வீரப்பிரதாபவளநாட்டு திரிபுவனமாதேவியில் ஹாரு ஆஜி ஸ்ரீநாராயணஸ்வாமுடையான் விசுவரூபபண்டிதன் மன்றிற்குனிக்கும் பெருமாளுக்கு பூஜைக்காணியும்சைவாசாரமைக்கும்கொடுத்தருளினபொன் இருபதும் இவனுக்குக்கொடுத்தருளினமனையாவது சந்நிதிகருக்கீழைச்சரகில் தலையில் வாஸ்துமுடிந்தமனையும் இம்மனைக்குரித்தான மற்றுமுள்ள பிராப்தியும் சந்திராதித்தவரையும் பெறக்கடவனுகவும்; இந்தக்காணியும் மனையும் இவனுக்கு தானாதிமனவிற்று ஒற்றிக்கிரையங்களுக்கு உரித்தாகக்கடவதாகவும். இப்படிக்குச்சண்டேசுவரநாயனுர் திருமுகங்கொடுத்தருளினது. ஸ்வஸ்திஸ்ரீ.

## மஹாமண்டபம் வடபுறம் வெளிப்பக்கம்.

10. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜதேவர்க்குயாண்டு ஆறுவதின் எதிராமாண்டுளால் எயகல் இராஜேந்திரசோழவளநாட்டுப்புறங்கரம்பைநாட்டு பிர்ம்மதேயம் ஸ்ரீகுலோ

த்துங்கசோழச்சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறிப் பெருமக்கள் எழுத்து இந்நாட்டு தென்மலிநாட்டுத் திருக்களரில் உடையார் மூளைத்த*நாயனார்கோயில் தானத்தார்கண்டு இந்நாயனார்கோயில் ஆனையமாக நாகக்குடையார் மண்டையாழ்வார் எழுந்தருளுவித்த உடையார் திருவாலவாயுடையார் உலகுடையபெருமாள் திருமேனி கல்யாணத் திருமேனியாகவும் ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷிதமாகப்? பூசைகொண்டருளவும்இந்நாயனார்க்குபூசைக்கும் திருவமுதுபடிக்கும் உடலாகப்பெரியதேவர்க்கு முப்பத்தொன்பது ஸபையார்க்கு? கருணாகரப்பிரியன் அனுபோகம் எழுதி ஸபாவினியோகத்துக்குடலாக இவன்காட்டின நெல்லாலடக்கிலே இவ்வூர்ப்பிடாகை திருச்சிற்றம்பலநல்லூரில்காவனூர்கிழவன் ஆட்கொண்டான் மூளைத்தான் பக்கல் இந்நாயனார் திருநாமத்துக் காணியாக விலைகொண்ட பிரமாணப்படி ஸரஸ்வதி வதிக்குக்கிழக்கு இராஜாதிராஜ வாய்க்காலுக்கூத் தெற்கு ருயசூ சதுரத்துண்டத்து கண்டெதுஉட்பட நிலம் மூன்றுமாமுக்காணிமுந்திரி; இதில்தென்கிழக்கடைய குளமும் கரையும் நிலங்கலந்தவாற்றுல் நீர்நிலை செம்பாதிஉட்பட நிலம் (௨) நீக்கி நிலம் மூன்றுமாவாரை முந்திரி; சூரு சதுரத்து வடமேற்கடைய நிலம்(ப) இதில் வடக்கடைய அரைமாமுந்திரியின் கீழரையே இரண்டுமாவும் ஆறு நிலம் நாலுமா அரைக்காணியின் கீழரையே இரண்டுமாவினால் தரப்படி மடக்கு நிலம் அரைக்காணி இம்மடக்குநிலம் அரைக்காணியும் இவ்வாண்டு பசானமுதல் இந்நாயனார்க்கு சந்திராதித்தவரையும் இறையிலியாகக் கொடுத்தோம்; இம்மடக்குநிலம் அரைக்காணியும் இந்நியோகப்படியே கல்வெட்டிக்கொள்ளப்பண்ணுகவென்றுஎழுதி ஊர்க்கணக்கு கருணாகரப்பிரியனும் பெருங்குறிப்பெருமக்களும் எழுத்திட்டது.

## இதன் கிழக்கு.

11. ஸ்வஸ்திஸ்ரீ கோ மாறவன்மா திரிபுவனசக்கிரவர்த்திகள் குலசேகரதேவர்க்குயாண்டு சக-வது பங்குனிமாதம் மூன்றுந்திய்தி நாள் இராஜேந்திர சோழவளநாட்டுப் புறங்கரம்பைநாட்டு அகரம் பிரும்மதேயத்தாரும் நாட்டாரும் எழுத்து: இந்நாட்டு எழுக்குடிமக்களுக்கு நாற்பத்தொன்றுவதுமுதல் உடைமையும் கூட்டும் வர்க்கமும் கொள்ளும்படிக்கு எழுபத்தொன்பதுவளநாட்டுப் பதி னெண்பூமிப்

பூம்புகாரகர் கற்பகச்சமையச் சக்கரவர்த்திகளுக்குக் கல்வெட்டிக் கொடுத்தபரிசாவது களப்பாள் அகரம் ஸ்ரீ சுத்தவல்லி சதுர்வேதி மங்கலமும் முடிவழங்குசோழசதுர்வேதிமங்கலமும் சயிக-வதுமுதல் கொள்ளும்படி புறக்கடமை, மாத்தால்தருக்கும் ஒரு பூ குடிப்பற் றுக்கும் ஒருபணமும் மறுவுக்கும் குடிக்கடையீட்டுக்கும் அரைப் பணமும் (ந)ாட்டுகள் வர்க்கத்துக்கு மாக்கலமும் புறவெட்டி கொட் டைக்கூலியுள்பட காா்மறுவும் ஒரு பூ குடிப்பற்றுக்கும்மாத்தால் கல நெல்லும் நொடுத்து முதலானநெல்லுக்குப் பிடாகைதோறும் கை விலைப்படிக்கு நாடோறும் தரவெழுதவும். இப்படிச்செலவானபண த்துக்குப் பணமொன்றுக்கு நாழுழி- உ படித்துக் கணக்குப்பார்க்க வும், கணி காணிநிலத்துக்கு நிலத்துக்குப்பொ......லமாத்தால் நாலில்ஒன்றுகழித்து மேல்வாரத்துக்கூட்டி மேல்வார ஐ பெருங் குடிகள் விலக்கவும்; நெட்டாள் ஊஞ்ஞைபாதிப்படியும் சயிகவது வரை கணக்குப்பார்த்து உடையத்தலையகங் கூட்டாமல் கணக்குப் பார்த்துத் தொகையிடுதரவும்; மனைப்பணம் மாப்பணத்துவரவும் ஆண்டுதோறும் வைக்காமல் இதநோக்கையிடுதரவும்; ? நாட்டுச்சம் மாதந்தவிரவும்; அடைப்பு கொரடு ஒழியவும்; படையலனவுடன் அந் தாதொழியவும் இதன்வகையும் துண்டத்தூர்வகையும் நாணலூர் வகையும் வரிசைபுறநலத்துக்கு அணியநிலத்துக்கும் தணக்கும் ஒரு பூ. குடிப்பற்றுக்கும் குடிமைக்கும் மாத்தால் ஒருபணமும் பணமாக் கொள்ளவும்; மறுவுக்கும் கடையீட்டுக்கும் குடிமைக்கும் மாத்தால் அரைப்பணமும் கொள்ளவும். இவை திருச்சிற்றம்பலமுடை யான் பட்டர் எழுத்து. இவை நாரசிங்கன் திருச்சிற்றம்பலபட்டர் எழுத்து.

பெரும்பலமருதூர்வகைக்கு சயிக-வது கார்முதல் வரிசைப்படி யும் புளளிப்படியும் மேல்வாரமுதலாய நெல்லுக்குக் கலத்துக்கு நா ழுழி நெல்லு கொள்ளப்புறக்கடமைக்குக்காருக்கும் ஒரு பூவுக்கும் மாத்தால் ஒரு பணங்கொள்ளவும்; மறுவுக்கும் கடையீட்டுக்கும மாத் தால் அரையாக வந்தபாரங்கொள்ள அரிசியெடுத்த ஆளுக்குச்சாதம் செலவிடவும்; படையிலன் வழிக்கூடாதொழிய இந்நாடி மற்றுள்ள வை மற்றுள்ளவகைக்கு அற்றபடி. இவைசிங்கப்பிரான் பட்டார் எழுத்து.

சிங்கப்பிரான்பட்டர் காணித்தொகை மாப்பணம் மனைப்பணம் வேலிப்பணம் மடம் யேறப்பட்டனவும் தவிர துண்டத்தார் அங்கராயர்பற்றும் ஆனுங்கூர் உடையார்பற்றும் சமக-வது கார்முதல் கொள்ளும்படி மாத்தால் கலம் கொள்ளக்குடிமைப்பணம் காசு ஒன்றுபடி -உ- பணம்மூன்று மறுவுக்கு அரைப்பணமும் புறக்கடமைக் குடியீட்டுக்கு அரைப்பணமும் வர்க்கத்துக்குக்கொள்ளக் கண்காணித்து நிலத்துக்கு நாலில் ஒன்றுவாரமிடவும்; நெல்கூட்டு வர்க்கம் முன்பணங்கொடுத்துக்கொள்ளவும்; இப்படிக்கூட்டின நெல்லுகள் வாசிக்குக் கலத்துக்கு முந்நாழிநெல் கூட்டிக்கொள்ளவும்; மறுவுமொருபூவும் காணித்தொகை நெல்மாத்துக்கொள்ளவும்; பற்றுநிலத்துக்குக் கண்காணித்து நாலில் ஒன்றுவாரமிடவும்; இந்நிலத்துக்குகுடிமை கூட்டுவன தவிரவும்; குடி புடன்படப் புள்ளிபார்த்தநிலத்துக்குச் செய்த்தலையிலே புள்ளிக்கையீடெழுத; வரிசைப்படி நிலத்துக்கு வரிசைபேசி அடைஓலைஎழுத; குறைந்தஊர்கள குடிமைப்பணம் குறைந்தபடிகொள்ள; நாள்வட்டம் கைவிலைவிற்றபடி தரவெழுதித்தர; நெட்டாள்கணக்குக் குடிமகன் ஊழேபாதிப்படக்கிடந்த சிகை அகத்துண்டம் கட்டாதொழிய; ஆண்டுதோறும் ஆணிமாதத்தே நேரக் கையீடுகொடுக்க; ஊர்வழிவனையில் புனைக்கொள்ளாப்புறப் புனைக்கொள்ளாதொழிய. இப்படிக் கண்டேர்சிங்கபிரான்எழுத்து ஸ்ரீகர்னபட்டர்எழுத்து தருவுடையமருதுடையான்பட்டர் எழுத்து அங்கராயர்எழுத்து ஆனுங்கூருடையார்எழுத்து.

நத்தவகை காணித்தொகையுள்பட ஊர்கள் வரிசைப்படியும் மதி(ப்புப்ப)டியுங் கண்காணிப்படியும் மேல்வாரமுதலானநெல்லும் கூட்டுவதுக்கு மாத்தால் கலமாகவந்த நெல்லும் இப்படிமுதலானநெல்லுக்குகலத்துக்கு முந்நாழியாகவாசி நெல்லுங்கூட்டிக்கொள்ள; காரும் ஒருபூவும் பயிர்செய்தநிலத்துக்கு குடிமைக்கு முக்காலாகவந்தபணம் பணமாக்கொள்ளவும்; செலவுக்குக் கைவிலை விற்றபடியே தான்வட்டம்தரவும், கைச்சாத்துப்பெறவும்; ஆண்டுதோறும் உறுதிமுறிபெறவும்; புறப்புனைகொள்ளுவதொழிய; ஊர்சேரப்புனைகொள்ள; குடிக்கடையீடு கடையீட்டுப்படிசெய்ய; நீக்கிநின்ற உபாதிகழித்து. இப்படிக்கு சிங்கப்பிரான்பட்டர் எழுத்து. ஸ்ரீகர்னபட்டர் எழுத்து. ஒன்புரை வரதராஜப்பட்டர் எழுத்து. விக்கிரமபாண்டிய பிரம

ரியர் எழுத்து. டுனெயசிரம்பட்டர்எழுத்து. எழுதூன்ற வரதராஜப்பட்டர் எழுத்து.

மனைப்பணத்தொகை வரிசைப்படி நிலத்துக்கும் உடன்வாரிப் புள்ளிபார்த்த நிலத்துக்கு மேல்வாரமும் குடிமைக்குமாத்தல் காரும் ஒருபூவும் குடிக்கடமைக்கு மறுவுக்கும் மாத்தால் அரைப்பணமும் குடிக்கடையீட்டுக்கு அரைப்பணமுங்கொள்ளவும், இப்படிவந்தபணத்துக்கு நெல்கூட்டாமல் பாகமாகக்கொள்ளவும்; கூட்டுவர்க்கத்துக்கு மாத்தால் கலநெல்லுக்கொள்ளவும்; இப்படிமுதலான நெல்லுக்கு கலத்துக்கு நானுழியாகவந்த நெல்கூட்டிக்கொள்ளவும்; காரும் மறுவும் ஒருபூவும் குடியுடன்படாத நிலத்துக்கு கண்காணித்து நாலில் ஒருவாரமிடவும்; இந்நிலத்துக்கு குடிமைகூட்டுவது தவிரவும்; மாப்பணம், ஊர்ப்பணம், பணவட்டம், வேலிப்பணம் நாட்டு-ச யாத மற்றும் எப்பேர்ப்பட்டவர்க்கமுந்தவிரவும்; குடியுடன்பட உடன்வரப்படாதநிலத்துக்கு செய்த்தலையிலே புள்ளிததரவுஎழுதயும்; கைவிலைவிற்றபடி விலைபேசத்தரவெழுதவும்; விதைமுதலிட்டதுமுதல் கொள்ளவும், அரிசிகுற்றவேண்டில் கருவூலச்செலவிடவும்; ஆண்டு தோறும் நெல்தரவெழுதவும்; வரிசைநிலத்துக்கு வரிசைபேசி அடையோலையெழுதவும்; ஊர்தோறும் வனையில் புனைகொள்ளவும்; புறப்புனைகொள்ளாதொழியவும்; சபைக-வது கணக்குக்கார்வரைபார்த்து ஏற்றமுள்ளது அக்கணத்தே செலவிடவும்; நெட்டாள்த்தேவை ஊஞ்ஞெபாதி கொள்ளவும்; தமக்கிடையீட்டுப்படி கொள்ள; குடிமைக்கு அரைப்பணங்கொள்ள; கூட்டுவர்க்கத்தவர். இப்படிக்குக்கண்டு சிங்கப்பிரான்பட்டர் எழுத்து. இவை கிருஷ்ணப்பட்டர்எழுத்து. இவை திருவிடைமாரன்பட்டர்எழுத்து. இவை நல்லூர் பெரும்புறக்கடன்பட்டர் எழுத்து. இவை காமடிசெட்டுசோங்கமன் பட்டர் எழுத்து. இவை இராயுரிக்கோட்டை திருவரங்கராயபட்டர் எழுத்து.

## இதன்கிழக்கு சோபனமண்டபம் வடபுறம் வெளிப்பக்கம்.

12. ஸ்வஸ்திஸ்ரீ கோக்கட்பன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீவல்லபதேவர்க்குயாண்டு இருபத்தஞ்சாவது மேஷநாயிற்று பூர்வபக்ஷத்து ஏகாதசியும் சனிக்கிழமையும் பெற்ற மகத்துநாள் பாண்டிமண்டலத்து மிழலைக்கூற்றத்துத் தெக்கூருடையான்

சோழமண்டலத்து இராஜேந்திர சோழவளநாட்டுப் புறங்கரம்பை நாட்டுத் துண்டத்தூர்வகையில் செந்திக்கோட்டமானபஞ்சநதவாண நல்லூர், வேங்கூர், நத்தவகையில் பள்ளிச்சந்தம், திருக்களர்ப்பற்றிற் சேர்ந்த பண்ணியூர், பரம்பைக்குடி, இக்காணியுடைய உடையான் அழகிய திருச்சிற்றம்பலமுடையார்க்கு அகம்புடையாள் கண்ணுடை நாச்சியோக...... . டாழிநாட்டு அரசு வரகூருடையான், னெக்குந் தேவர் சொக்கநாயனுர் விசையகண்டகோபாலற்குக் காணிவிபரப் பிரமாணம்பண்ணிக்கொடுத்தபரிசாவது:— முன்னுள் இராஜரான வீரபாண்டியதேவர் துலுக்கருடன் வந்தநாளிலே தெக்கூருடையாரும் இவருடைய தம்பிமாரும் அனைவரும் அடியாளற்றும் செத்துங் கெட்டும்போய் அலைந்து உள்ளம் வெள்ளத்தாலும் கலக்கத்தாலும் பாழுமாய் இருக்கிற அளவிலே எங்கள் முதலியார் சூரியதேவர்காணியாட்சி விடாமல் நன்று நடத்திப்போகிறஅளவில் பண்ணியூரிலே சிதையுண்டென்றும் இதுதரவேணுமென்றும் புதுவூருடையார் குலசேகரப்பிரமராயர் காரியத்துக்குவந்த நென்மலியுடையாரும் திருக்கைவேலுமுதலியாரும் கிளிஞலூர்கிழவரையும் இவர்களைச்சாமந்தனுர் காரியப்பேரழைத்துக்கொண்டுபோய் காணிக்கைதரவேணும் சூரைவரி தரவேணுமென்றும், சிதையுட்பட எண்ணூறுபணம் தரவேணுமென்றும், இவர்களைச்செல்கலிலே கொண்டுபோயறையிலேவைத்து எங்கள்முதலியார் சூரியதேவரை உம்முடையபேரால் கோட்டகத்துக்கும் உங்கள்மருமகனுர் தாயமங்கலமுடையார் செல்வப்பிள்ளையார்பேராலே பள்ளிச்சந்தத்தில் ஒன்றுபாதிக்கும் வேங்கூரில் நிலவிழுக்காட்டுக்கும் ஆக இருநூறுபொன்னு. ஆயிரம்பொன் * யார் இவர்சகாயம் புதுவூடையார் எண்ணூறுபணமும் கிளிஞலூர் கிழவர்பேராலே ஆயிரம்பணமும் குளத்தூருடையார்பேருக்கும் எங்கள்பேருக்கும் ஆயிரம்பணமும் கோட்டகம் பள்ளிச்சந்த ஊர்களாலே எண்ணூறுபணமும் ஆக எங்கள்பேராலே ஆயிரத்தெண்ணூறு என்றும் மற்றுள்ளபேர்களாலுள்ள பணமும் ஆக இப்பணத்துக்குப்பொருள் முன்னிலேஇட்டுப்போய் இப்பணமுதலாக்க வேணுமென்றபடியாலே இந்தப்புதுவூருடையார் கிளிஞலூர்கிழவர் குலசேகரப்பிரமராயர் காரியப்பேர் திருநெல்மலியுடையார்க்கும் எங்கள் முதலியார் சூரியதேவரைப்புணைக்கொண்டு இவர்களையும் பேராளருடனே காட்டிக்கொடுத்து இவர்களும் தங்கள்காணியும் பண

ங்களும் விற்றுத் தங்கள்பேரால் காணிப்பணம் சிலவிறுத்தவளவில் சென்று புணைக்கழியாதபடியாலேயும் எங்கள்பேராலுள்ள பணமும் வாணுதராயர்பேரால் முன்னிலைப்படியே இவரும் எங்களைக்கொண் டே சிலவிறுப்பித்து இருஞ்சிதையும் எங்கள் முதலியாரை உம்மு டையவழியாக விட்டு அவர்களைக்காட்டித்தந்துபோமென்று நெடு நாள் படவிடாதொகையில் இவரும் காவலாகச்சிறையில் இருந்து மேல்சித்தப்படி.

* இவ்விடத்தில் பொருத்தமாகத்தோன்றுதவிபரம் திருப்ப ணியில் பிரித்து வேலைசெய்திருப்பதால் தவறுண்டிருக்கலாமென நினைக்கக்கூடியதாகவிருக்கிறது.

குறிப்பு:— அநேக சாதனங்கள் அழிபட்டும், திருப்பணியில் பலவிடங்களில் பிரித்துவைத்துக் கட்டப்பட்டும். சிதைவுற்றமை யால் முற்றும் எடுத்தசசியற்றக்கூடவில்லை.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# திருக்களர்ப்புராண வசனச்சுருக்கம்.

## முதலாவது

## அநுகூலச்சருக்கம்.

உலகமெல்லாம் படைத்தருளிய பிரமாவின் புத்திரரிற் சனற் குமார முனிவரென்பவர் ஓர் ஆசிரியர்முகமாகச் சிவதலமான்மியங் கேட்டுப் பிறவித்துன்பம் நீக்கக்கருதி, ஸ்ரீகைலாஸமலைக்குச்சென்று திருநந்திதேவரைத் தரிசித்துத், தன் உள்ளக்கருத்தை நிகழ்த்திய வளவில் நந்திதேவர் மகிழ்ந்து நின்போலும் சிவபக்தியுடையவர்க்கே அத்தகைய மான்மியத்தைக் கூறவேண்டுமாதலால் யான் அறிந்தவற் றைச்சொல்லக் கேட்பாயாக ;

சம்புத்தீவத்து விளக்கமுற்ற சிவதலங்கள் பலவற்றுட் சிறந்த தலங்கள் நூற்றெட்டென்பர் ; அவற்றுள்ளுஞ்சிறந்தன அறுபத்தெ ட்டுத் தலங்களாகும் ; இவ்வறுபத்தெட்டனுள் சிவபிரான் திருநட னம்புரிந்தருளிய தலங்கள் எட்டென்பர் ; அவ்வெட்டுத்தலங்களுள் பாரிசாதவனமான்மியத்தைக் கூறுகிறேனென்று சொல்லலுற்றனர்.

## இரண்டாவது பாரிசாதவனச்சருக்கம்.

மகாநதி ஏழனுட்சிறந்த காவிரிநதியின் தென்பால் ஆரூரென்னுந் திவ்யக்ஷேத்திரத்திற்கு நிருதித்திசையிலுள்ள இத்தலத்தில் முன்னம் துருவாசமுனிவர் தேவருலகத்திலிருந்து பாரிஜாதவிருக்ஷத்தைக் கொணர்ந்துவைத்து வளர்த்து அதன்கீழ்பால் ஒருதடாகமுண்டாக்கி அத்தடாகமிருத்திகையைச் சிறிதெடுத்து முற்கூறிய பாரிஜாததருமூலத்திட்டு இலிங்கவடிவமாக அமைத்துப் பூசித்துத் துதித்தலும் முழுமுதற்கடவுள் அவ்விலிங்கத்தினின்றுந்தோன்றிக் காட்சிகொடுத்தருளி நினக்கு வேண்டுவனவற்றைக் கேளெனத் துருவாசமுனிவர் துதித்து எந்தாய்! யான் பிறரைச்சபித்தால், எனக்குத் தவம்மிகும்வண்ணம் வரந்தந்தருளென அங்ஙனமே கொடுத்து அடைந்தார்க்கருள்செய்யுநாயனாராகிய சிவபெருமான் இலிங்கத்துள் மறைந்தருளினர். அதுமுதல் இத்தலந்திற்குப் பாரிசாதவனமெனப்பெயராயிற்று.

பின்னர் துருவாசமுனிவர் கட்டளைப்படி மயனென்னுந் தேவதச்சன் ஆகமவிதி வழுவாது, சிவபெருமானுக்கும் அம்பிகைக்கும் மற்றப் பரிவாரதேவர்களுக்கும் அவ்வவர்க்குத்தக்கபடி ஆலயங்களும் மேல்பால் நிருத்தசபையும் அவ்வவ்வாலயங்களுக்குரிய பிம்பங்களும் துவசத்தம்பம், மகாரதம் முதலியனவும் அமைத்து முனிவரிடம் விடைபெற்றுத் தன்னிடஞ்சென்றனன்.

துருவாசமுனிவர் மயனமைத்தபிம்பங்களை அவ்வவற்றிற்குரிய ஆலயங்களில் பிரதிஷ்டித்து எம்பெருமானுக்கும்பரிவாரதேவர்களுக்கும் சித்திரை மாதத்தில் உற்சவம்புரிந்து துதித்தலும் கருணையங்கடலாகிய சிவபெருமான் திருவருள்சுரந்து தோன்றி நினக்கு இன்னம் யாது வேண்டுமென முனிவர் பலகால் வணங்கித்துதித்து இச்சபையின்கண்ணே யான் கண்டுய்ய நடனம்புரிந்தருள வேண்டுமெனப் பரமபதி முனிவ! கந்தமாதனமலையிலிருக்கின்ற அறுபதினுயிர முனிவரும் என்னைத்தரிசனம்செய்யும்பொருட்டு பாத்மகற்பத்தில் இங்குவருவார்கள் அவர்களுக்கும் நினக்கும் குமாரக்கடவுளால் உபதேசஞ்செய்விக்கப்படும். அப்பொழுதுயாம் நடனக்காட்சியளிப்போமென்றுரைத்து மறைந்தருளினார்; முனிவரும் எம்பிரானைப்பூசித்துக்கொண்டு அத்தலத்திலேயே இருந்தனர்.

## மூன்றாவது நிருத்தச்சருக்கம்.

வியாஸர் முதலாகச் சங்கு ஈறாகச்சொல்லப்பட்ட முனிவர்யாவரும் முக்கட்பெருமான் துருவாசமுனிவருக்கு அருளிச்செய்தமையறிவுற்றுத் தாங்களும் அக்காட்சியைப்பெறவிரும்பிப் பாரிசாதவனம்வந்து அதன் ஒருகுரோச எல்லைக்குள் ஆங்காங்கு வைகித் தங்கள் தங்கள் பெயரால் இலிங்கம் ஸ்தாபித்துப் பூசித்துறையுங்காலை மேற்கூறியபடி பாத்மகற்பம்வருதலும் கந்தமாதனத்து அறுபதினாயிர முனிவர்களும் பாரிசாதவனம்வந்து துருவாசமுனிவரைப் புகழ்ந்தேத்தி அத்தலத்திலே தங்கினார்கள். அப்போது நிருத்தசபையின் கண்ணே ஸகலதேவரும் கொண்டாடக் கருணாமூர்த்தியாகிய சிவபெருமான் பிரமதாண்டவமென்னும் நிருத்தனம் புரிந்தருளினார் பின்னர் குமாரக்கடவுள் துருவாசர்முதலிய முனிவர்களுக்குப் பஞ்சாக்ஷரமந்திரோபதேசமும் அதன் மகிமையும் புகன்றருளினாரென்று சொல்லி அப்பால் திருக்களர்த்தலமகிமையைச்சிறிது கூறியருளினார்.

## நான்காவது பஞ்சாக்ஷரச்சருக்கம்.

சனற்குமாரமுனிவர் ஐய! கந்தமாதனமுனிவர்களுக்கும் துருவாசமுனிவருக்கும் அறுமுகப்பிரான் உபதேசித்தருளிய பஞ்சாக்ஷரமந்திரத்தின் பேதங்களும் அவற்றாற் பெறும்பயன்களும் அடியேற்குச்சொல்லியருளவேண்டுமென நந்திதேவர் முனிவ! அம்மந்திரம் ஐவகைப்படும். அவையாவன:—

(க) சுத்த பஞ்சாக்ஷரம் 5. (உ) அதனோடு பிரணவஞ்சேர்ந்தது 6. (ங) அவற்றோடு ஸம், யம், சேர்ந்தது-8. (ச) ஷை ஸம் யம் இரண்டுதரம் சேர்த்துக்கூறப்படுவது-10. (ரு) ஷை மூன்றுதரம்சேர்த்துக்கூறப்படுவது 12. இவைமுறையே (க) மோக்ஷமளிப்பதும் (உ) போகமோக்ஷமளிப்பதும், (ங) காமியம்தருவதும், (ச) வறுமை முதலாயின தவிர்ப்பதும், (ரு) நன்மைபயந்து வசீகரமாக்குவதுமாம். (இவற்றின் தியானமுதலியவற்றின் விரிவை கo - முதல் கச-வரையிலுள்ள செய்யுட்களிற்காண்க.) இனி யந்திரம் சொல்லப்படுகிறது. மத்தியில் ப்ரணவத்தையெழுதிச்சுற்றிச்சதுரமாக இரேகைகீறி இதனைச்சூழச்சந்திரபீஜமாகிய (ᑌஃ) என்ற அக்ஷரத்தை

வரைந்து அவற்றின் நாற்சுற்றிலும்(ஸௌ)என்ற கலாபீஜத்தையெழுதி அக்கலாபீஜத்தைச் சூழ கூo முதலிய (௫௧) எழுத்துக்களை (இது மாத்ருகை) எழுதி அவற்றைச்சூழ மீட்டும் கலாபீஜத்தையெழுதி அவற்றைச்சூழப்பிரணவஞ்சேர்ந்த பஞ்சாக்ஷரத்தையெழுதி அவற்றைச்சூழ ஹ்ரீம் (இது மாயாவேஷ்டனம்) என்ற அக்ஷரத்தைவரைந்து அமைப்பது பஞ்சாக்ஷரத்துக்குரிய யந்திரமாகும். இவ்வியந்திரத்தைத் தங்கத்தகடு, வெள்ளித்தகடு, பூர்ஜபத்திரம் இவற்றிலொன்றில் அமைத்து அணிந்துகொண்டு சந்தியாவந்தனம் செய்யத் தீவினையனைத்தும் நீங்குமென்பர். இத்தகைய பஞ்சாக்ஷர உபதேசம் பெற விரும்புவோர் திருக்களரில் விளங்கும் குமாரக்கடவுளைப்பூசித்து உபதேசம்பெறவேண்டும்; இம்மந்திரத்தைப் பரமபதியாகிய முக்கண்மூர்த்தி முருகவேளுக்கு உபதேசித்தனர். அவர் இம்மந்திரத்தை (௨௫) விதமாக விரித்து முனிவர்களுக்கு உபதேசித்தருளினர்; அவையெல்லாம் விரிப்பிற் பெருகுமாதலின் அவற்றிற்சிறிது நினக்குச்சொன்னேன்; அம்மந்திரத்தைத் திருக்களரில் எம்பிரான சந்நிதியிற் செபித்தால் அதனாலுண்டாகும் பலனுக்களவில்லை. இன்னமும் கேட்பாயாகவென்று மாலாதாரகன் சரித்திரத்தைச் சொல்லததொடங்கினார்.

## ஐந்தாவது மாலாதாரகச்சருக்கம்.

முன்னொருகாலத்து ஒன்பது வருஷகாலம்வரையில் மழைபெய்யாமல் உலகமெங்கும் பஞ்சமுண்டாகியது; வற்கடமிகுதியாற் பாரிசாதவனேச்சுரருக்குப் பூசைமுதலியன இன்றி அக் கடவுளாலயமுஞ் சிதைவுற்றது. அக்காலத்தில் ஆங்காங்குப் பற்பலவேடர்கள் கொள்ளைகொண்டு உயிர்வாழத்தொடங்கினார்கள்; அவர்களுள் ஒரு வேடன் எவ்விடத்தும் களவுசெய்துவரும்பொழுது எதிரிலே தோன்றிய இப்பாரிசாதவனம்புகுந்து பலமிருகங்களைக்கொன்று வேட்டையாடிவருவோன் அங்குச்சிதைவுற்றிருந்த அவ்வாலயத்தை நோக்கி அன்றிரவு அங்கேதங்குவதற்கு நினைத்துச் செல்லும்பொழுது இடையில் எதிர்ப்பட்ட சோலையிலுள்ள மலர்களைக்கொய்து ஒருமாலைதொடுத்து அதனைத்தான் சூடிக்கொள்ளக்கருதிக் கையிற்கொண்டு சென்று அவ்விடத்தில் வைத்தலும், வைத்தமாலையின்கீழ் மறைந்திருந்த எம்பிரான் திருவுருவத்தின்மீது சூடியதுபோலாயி

ற்று; அவ்வேடன் அன்று அங்கே தங்கி மற்றைநாள் தன்னூர்சென்று சிலநாளிலுயிர்துறந்து ஈசனுக்கு மாலையணிந்ததன்பயனால் கலிங்க தேயத்தரசனுக்குப் புத்திரனாகப்பிறந்து மாலாதாரகனெனும் பெய ரோடு முன்னுணர்ச்சியும்பெற்று வளர்ந்து அரசமாதைமணந்து நா ன்கு புத்திரரைபெற்று முன்னவனுக்கு அரசளித்துத் தான்வேண் டும்பொருளோடு பாரிசாதவனம்புகுந்து ஆலயத்தைப் பண்டுபோற் புதுப்பித்துப் பூசனைகளைக் குறைவறநடத்தி நெடுநாளிருந்து முத்தி பெற்றனன்.

முனிவ ! மற்றொருகாலத்தில் இந்திரன்முதலாகிய தேவர்க ளும் வசிட்டாதிரிஷிகளும் அத் திருக்களரை அடைந்து ஐந்து கு ரோசஎல்லைக்குள் தங்கி ஆங்காங்குத் தத்தம்பெயராலிலிங்கமமைத் துப்பூசித்துப் பேறுற்றனர்.

## தீர்த்தநாமம்.

திருக்களரெல்லைக்குள் ஒருசிறியகுழியில் நீரிருந்தாலும் அந் நீர் கங்கையினுஞ் சிறந்ததாகும். சந்நிதியில் துருவாசமுனி உண் டாக்கிய தடாகத்தை உலோக்கியதீர்த்தமென்ப ; அத்தீர்த்தம் மிகு ந்த சிறப்புடையது.

ஆலயத்துக்குத்தென்பக்கத்தில் பிரமதீர்த்தமென்றோர் தடாக முண்டு; இத்தீர்த்தத்தில் பண்டு அநேகமுனிவர்மூழ்கி நற்கதியைப் பெற்றனர்.

ஆலயத்துக்கு மேலைப்புறத்தில் உருத்திரதீர்த்தமென்றோர் தடாகமுளது ; அதனிற் கற்பாந்தத்தில் பற்பல உருத்திரர்கள்மூழ்கி நற்கதிபெற்றனர்.

ஆலயத்துக்குவடபால் ஞானதீர்த்தமெனப் பெயர்பெற்ற ஒரு தடாகமிருக்கிறது. அதனிலாடினோருக்கு ஞானமளிப்பதனால் அப் பெயர் பெற்றது. இத்தடாகங்களிலாடினவர் அடையும்பேற்றிற்கு எல்லையில்லையென்று அவற்றின் மகிமைகளையும் விரித்திக்கூறிப் பின்னர் மகாரதன் சரிதம் கூறத்தொடங்கினார்.

## ஆறாவது மகாரதன் புத்திரப்பேற்றுச்சருக்கம்.

சனற்குமார ! பாண்டிநாட்டை அரசுபுரிந்த மகாரத பாண்டிய னென்பான் புத்திரப்பேறின்றிக் கவலையுற்று அமைச்சன் தருமகீர் த்திபால் நிகழ்த்த மந்திரி அரசே ! நீ கவலைகொள்ளவேண்டாம்

சோழநாட்டுள்ள திருக்களரென்னுந் தலத்தினை அடைந்து ஆங்கு ஆனந்தநடனமாடுங்கடவுளுக்குப் பூசைசெய்து வழிபடின் நீ நினை த்தவனைத்துங் கைகூடும்; முன்னர்யான் மகப்பேறின்றிக் கவன்று சுமந்து முனிவர் அநுக்கிரகித்தபடி அப்பதியை அடைந்து பூசித்து அப்பேற்றினை அடைந்தேன்; நீயும் அவ்வண்ணமே புரிந்தருள்க வென அரசன்மகிழ்ந்து வேண்டும்பொருள்கொண்டு பரிவாரங்கள் சூழ்ந்துவர மனைவியோடு பிரயாணமாகிப் பல சிவதலங்களைத்தரிசி த்துச்சென்று திருக்களரினையடைந்து ஆங்கு மார்க்கண்டமுனிவர் கூறியவண்ணம் கடவுளை வழிபட்டுத் தானமுதலாயினவற்றைச் செய்துறையுநாளில் அரசன்மனைவி கருப்பமுற்று சுபதினத்திலிரண்டு புத்திரரைப்பெற்றனள். மன்னவன்மகிழ்ந்து அந்தணர்க்கு நிதி வழங்கிப் புத்திரர்க்கு முறையே சிவதத்தனென்றும் தேவதத்தனென்றும் பெயர்புனைந்து ஈச்சுரன் பூசைக்குவேண்டு நிலமுதலாயினவற்றைக் கொடுத்துத் தன்னுடு புகுந்து வாழ்ந்திருந்தனன். இத்தகைய பேறுபெற்றோரளவிலரென்றுரைத்தருளினர்.

## ஏழாவது தீர்த்தமான்மியச்சருக்கம்.

நந்திதேவர் இவ்வண்ணங் கூறுதலும் அயலிலிருந்த சூத முனிவர் சனற்குமாரமுனிவரைநோக்கி நந்தியெம்பெருமான்கூறியவையன்றி இன்னம் தீர்த்தமான்மியமென்பதொன்றுண்டு. அதனை யானறிவேனென முற்கூறிய தீர்த்தங்களின் மான்மியங்களும் அவற்றிலாடவேண்டியநாட்களும் ஆங்குச்செய்யவேண்டிய தானவியல்பும் அத்தீர்த்தங்களிலாடுதலாலெய்தும் பயனும் ஈசுரன்பூஜைவிசேஷமும் அடியார்சிறப்புமுதலாயினவும் விரித்துப்புகன்றனர்.

சுபமஸ்து.

கணபதி துணை.

# திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த
# திருக்களர்த்தேவாரம்.

## பண்—சீகாமரம்.

---

திருச்சிற்றம்பலம்.

நீருளார்கயல் வாவிசூழ்பொழி னீண்டமாவய லீண்டுமாமதிற்
றேரினார் மறுகில் விழாமல்கு திருக்கள
ருருளாரிடு பிச்சைபேணு மொருவனேயொளிர் செஞ்சடைம்மதி
யாரவின் றவனே * யடைந்தார்க் கருளாயே. (௧)

தோளின்மேலொளிநீறு தாங்கியதொண்டர்வந்தடிபோற்றமிண்டிய
தாளினார் வளருந் தவமல்கு திருக்களருள்
வேளினேர்விசை யற்கருள்புரி வித்தகாவிரும் பும்மடியவரை
யாளுகந் தவனே யடைந்தார்க் கருளாயே. (௨)

பாடவல்லநன் மைந்தரோடு பனிமலர்பல கொண்டுபோற்றிசெய்
சேடர்வாழ் பொழில்சூழ் செழுமாடத் திருக்களரு
ணீடவல்ல நிமலனேயடி நிரைகழல்சிலம் பார்க்கமாநட
மாடவல் லவனே யடைந்தார்க் கருளாயே. (௩)

அம்பினேர்தடங் கண்ணினாருட னாடவர்பயின் மாடமாளிகைச்
செம்பொனார் பொழில்சூழ்ந் தழகாய திருக்களரு [வர்க்
ளென்புபூண்டதோர் மேனியெம்மிறை வாவிணையடி போற்றிநின்ற
கன்புசெய் தவனே யடைந்தார்க் கருளாயே. (௪)

கொங்குலாமலர்ச்சோலைவண்டினங் கிண்டிமாமதுவுண்டிசைசெயத
தெங்குலைபைங் கமுகம் புடைசூழ்ந்த திருக்களருண்
மங்கைதன்னொடுங்கூடியமண வாளனேபிணைகொண்டொர்கைத்தல
த், தங்கையிற் படையா யடைந்தார்க் கருளாயே. (௫)

---

* இக்கோயிலிலுள்ள சிலாசாதனங்களில் 'அடைந்தார்க்கருள்செய்யாநின்ற நாயனார்' என்றும் 'அடைந்தார்க்கருள்செய்த நாயனார்' என்றுஞ் சிவபெருமான்திருநாமம் வரையப்பட்டிருத்தல் காண்க.

கோலமாமயிலாலக்கொண்டல்கள் சேர்பொழிற்குலவும்வயலிடைச்
சேலிளங் கயலார் புனல்சூழ்ந்த திருக்களரு
ணீலமேவிய கண்டனேபிறை புன்சடைப்பெரு மானெனப்பொலி
யாலநீழலுளா யடைந்தார்க் கருளாயே. (சு)

தம்பலம்மறி யாதவர்மதி ளொக்குமால்வரை யாலழ்லெழத்
திண்பலங் கெடுத்தாய் திகழ்கின்ற திருக்களருள்
வம்பலர்மலர் தூவிநின்னடி வானவர்தொழக் கூத்துகந்தபே
ரம்பலத் துறைவா யடைந்தார்க் கருளாயே. (எ)

குன்றமொத்தநன் மாளிகைக்கொடி மாடநீடுயர் கோபுரங்கண்மேற்
சென்றமர்ந் துயர்வான் மதிதோயுந் திருக்களரு
ணின்றமொத்துயர் மால்வரைத்திர டோளிறுமெலவூர்த் தான்றனீண்முடி
யன்றடர்த்து கந்தா யடைந்தார்க் கருளாயே. (அ)

பண்ணியாழ்பயில் கின்றமங்கையர் பாடலாடலோ டாரவாழ்பதி
தெண்ணிலா மதியம் பொழில்சேருந் திருக்களரு
ளுண்ணிலாவிய வொருவனேயிரு வர்க்குநின்கழல் காட்சியாரழ
லண்ணலாய வெம்மா னடைந்தார்க் கருளாயே. (கூ)

பாக்கியம்பல செய்தபத்தர்கள் பாட்டொடும்பல பணிகள்பேணிய
தீக்கியல் குணத்தார் சிறந்தாருந் திருக்களருள் [பொய்
வாக்கினான்மறை யோதினாயமண் டேரர் சொல்லிய சொற்களான
யாக்கிநின் றவனே யடைந்தார்க் கருளாயே. (கo)

இந்துவந்தெழு மாடவீதி யெழில்கொள்காழிந் நகர்க்கவுணியன்
செந்துநேர் மொழியா ரவர்சேருந் திருக்களரு
ளந்தியன்னதோர் மேனியானை யமரர்தம்பெரு மானைஞானசம்
பந்தன்சொல் லிவைபத்தும் பாடத்தவ மாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

# திருக்களர்ப்புராணம்.

## பாயிரம்.

### வலம்புரி விநாயகர்.

மாமலர்க் கோதை நாளு மகிழ்திருக் களருள் வைகுந்
தேமல ரிதழி வேய்ந்த செஞ்சடைக் கடவு ளோர்பாற்
காமர்பூங் கொம்ப ரீன்ற வலம்புரிக் களிற்றின் வண்ணத்
தாமரை புரைபிஞ் செம்பொற் ருளிணை வணங்கல் செய்வாம். (க)

### பாரிசாத வனேசர்.

நீர்கொண்ட செழுங்கமல வயல்குலவு திருக்களரு ணெடிய வானக், கார்கொண்ட திருமேனிக் கண்ணனுநான் முகத்திறையுங் ககனத் தோருந், தார்கொண்டு தொழநடஞ்செய் தடியரித யத்திலகுந் தண்ணி லாவிண், டேர்கொண்ட பிறைச்சடிலத் தெம்பிரான் பூங்கழற்ரு ளிறைஞ்சி வாழ்வாம். (உ)

### அமுதவல்லியம்மை.

பலவகை யண்ட மெல்லாம் பானிலாக் கற்றை சுற்றி
யிலகிய தரள மாக்கி யிளமுலைக் கணியும் பேதை
யுலகெலா மகிழ்ந்து போற்றுந் திருக்கள ருவந்து மேவு
மலைமக ளமுதவல்லி மலரடி வணக்கஞ் செய்வாம். (ங)

### விநாயகக்கடவுள்.

மருமல ரணையில் வைகு மடந்தையு முலக மீன்ற
வருமறைக் கிழவ ளுவி னமலையும் வணங்கும் பைம்பொற்
றிருமலை மகட்கு முக்கட் டேவற்கு மருமை யாகித்
தருவனத் துறையுந் தெய்வத் தந்தியைச் சிந்தை செய்வாம். (ச).

## குமாரக்கடவுள்.

உரைதரு மறையு ஞானத் துண்மையுங் கங்கை நன்னீர்த்
திரைபொருஞ் சடிலத் தெம்மான் செவியமு தொழுகக் கேட்பக்
கரையிலா வனந்த கோடி கலையுணர்ந் தியம்பி னோனை
வரைபக வெறிந்த வைவேன் மதலையை மனத்துள் வைப்பாம். (ரு)

## கலைமகள்.

ஆரண நான்கு மோரா றங்கமு மலகி லாத
காரணங் காட்டு ஞானக் கலைகளுந் தாளுய் நின்ற
வோரணங் கினைப்பூ மேலோன் றனதுநா வுறையுந் தெய்வ
வாரணங் கிளமென் கொங்கை மயிலினை வணக்கஞ் செய்வாம். (சு)

## ஆளுடைய பிள்ளையார்.

தெண்டிரைப் புவியி னோங்கிச் சேயிதழ்க் கமலத் தண்ண
லெண்டரு மறைக்கு மேலா யிலங்கவா சவனு மாலு
மண்டரு மறிதற் கெட்டா வரனருள் விளைப்ப வோதித்
தண்டமிழ் விளக்குங் காழித் தலைவனை வழுத்தல் செய்வாம். (எ)

## ஆளுடையவரசு.

உலகெலா மெனப்பாடென் றடியர்தமக் குரைபகர்ந்த வொரு
வன் றனே, யலகிலா முதுமறைக்கு மறிவரிய பரஞ்சுடரென் றறி
வானேக்கி, நிலைநிலாப் புன்சமயத் தமனொழுக்க நெறிமுழுது நீக்
கு ஞானத், தலைமைசால் வாகீசர் தாண்மலரை யெமதுசிரந் தரித்
தல்செய்வாம். (அ)

## அளுடையநம்பி.

தாதிவ ரளகச் செவ்வாய்த் தடமுலைப் பரவை தன்பா
லாதியம் பரமன் றனே யரையிருட் போழ்தி லன்பாற்
றூதுசென் றருளப் பாடுஞ் சுந்தர மூர்த்தி பொற்றாட்
பாதுக மெமது சென்னிக் கணியெனப் பணித்தல் செய்வாம். (கூ)

## ஆளுடையவடிகள்.

ஒழுக்கநெறி யுணராத புத்தரெலா முரையடங்கி யூம ராக,
விழுத்தகுநான் மறைப்பிரம ஞமகளை முனிந்துமுடி வேர்த வின்ற,

## பாயிரம்.

வழுக்கின்மட மாதினொடும் பதிகமுரைத் துயர்ஞால மகிழ மேனாட், டொழத்தகைய மணிமன்றிற் பவந்தவிர்க்கு மடிகளையாந் துதித்தல் செய்வாம். (௧0)

## ஆசிரியர்.

கல்லிலையா னிழலமர்ந்து நால்வர்க்குஞ் சுகர்தமக்குங் கனிவாற் பாடு, மல்லல்வயற் றிருவாத வூரருக்கு முபதேசம் வழங்கி மீண் டுந், தொல்லுலகி லந்தணனும் வடிவாகித் தோன்றியருள் சுரந்த நோக்கால், வல்வினைதீர்த் தெமையாண்ட சாம்பசிவ குருவினடி வணக்கஞ் செய்வாம். (௧௧)

## சிவனடியார்கள்.

சிவசின்னந் தனைப்பெற்றோர் சிவன்கழற்பூ சனைபுரிந்தோர் சி வநாமத்தைப், பவநந்தப் புகன்றிடுவோ ரரனடியார் தமக்கினிய பத் தி பூண்டோர், புவனங்கள் புகழ்கயிலைச் சிவபுரமாங் கதிபுக்கோர் புகுவோ ரென்னு, மிவர்தங்க டிருவடிப்பூங் கமலமல ரெமதிதயத் திருத்தல் செய்வாம். (௧௨.)

## அவையடக்கம்.

இலங்குமா தவன்றயிலும் பாற்கடலை யொருதுரும்பி லிணக்கி யூருஞ், சிலம்பிறா வினைப்பிணைத்துக் கடைந்தமுதம் பெறுமொரு வன் செய்கை போலாம், வலந்தநூல் பலவுணர்ந்து வாய்த்தவறி வாலடங்கி மலமோர் மூன்றுந், தொலைந்தபே ரறிவாளர் முன்னர் யான் றமிழ்பாடத் துணியு மாறே. (௧௩)

## சிறப்புப்பாயிரம்.

கருணைமிகு நந்தியுரைப் படிசூத மாமுனிவன் கழறு மாறே, தருமைவரு மழகியசிற் றம்பலசற் குருவருளே தரித்து நாளு, முரு கனெனக் கலையுணர்ந்த சரவணமா முனியருளான் மொழிகென் றோத, விருநிலத்தி லுயர்களந்தை யாதியப்பன் பசுந்தமிழா லியம் பல் செய்தான். (௧௪)

பாயிரமுற்றிற்று.

# முதலாவது

## அனுகூலச்சருக்கம்,

முந்து பூதலம் புனலெரி யனிலம்வான் முதலா
விந்து சேகரன் றிருவரு ளாற்றரு மிறையோன்
றந்த நால்வரு ளொருவன்மா தவமுடைத் தலைவன்
சிந்தை தூயனுன் மறையெலா முணர்ந்திடுந் திறலான். (௧)

அன்ன மாதவன் றன்மையா முரைப்பதெ னரன்முன்
பின்னு மீங்கிவ னுயிரு னென்னலாம் பெயரோ
வுன்ன ருஞ்சனற் குமரனுங் கன்னவ னொருகா
லின்னல் வல்வினைப் பிறவிவே ரறுப்பதற் கெண்ணி. (௨)

முண்ட காசனத் திறைவனுந் திருமகண் முயங்குந்
தண்டு ழாய்நறை கமழ்புயத் தமலனுந் தரள
மண்டு தெண்டிரைப் புவனமுங் ககனமும் வணங்கு
மண்டர் நாயக னுறைதிருக் கயிலைவந் தடைந்தான். (௩)

வெள்ளி மால்வரை யெய்திய முனிவரன் வியப்பாய்க்
கள்ளு லாமலர்க் கொன்றையான் முன்றிலிற் கடுப்பாற்
றள்ளி வேத்திரத் தாலிமை யவர்களைத் தடுக்கும்
வள்ளல் பாலுற மருவினன் வணங்கினன் மகிழ்வால். (௪)

ஆர்வ மீக்கொள வந்தணன் வணங்கலு மறிவாற்
சீரி யோர்புகழ் நந்திவா னவனருள் சிறந்து
தேரு மாதவ நின்வர வுரையெனத் திளைக்கும்
வேரி நாண்மல ரோன்றரு முனிவரன் விளம்பும். (௫)

ஐய நீதெரி சித்திடின் முத்தியை யளிக்கு
மெய்ய ருட்சிதம் பரநகர்ப், பெருமையும் விமலன்
பைய ராவணைக் கண்ணனும் பிரமனும் பரவி
யுய்ய முன்னடம் புரிந்தது மன்றுநீ யுரைத்தாய். (௬)

அன்று கேட்டியான் புனிதனு யினனுன தருளா
லின்று மாலயற் கரியவன் றருவனத் திலகு
மன்று ளாடியாந் தெரிசனே வழங்குவோ மகிழ்வா
லென்று கூறின னெனுமுரை கேட்டன னினிதின். (எ)

அந்த மாக்கதை கேட்பதற் காதர வடைந்தே
னெந்தை கூறுகென் றருந்தவன் பின்னுமீ திசைப்பான்
பந்த வல்வினைப் பிறவியின் வேரினைப் பறிப்பான்
வந்த வெற்குநீ யளிப்பதுன் றன்மையின் வழக்கால். (அ)

தவமி லாதவ ராயினுந் தனையடைந் தவரை
யவல நீக்கியாங் கவர்தமை யளிப்பதுன் னறனும்
புவன மூன்றினு மறிகலாப் பொருளுனக் குளதோ
சிவன ருட்டிற நீயலா லுலகிலார் தெரிப்பார். (கூ)

நறிய கொன்றையான் பெருமையுங் கீர்த்தியு நலனு
மறிவை நீயத னுலுனே யன்பினுற் கேட்பான்
குறுகி னேனரன் காதையி லொருபொருள் கூறச்
சிறிது கேட்பினு முத்திவந் துறுமெனுந் தெளிவால். (க0)

அன்ன காதையை யன்பினு லுரைத்தரு ளடிகேள்
பொன்னி லங்கிய புரிசடைப் பரமனே பொருவு
முன்னே யூன்புகழ்ந் துரைப்பதற் கியலுமோ வுரவோ
யென்ன வின்னண முனிசொல நந்தியு மியம்பும். (கக)

## வேறு.

முனிவரி லுயர்ந்த மூதறி வுடையோய் முண்டகப் பொகுட் டில்வீற் றிருக்குந், தனிமுதற் கடவு ளறிவரும் பரமன் சகமெலா நிறைதலாற் றயங்கும், புனிதனு லயமெப் புவனமு மெனினும் போதமெய்த் தொண்டர்நெக் குருகிக், கனியுமன் பதனுற் றவத்தி னுல் யோகக் காட்சியாற் கடவுளங் குவக்கும். (கஉ)

அவ்விட முழுது மரனினி துறையு மாலய மெனப்படு மவற் று, ணல்வனந் தீர்த்த நதிதவ மிவற்று னலமிகு மோரொரு தலத்தி .

னிவ்வயிற் கருணைத் திருக்கணேக் கருளி யேத்தினோர் தமக்கெலா மிரங்கி, நவ்வியங் கரத்தோ ணங்கவர்க் கியைந்த நல்வரம் பலபல நல்கும். (கங.)

விரும்புநல் வரங்க ளாங்கவர்க் களிப்ப மிகுந்தவத் தலத்தினும் விளங்கித், திருந்திய மனத்தி லார்வமீ தூர வடியர்சே வித்தின்பந் தெவிட்ட, விருங்கடற் புவன முதலிய பூத மெவற்றையு மழித்து நின் றெரியுட், புரிந்திடு நிருத்த னன்பிஞ னடிக்கும் புண்ணிய தலமள விலையால். (கச)

அலகிலப் பதிக்கு ளோங்கிய பதிகள் சிலவுள வவற்றையென் குரவன், மலவிரு ளிரிய வுரைத்தன னெனக்கு மறைநெறி யொழுக்கமுந் தருமத். தலைமையும் பரமன் றிருவடிக் கன்புந் தகுதியும் வழாதமர் தவத்தோய், நலனுறு காத னண்பிஞ லுனக்கு நவையற மொழிகுவன் வகையால். (கரு)

இப்பெருங் காதை யின்னிக ரடியார்க் கியம்பிட வேண்டுமைந் தெழுத்துந், தப்பற வுரைத்து நீறிடா தவர்க்குஞ் சங்கரற் கன்பிலா தவர்க்கு, முப்பரம் பொருட்கு முதல்வனை யிகழ்ந்து முகுந்தனே முதலிய தேவை, யொப்பிலாப் பரமென் றுரைக்குநீ சருக்கு முரைக் கின்மா பாதக முறுமால். (கசு)

திருவெண்ணீ றணியா ருருத்திர வக்கந் தரித்திடார் சிவமறை புகலா, ருருகியா தரவா லரன்றனை நினையா ரோதிய வாரணத் தொழுக்க, மருவிடா ரரிய தங்குலத் தியற்கை வழுக்கினே ரீங்கி வர் மனித, ருருவுள ரெனினுஞ் சாதியிற் கலப்பா யுதித்தவர் நரகி லங் குதிப்பார். (கஎ)

ஓலமொன் றுததி யாலம்வந் துடற்ற வும்பரு முனிவரும் வெருவி, ஞாலமுண் டவனே சரணென வொளித்து நவைசெயும் வேழ மொன் றுதி, மூலமென் றழைக்கப் புறப்படுந் திகிரி முகுந்தனே பரமெனக் கால, காலனை யிகழ்ந்தோ ருயர்குல மெனினு மிழிகு லத் தவரெனக் கரைவார். (கஅ)

திருத்திய நீறு முருத்திர வக்கத் தெரியலுந் தரித்துமூ விலை
வே,லொருத்தனை யிதயத் திருத்தியைந் தெழுத்து மொருமையா
லுணர்பவ ரவர்பாற், கருத்துற வழுத்து மன்பினே ரிவரைக் கதழு
டைச் செருக்கினுற் கழறி, யுருத்தவர் பொருவி லுயர்குல மெனினு
மிழிபிறப் பினரென வுரைப்பார். (கசு)

வேறு.

போத நீற்றினைப் புனைந்துளோர் கண்டிகை பூண்டோ
ராதி யாயபஞ் சாக்கர மோதுவோ ரறிவான்
மாதொர் பாகனைப் போற்றினே ரிவர்க்கெலாம் வருண
பேத மில்லையென் றுரைப்பர்நூன் முறைதெரி பெரியோர். (உ0)

வேறு.

அந்தண ரரசர்கள் வணிக ராயினும்
பிந்தின ராயினும் பிறையு லாமுடி
யெந்தைபஞ் சாக்கர மியம்பு வாரெனி
லிந்திரன் மாலய னவர்க்கி ணையிலார். (உக)

எக்குலத் தாயினு மெந்தை நீற்றினே
டக்கமா லிகைபுனை யவர்க டோன்றிடி
லக்குல முயர்குல மக்கு லத்துளோர்
முக்கணு னருளினுன் முத்தி யெய்துவார். (உஉ)

ஆற்றருந் துயர்மிகுத் தாயத் தெய்தினு
நீற்றணி யமலனுக் கன்பு நீங்கினோர்
பாற்றரும் பெரும்பொரு ளணுவும் பற்றிடா
மாற்றருந் தீவினை பயக்கும் வாய்மையால். (உங)

பூந்தள வுறுமுகைப் பொம்மன் மென்முலை
யேந்திழை பாகனு மீசற் கன்பிலா
மாந்தர்கட் கணுவள வெனினும் வான்பொரு
ளீந்தவ ரவுரவத் தெய்து வாரரோ. (உச)

பெறலரு மானிடப் பிறவி யெய்ந்தவர்க்
குறுதியா மூதிய முலகில் யாதெனி
லிறுதியி லியாவையு மிறக்கு மெல்லையி
லறிவனுக் கொருமையா லன்பு பூண்பதே. (உரு)

மன்னிய வானவர் மற்று ளோர்க்கெலா
முன்னவன் றனக்குறும் பத்தி யான்முயன்
றுன்னரும் பூசையா லன்றி யோய்விலாச்
சென்மமு மரணமுந் தீர்க்க லாகுமோ. (உசு)

வேறு.

இன்னண மியம்பிய குணஞ்சரிதை யெல்லா
மின்னரு கிருப்பது நினைந்துமொழி கின்றே
னன்னர்மறை நூன்முறை நவின்றுயர் தவத்தோய்
முன்னுரை யியற்கையொழி வோர்க்குமொழி யேனல். (உஎ)

என்றுபுக லித்திற மியம்பமுனி கோள
வொன்றிய மனத்துவகை யுற்றெதிர் வணங்கி
மின்றிகழ் சடைக்கடவுண் மேயதல மெல்லா
மின்றினி துரைத்தியென நந்தியு மிசைப்பான். (உஅ)

வேறு.

திரமுறு கனக மேருமால் வரைக்குத் தென்றிசை நாவலந் தீவிற், பரவருந் தரும மனைத்தையும் பயக்கும் பாரத கண்டத்திற் றிரைபாய், சுரநதி முதலா வருநதி மருங்கிற் றுறுவனந் துன்றிய மலையி, லரனினி துறையுந் தலங்களூற் றெட்டா மவனியிற் கதி யரு டலங்கள். (உகூ)

இனையநற் றலத்து ளரன்றனக் குரிய வியற்கையா யெவர்க்கும் வல் வினையை, நினையுமுன் பகற்றுஞ் சிவதல மறுபத் தெட்டுள வி வையெலா மின்பாற், றனிவிதந் தோதிப் பின்னர்நீ கேட்ட சங்கை யுத் தரமெலாம் பகர்வேன், முனிவகே ளென்னுச் சிலாதன்மெய்ப் புதல்வ னவையெலா முறைமுறை மொழிவான். (கூ0)

## வேறு.

கண்ணுதலோன் கயிலையெனச் சிறந்துறையுங் காசி
 கருதுபிர யாகைபிதிர் கட்குமுத்தி யளிக்கும்
விண்ணவர்க ளெடாழுங்கயைகே தாரம்புட் கரஞ்சீ
 மிகுநந்தி வர்த்தனம்வர்த் தனமுனிவர் விரும்பு
மெண்ணரிய காளகூ டாதனநான் மறையு
 மேத்துகபி லாச்சிரம மிடரொழிக்க வெவரு
நண்ணியநன் மயூரவா கனத்தான மளகை
 நங்கோம தீச்சுரமா நலம்பெருகு நகரம் (கூக)

அக்கினிசை லேச்சுரம்வா னவர்க்குவரம் பயக்கு
 மானசம தக்கினீச் சுரமலக்கண் டவிர்க்கு
மிக்குளகோகன்னமொடு பிருகுகச்ச மழியா
 வீடளிக்கும் பரமசிவன் விண்டுவுடன் கூடி
யொக்கவுறை யரிகரேச் சுரமெனுமித் தலங்க
 ளுலகெலா மியற்றியளித் தழியினிற் றுடைப்போன்
செக்கரிளம் பிறைச்சடையிற் றிளைத்தெறியுந் தரங்கத்
 தீம்புனன்மா நதிக்கரையிற் சிறந்ததிருத் தலமே. (கூஉ)

விப்பிரர்சூழ் பற்பரேச் சுரம்விமலேச் சுரம்வான்
 வியக்கும்விசா லேச்சுரமா னந்தபத்தி ரமத்த
மொப்பிறுங்கேச் சுரம்வேத்தி ராரணியம் பாரி
 லுயர்வீர பத்திரம்பிப் பிலவனம்வா னுவக்குஞ்
செப்பிமொ காசநகர் புகழரம்பேச் சுரமேற்
 றிகழிந்த்ரேச் சுரம்புட்ப வனமறைக ளெடரிக்கு
மிப்புவியின் மிகுபாதா ளேச்சுரமித் தலங்க
 ளிலகியகோ தாவரியி னிருமருங்கிற் றலமே. (கூந)

வாய்த்தகா ளாஞ்சரங்கா ளாமுகேச்சு ரஞ்சீர்
 மகிபத்தி ரேச்சுரம்வாய் வீச்சுரங்கர் வேச
மாய்த்தமலந் தனைக்கடியு மறையிருத்தேச் சுரமேல்
 வரமளிக்குந் தும்புரீச் சுரமமல மான

வேய்த்தரள கிரையிலகுந் திருச்சயிலம் விளங்கும்
வியன்றிருக்கண் டேச்சுரம்வா மனன்மேவாச் சிரமந்
தூய்த்தவர்சே ரக்கினிசா லேச்சுரம்வ ராகேச்
சுரமிவைகள் கண்ணனதி சூழ்கரைமேற் றலமே. (௩௪)

உயர்ந்திசைக்கு மாகாளேச் சுரங்கலிங்கேச் சுரம்வா
னுவந்தேத்தும் பதரிவன முரகர்முனி வர்களு
நயந்துறையு மவிமுத்தேச் சுரம்புவன முழுது
நவின்றிறைஞ்சு சுக்கிரிவேச் சுரமிவைக ளூனுந்
தயங்குபுனற் றுங்கபத்ரித் தடங்கரைமேற் சிறப்பாந்
தலமாகும் விரூபாக்கந் தனையேயொப் பில்லா
வயங்குமணி கித்தவிலக் குமீச்சுரமா தவத்தோர்
வைகுமதங் கேச்சுரமா லேச்சுரத்தோ டின்னும். (௩௫)

திருக்கோடி சங்கரமா ரண்ணியகா னனமுஞ்
சிறந்தமா தவிவனமுந் திக[illegible]ங்கேச் சுரமும்
விருப்பான வசிட்டாச்சி ரமஞ்சிருங்கேச் சுரமும்
விமலனுறை சம்பாதீச் சுரமுமுயர் விசும்பிற்
றருக்கொடுசெல் சடாயுத்தா னப்பரியஞ் சாலந்
தரநகரு மெறிதிரைக டமனியமுங் கிரியின்
மருப்பிலகு கித்திலமும் வரன்றியரு கெறியா
வருபம்பை நதிமருங்கின் மருவுசிவ தலமே. (௩௬)

பரையுவக்கும் பார்ப்பதீச் சுரமும்மே லான
பாராவ தேச்சுரமும் வாரிபத்ரேச் சுரமும்
புரையறுகா ளேச்சுரமுந் திருக்கமலேச் சுரமும்
புகலரிய வக்கினிகெற் பேச்சுரமும் புலவ
ருரைசெய்சமீ வனஞ்சரா சனஞ்சரணீச் சுரம்பா
ருயர்ந்தயாக் கியவற்கேச் சுரம்யோகேச் சுரமு
மரனுறையு முமைகருப்பேச் சுரமுமுனி வரருக்
கருள்பனசேச் சுரம்வடவா ரணியமொடு பின்னும். (௩௭)

காரளிக ளிசைபயிலு மசுமந்த கவனங்
கருதுமே காந்தநக ரங்கரபேச் சுரமும்
பாருயரத் தீச்சுரமும் பலசவனப் பதியும்
பைங்கதலி வனமுநறைப் பன்மலர்த்தா திலகு
மேரியன்மா தளைவனங்கர்ச் சூரகா னனமு
மிருங்கதலி வனங்காமேச் சுரமுமிட ரிக்குஞ்
சீரிலகுங் களங்கரகி தேச்சுரமும் பரவுந்
திருப்பசுப தீச்சுரமுந் திருக்கறுக்குந் தலமாம். (௩அ)

கிட்டுறுமுன் றுயரகற்றுங் கேடில்பய னளிக்குங்
கிரகணியேச் சுரத்தொடுமேற் கிளந்தபல கருமம்
பெட்புறுதண் புனற்பரிகா நதிக்கரையிற் றலமாம்
பேசுமடி யவர்தமக்குப் பெரும்பதவி யளிக்கு
மட்டிலகுந் திருக்காளத் தீச்சுரமு மரனுர்
மருவுதிரு வேங்கடமும் வாய்ந்தகுக வனமு
மிட்டமுறுங் காகோல நகருமிமை யவர்க
ளேத்தேக பருப்பதமு மெழிற்றுரேச் சுரமும். (௩௯)

ஆனவயி ராவதமுந் தீர்த்தகிரி நகரு
மருட்பிரமேச் சுரமுமிறை யமர்ந்தபணீச் சுரமும்
வானவர்கள் பயிலப்ர வனமுமலர் வயல்சூழ்
மார்க்கண்டேச் சுரமுமுகில் வளையுமுயர் காவிற்
றேனருந்திச் சிறகரளி செவ்வழிகள் பாடச்
சிறந்தசங்க மேச்சுரமும் பரவுசெம்பொ னுரம்
பூவிறையுங் குழைகண்முகந் தெறிதருகல் லோலப்
பொன்முகரிக் கரைமருங்கிற் பொருந்தியமா தலமே. (௪௰)

## வேறு

பதரிவனஞ் சுரகண்டேச் சுரமே லானோர்
பகர்தன்மேச் சுரமுன்ன தாச லஞ்சீ
ருதவுகுக மலையுமதிர் திரைப்பா லாறு
முயர்நதியின் கரைத்தலமா மும்பர் போற்றுஞ்

சிதைவறுமங் கலவமிசங் காம கூடந்
 தீதறுகல் யாணபுர * நான்குந் தேரி
ல்திகமெனுந் தலமூலகி னதிக்கு மேன்மை
 யான பொன்னிக் கரைத்தலமா மறிவின் மிக்கோய். (சக)

ஈங்கணியம் பியவொருநூற் றெட்ட தாகு
 மித்தலமன் றியுமிவற்றின் மிக்கா மேன்மை
யோங்கிவரு காவிரிமா நதியின் றீர்த்தத்
 துயர்தலமோ ரறுபத்தெட் டுளவா மந்தப்
பாங்குறுநற் றலமவற்றிற் பரமா னந்தப்
 பாண்டரங்க நாடகத்தின் பரிசு காட்டித்
தீங்குறுவல் வினையகற்றி யிறைவன் மேவுந்
 திருப்பதியெட் டவற்றின்பேர் தெரியக் கேட்டி. (சஉ)

அல்லல்வினைப் பவமாற்றி யடியார்க் கெல்லா
 மானந்தப் பெருவாழ்க்கை யளிக்குஞ் செம்பொற்
றில்லைவனம் வெண்காடு பாரி சாதந்
 திருவளர்தென் கமலையொடு சீரார் கூட
லெல்லையின்மா மறைசொல்பாதா ளீச்சு ரத்தோ
 டிடைமருதூர் குடந்தையிவை யிறைவ னோடுந்
தொல்லைநக ரெனவிளம்பிப் பரம னோடுந்
 தொழிற்றிறமு மீதெனவே சொல்ல லுற்றான். (சங)

## வேறு

தேசுறுந் தில்லைச் சித்திர கூடத் திறமையிற் புண்ணியத் துருவா, மாசின்மந் தார வனமணிச் சபையில் வான்புக ழிடைமருதூரிற், பேசுநற் றலமாங் கும்பகோ ணத்திற் பெருவர மளிக்கும் வெண் காட்டி, லாசில்பல் லுயிர்க்கு மிறைவனு மொருவ னானந்தத் தாண்டவம் புரிந்தான். (சச)

---

* நான்கென்று பிரதிகளிற் காணப்படுகிறது—மூன்றென்றிருக்கவேண்டும்.

தென்றிருக் கமலைச் சித்ரபீ டத்திற் றியாகவி னோதநம் பெருமா, னென்றெடுத் துரைக்கும் பெயருடை யீச னினிதினு சனாட மு யர்ந்தான், சென்றுறு மால வாயெனு மதுரைச் சிவதலத் தினிலருள் சிறப்பத், துன்றினின் றயன்மால் பணிசெயப் பரமன் சுந்தர தாண் டவம் புரிந்தான். (சரு)

சுந்தரப் பெயரா நதிக்கரை மருங்கிற் றுதியவி நாசியாந் தலத் திற், பந்தவல் வினைக டீர்த்தபா தாளீச் சரமுதற் றிருப்பதி யதனி, லிந்துவும் பணியு மிதழியு நதியு மிலகிய புரிசடை யிறையோன், றந்திர மென்னு மூர்த்ததாண் டவத்தைச் சதுமுகத் தோன்றொழ நடித்தான். (சசு)

ஈண்டெடுத் துரைக்கு மெண்டல மவற்று ளியற்றருந் தவத்தி னோ ரெவர்க்கும், வேண்டுறு மடியார் தமக்குமெஞ் ஞான்றும் வே லைக டொறுமெழுந் தருளி, நீண்டவார் சடையான் பன்மறை வடி வாய் விறையருட் சத்தியோ டினிதிற், காண்டகு நடனம் புரியுமித் தலங்கள் காசினி தனிற்சிறப் பாமால். (சஎ)

இத்தலங் களிலே காரண மனந்த மியம்பிடிற் பெருகுமிங் கிவற் றைக், கைத்தலத் திலகு நெல்லியங் கனிபோற் காட்டினேன் றொகுத்துநன் கருத்தா, லுத்தம நீமுற் றவத்தினுற் கேட்கப் பெற்ற னை யும்பர்கோ னெனினுஞ், சித்தியா ஞான சிவதல மேன்மை கேட்பதற் கெய்துமோ தெரிக்கில். (சஅ)

மடனறத் தெரிந்து முத்தழ லோம்பு மறையவர் சங்கிதா னமுங் கோட், படவர வறுகு நறைபிழி யிதழிப் பனிமலர் மிலைச்சிய பவ ளச், சடைமுடிப் பெருமான் றனிப்பெருங் கோயிற் றானமுஞ் சந் திமண் டபமு, மிடர்கெட முறையா லிக்கதை யினிதி னியம்பிடு மிடனெனத் தகுமால். (சகூ)

ஆதிநா யகனு மரன்றிருச் சரிதை யானவிக் காதையாம் புரா ணம், போதனுன் மறைக்கு மேலதா மிந்தப் புராணமுற் றோதினு மிதனிற், பாதியா யினுமோர் சருக்கமா யினுமோர் பாடலா யினும்

பத மெனினும், நீதற வுரைப்போர் கேட்குநர் கயிலை சேர்ந்துவீ டடைகுவர் திண்ணம். (ருய)

ஆனவிக் காதை கேட்கில்யா ரேனு மவரவர் விரும்பிய தடைவார், தீனராம் வறிஞர் கேட்கின்மற் றவர்க்குச் செல்வமுற் றிமெகப் பெருத, பானலங் கருங்கட் கோதையர் கேட்கிற் பாலரை யினி தினிற் பயப்பார், வானுறு பூத மலகையிக் காதை கேட்குநர் பேர் சொல மறுகும். (ருக)

எனவருள் சிறப்பச் சிலாதனற் புதல்வ னியம்பலு மன்பினு லி றைஞ்சி, மனநெகிழ்ந் துருகி மெய்ம்மயிர் பொடிப்ப வழுத்திநான் முகன்றரு மறையோ, னினையாற் றலத்திற் றருவனத் தியல்புஞ் சிற் சபை மேன்மையு மெனக்கு, நினைவுற வுரைத்தி யென்றலு மியைந் து விமலனு நந்தியி[illegible]துரைப்பான். (ருஉ)

கரணமோர் நான்கு மின்னுயிர்க் கியைந்த கருவியு மறிவினுற் கயிலை, வரையில்வீற் றிருக்கு முக்கெணம் பெருமான் வயத்தவாக் கியமுது மறையோய், தருவனத் திலகுஞ் சிற்சபை மேன்மை சாற் றுவன் யானுனக் கதனை, யிருளறக் கேட்டி யதிற்றெறி சனமு மினியுனக் கெய்துமென் றுரைத்தான். (ருங)

ஈண்டியம் பியநற் காதையை முறையா லிசைப்பவ ரிசைத்திடு மொழியைப், பூண்டவன் பதனுற் கேட்பவ ரெவரும் போகமும் போதமு மடைவார், காண்டகு கமலப் பொகுட்டில்வீற் றிருக்கும் பிரமனுங் கண்ணனு முதல்வ, னீண்டமா முடியு மடியுமே யறியார் விமலன்றன் சரிதையார் தெரிப்பார். (ருச)

அனுகூலச்சருக்கம்

முற்றிற்று.

ஆகப் பாயிரமுள்படச் செய்யுள்-கூஅ.

# இரண்டாவது
## பாரிசாத வனச் சருக்கம்.

மங்கலஞ் சிறந்த பாரிசா தவன மான்மிய முரைப்பதற் கியைந்த, புங்கவன் கமலப் பூங்கழல் வணங்கிப் போதமே வியசனற் குமார, னங்கண்மா ஞாலம் புகழ்தரு வனத்தி னமைதியா வையுமியம் பெ னலுந், திங்கள்வாண் முகமு மிதயமு மலர நந்திவா னவனிவை செப்பும். (க)

தென்பழ னுகுத்த தேறலுந் தருவின் செழுமலர்க் குழைகளுந் தெய்வ, நன்மணித் திரளுந் தரளமு மகிலுஞ் சாந்தமு நாகவெண் மருப்பு, மின்னவிர் கனகக் குவைகளு மணைந்து விரிதிரை தாவுகா விரியா, முன்னிய நதியொன் றேரெழு நதிக்குண் முதன்மையா மொழிதரு நதியாம். (உ)

இனையமா நதியின் மருங்கில்வா னவரு மிருடியர் குழாங்களுஞ் சுருதிப், பனவரு மகலார் புண்ணிய முழுதும் பயத்தலாற் பல்லு யிர்க் குதவி, தனையருள் காதன் மிக்கவிந் நதியிற் றண்புன லமலமா யுலகிற், புனிதமா யநாதி யாயதெக் காலும் பொருவிலாப் போகமே யளிக்கும். (ங)

இந்தமா நதியிற் றீம்புனல் பருகி யியாவரு மிகழ்மது வருந்த வந்தபா தகம்போ மப்புனன் மூழ்கில் வல்வினை முழுவது மாயுஞ் சந்தன டவிக ளோங்கிய சையத் தடவரைச் சாரலே முதலாச் சிந்துவி னளவுந் திரைபரந் தெழுமித் திருநதிப் பெருமையார் தெரிப்பார். (ச)

ஆயவிந் நதியி னிருகரை மருங்கி லமரர்கின் னரரருண் முனி வர், தூயவிஞ் சையர்கள் சித்தர்க ளுரக ரெனுமிவர் தொல்லுருக் கரந்து, மாயையின் வடிவம் வேறெடுத் தினிதின் வைகுவ ரிருடி கண் டுலர்தூய், நேயமுற் றிறைஞ்ச விலிங்கமா முருவாய் நிலவணி மவுலியு நிலவும். (ரு)

பெண்ணொரு பாக னிலிங்கநல் லுருவாய்ப் பெட்புறத் தரிசனம ருளிப், பண்ணவ ரமர ரேனையோ ரெவர்க்கும் பரிவொடு மேற்கதி பயப்பத், தண்ணளி புரியு மித்திரு நதியின் சார்கரை மருங்குள தலங்க, ளெண்ணரும் பெருமை யிந்நதிக் கிணையா விருப்பவோர் நதிகளு மில்லை. (சு)

இத்தகைய காவிரியின் றென்பா லோங்கி
யிந்திரன்மா லயனமர ரெவர்க்கு மேலா
முத்திதருந் தருமகேத் திரமா மூவர்
முழுமுதலோன் கமலையெனு முதன்மைத் தான
மத்தலத்தி னிருதியுறுந் திசையி லோரொன்
றரையான யோசனைவிட் டப்பான் மேவு
மெத்தலமும் பரவுதரு வனமே மேலோ
ரியற்றருமா தவமியற்று மியற்கைத் தாமால். (எ)

வேறு.

இன்ன பொன்னிணர்கொள் பாரி சாதவன மெத்த லத்தினு மூயர்ச்சியாய்ப், பன்னு நான்மறைவ லோர்கண் மாதவர்கள் பழுதில் விண்ணவர்கள் பரிவினு, லுன்னு சைவநெறி வல்ல வுத்தமர்க ளிவ ரெ லாமுறைவ தாழிநாண், மன்னு காலையினும் வதிவ தித்தரு வனத்தியல் புகல வொண்ணுமோ. (அ)

வேறு.

எழில் வாய்ந் திலகு மிவ்வனத்தி லின்சொன் மழலை யஞ்சுகத் தோ, டொழியா திசைக்கு மாகமமு மிருதிப் பொருளு மூயர்மறை யும், வழுவா துரைக்கும் வரிச்சுரும்புண் மலர்ப்பைங் கோட்டி லி ளம்பூவை, யுழைசே ரிசைப்பூங் குயிலவைகேட் டுரையுத் தரங்கள் சிலகூறும். (கூ)

புலவுண் டெக்கும் வரிப்புலியும் புல்வா யினமு மொருசாரிற்
குலவுந்தறுகட்பிறையெயிற்றுக்கொலையேனமும்வெவ்வாய்ஞமலி
பலவு மொருபாற் பயிலும்விடப் பாந்தட் பகுவா யனையாக
வெலிகண் டெயிலு மரிமாவு மிபமு மொருபா லினிதியங்கும். (கo)

உகிர்வா ளூறுத்தி மதகரியி னுயிருண் டெக்ஞுஞ் சொரிகுரு திப், பகுவாய்த் தறுகட் கேசரியெண் பணைக்காற் பறவை யொடு துயிலும், புகழா வரவி ஞெடுகிரி விளையாட் டெய்தும் பொருந்தி யவண், மகிழ்வா லுழுவை முலைத்தீம்பால் வரமான் மறியுண் டிறு மாக்கும். (கக)

பொங்கும் பிரசத் துளிதூங்கும் பொலன்ரு தவிழ்க்கும் பசுங் கோட்டிற், செங்காற் றவள வோதிமமுஞ் சிறைமென் கிளியும் பூவைகளு, மங்குன் முழக்க மெனமுழங்கு மறைமா முனிவர் பன் னியர்க, ளங்க ணழைப்ப முன்றிறெறு மவரோ டினிதின் விளையா [டும். (கஉ)

இறையிற் கழியும் புழுமலத்தா லியன்ற வுடலந் தனைப்பெருக்கு முறுதி கருதி யூனயின்ற தீயோ ருரோமந் தொறுமூசி சிறுவித் தசைபீர்ந் தழலோங்கு நிரயத் தழுத்து மறலியெனு மறிவுற் றேயோ வருந்தாது னறுகு கறிக்கு மடுபுலியும். (கந)

உணர்வில் விலங்கும் பறவைகளு மொழுக்க முயன்று பகைநீங்கிப் பணிவு மருளு மெய்திடினிப் பாரி சாத வனத்தானத் தணுகு மாந்தர் பெறுமியல்புக் களவொன் றுளதோ வாதலினற் பிணிசெய் பிறவி வேர்களைந்து பெருவாழ் வளிப்ப தித்தலமே.(கச)

அளவில் போகத் தொடுபோத மருளு மிடனு யணிமேவி யொளிபெற் றரிய புண்ணியகேத் திரமா யுயரித் தலமதனிற் றெளியும் விரதத் துருவாச னிமையோ ருலகிற் சென்றணைந்து மிளிருங் கனகப் பூந்தருவை மேனாட் கொணர்ந்திங் கமைத்தன [னல். (கரு)

வேறு.

இமையவர் தன்மை யெய்திய முனிவ னித்தரு வமைத்திடு முன் னுங், கமையுறு புவியி லுத்தம தலமக் கற்பக வனமுறுந் தான, மமையுமத் தலத்தி லத்துரு வாச னரன்றிருப் பூசனை கருதி, நம ரெலா முய்யத் தன்றிருப் பெயராற் றீர்த்தமொன் றாக்கினனயப்பால்.

அந்தநற் றீர்த்த வேலையிற் புனித மாமிருத் திகைதனைக் கொணர்ந்து, கொந்தவிழ் பசும்பொற் பூந்தரு வடியி னுன்மறை கூறியவிதியாற், றந்தவே திகையின் மணலினு லிலிங்கந் தனைவகுத் தாகமந் தவறு, திந்திரன் பரவு பரமனைத் தாபித் தியற்றினன் பூசனை யினிதின். (கஎ)

மீண்டுமோ யிடையி லிமாசலத் துதித்த மெல்லிய றிருவுருவாக்கி, யாண்டநூல் விதியாற் பதிட்டைசெய் தமுத வல்லியென் றொரு பெய ரமைத்து, வேண்டிறு மடியர் பணிசெய வுமைக்கு மேதகு பூசனை யியற்றி, யீண்டிய பிரம கற்பமா மாயு ளெய்திய முனிவர னிருந்தான். (கஅ)

நினைந்துபற் பலகா லார்வமீக் கொள்ள நெஞ்சநெக் குருகியா தரவாற், கனிந்தறி வயர்ந்து மெய்ம்மயிர் பொடிப்பக் கட்புனல் சோரநாக் குழற, மனங்கவர் காம மாதியா வுரைக்கு மாசிரு மூன் றையு மகற்றி, யனங்கவே னுடலம் பொடிபட விழித்த வரன்வெளிப் படும்வகை துதித்தான். (கக)

மந்திர விதியா லினையன புகழ்ந்து மங்கலப் படிவமா யிலகு, மிந்துசே கரனை நாடொறு முனிவ னிறைஞ்சலும் யாவரு மியற்று, வந்தமின் மறையோன் றவத்தினுற் பெருகு மன்பினு னம்மண லிலிங்க, முந்துபா தலத்தி னளவும்வே ரூன்றி முழுமுத லிலிங்கமா யினதால். (உ௦)

ஆனதோ ரிலிங்கப் பெருமையைக் கருதி யன்பினு னெஞ்சநெக் குருகி, நான்மறை முனிவன் பன்முறை வணங்கி நவிற்றரும் பூசனை யயர்ந்து, வானவர் முதலா மற்றுளோ ரெவரு மகிழ்வுற வொரு மையா வழுத்தி, யேன்முறை யனந்த மாம்பல கற்ப காலமுந் தொழுமற வேலை. (உக)

அம்முனி புரியுந் தவத்தினுற் பரம னருளனு மதியினுற் கமஞ் சூன், மைம்முகி றவழும் பாரிசா தவனம் வளர்திருக் களருண்மற் றெவருந், தம்மில்வேற் றுமையாம் பகையுள தெனினுந் தம்பகை

தவிர்த்தறந் தவரு, திம்மையிற் பயக்கு மரும்பெற லொழுக்க
மியைந்தன ரியற்றருந் தவத்தோய். (உஉ)

இத்திறம் பலகா லருமையின் முனிவ னியற்றிடு பூசனைக் கிரங்கி
மத்தமு மதியும் புனைபுரி சடையு நீற்றொளி வண்ணமு நான்கா
மத்திருப் புயமு மான்மழுக் கரமு மணிமுகத் தழகுமெய் யருளான்
முத்திதந் தளிக்கு முக்கணும் விளங்க முழுமுதற் பரமனங் கெழு
[ந்தான். (உங)

நாடுமா தவனங் கொழுந்தருள் கயிலை நம்பனைக் காண்டொறு
மிறைஞ்சிப், பாடினுன் வியந்தான் றுள்ளினுன் றுள்ளிப் பன்முறை
பின்னரும் பணிந்தா, னுடினுன் கரத்தாற் றாளமிட் டுருகி யாங்
கவ னம்புயத் திருத்தாள், சூடினுன் றலைமே லிருகணீர் பொழியத்
தொழுந்தொறுங் காதலாற் றுதித்தான். (உச)

ஈறின்மா தவனின் றித்திறம் பரவி யேத்தலு மிறைவனு மகிழ்ந்து
வீறுசான் முனிவ வெவ்வரம் பெறநீ விரும்பினை யவ்வர மளிப்பேங்
கூறுநீ வேட்ட வரமென முனியுங் கொந்தழன் மெழுகென வுருகி
யாறுபோல் விழியிற் றுளிப்புன லொழுக வன்பினுற் றொழுதிவை
[யுரைப்பான். (உரு)

ஐயநீ புவனத் தலகில்பல் லுயிர்க்கு மறிவுமா யவ்வுயிர்க் குயிராய்,
வெய்யவல் வினையா யவ்வினைப் பயனுய் மேவினை நான்பெற
விரும்பும், பொய்யினல் வரங்கள் கேளெனப் புகன்றுய் போதமில்
புன்மையேன் புரியுஞ், செய்கையுன் செயலே யன்றியெற் குளதோ
திருவுளத் துலகெலாந் தெரிந்தோய். (உசா)

எனப்பல புகன்று பின்னரு முனிவ னிறைவனை நோக்கியான்
சாபந், தனைச்சொலி லெனக்குத் தவமிகச் சாபத் தொழிலைய
லோர்க்குமா தவங்க, ளனைத்துமன் றகல வுரமரு ளெனவாங் கவன்
றனக் கவ்வர மருளி, யினைப்புறு மன்ப ரிதயபுண் டரிகத் தமளியி
னிமலனு மகன்றுன். (உஎ

கறைமிடற் றமல னவ்வர மளிப்பக் காமமே முதலிய வாறு, மிறை தவிர்த் துயர்ந்த முனிவரன் விரத மிக்குற மனுவொரா யிரத்தி, னிறுதியி னளவும் பாரிசா தவனத் திறையவன் றிருவுள முவப்ப, மறையின்மந் திரத்தான் முறைமுறை பரவி வாசமா யவ்வயின் வதிந்தான். (உஅ)

அரும்பெறற் றவத்தின் மேன்மையாற் றருக்கிப் பின்னரம் முனி வெகுண் டலர்மே, விருந்தவன் றிருமா லிந்திர னமர ரெண்டிசைப் பாலரிங் கிவரைப், பொருந்துமோர் திரண மெனநனி யிகழ்ந்து போதனுக் கலகிலாப் புவியுட், டிருந்துபூ சனையின் றுகவென் றுடன்று தீத்தரு சாபத்தை விளைத்தான். (உகூ)

அன்றவ னிழைத்த சாபமுற் றதனு லம்புயத் தவன்றனக் கின் னம், பொன்றலில் புவனத் தவரெலாம் பரிவிற் பூசனை யாற்றிடார் புவிமேன், மன்றலங் கமலப் புதுமல ரமளி வானவன் கோயிலு மில்லை, வென்றுதம் புலனை யரனருட் பெறுவோர் வெறுப்புறிற் கெடாதவ ருளரோ. (௩0)

மிடையிருள் சித்துத் தெறுகதிர் பரப்பும் வெய்யவா னிரவிமண் டிலமு, மிடர்மிக நடுக்குற் றிவன்றவத் தழலா லெய்த்திடு மிந்திர னிமையோர், படரில்பண் ணவர்கள் பாதலத் துரகர் திசைதொறு மிவன்பெயர் பகரி, லுடலும்வெம் பயத்தாற் கரப்பர்பேய் பூத மீங்கிவ னேக்குமு னெளிக்கும். (௩க)

ஏலவார் குழலி பாகனுக் காளா முனிவர னின்னவா றெழுகுங், காலையிலொருநாண் மயனெனுந் தெய்வகம்மியன்றனை வரவழைத்து, மாவிரு ரெக்கும் விளங்கொளிப் பசும்பொ னுனவ மணிகிரை குயிற்றி, யாலமுண் டிருண்ட கண்டனுக் கினிதி னலய மியற்றென வறைந்தான். (௩உ)

வேறு

ஆயசொற் றலைமேற் கொண்டாங் கமரர்கம் மியனு மோங்கி மீயுயர் பாரி சாத வனாப்பண் விமலன் வைகப்

பாய்கதிர்ப் பரிதி கோடி யுதயமால் வரையின் பாங்கர்ச்
சேயொளி விரிக்கு மாபோற் செம்பொனின் விமானஞ் செய்தான்.

விண்ணுறும் பதவி நீங்கி மேற்கதி பெறுதல் வேண்டிக்
கண்ணகன் புவியின் மேலாங் கற்பகப் பொதும்பர் மேவித்
தண்ணில வெறிக்கு நாளுங் கோட்களுந் தயங்கு மாபோன்
மண்ணிய வயிரத் திண்கான் மண்டபம் பலவுஞ் செய்தான். (௩௪)

மின்றிரண் டிலங்க வண்ட கோளகை மேல தாகத்
துன்றிய சடிலங் காட்டிச் சுவணமால் வரைபோன் மண்மேல்
வன்றிறற் சூல மேந்தி யிறுதியின் மாதோர் பாக
னின்றன னென்னத் தோன்று நிரைமணிச் சிகரஞ் செய்தான். ()

படிகளே ழினையு மோலப் பரவையே ழினையுஞ் சூழ்ந்த
தடநெடுங் கிரிபோ னீண்டு தாரகை யுலகின் காறு
மிடையும்வெண் கொடிமீ தோங்க வியன்மணித் திரளின் கற்றை
புடைதொறுந் தயங்கப் பைம்பொற் புரிசையோ ரேழுஞ் செய்
[தான். (௩௫)

பவளமு முழுமா ணிக்கப் பன்மணித் திரளு மேன்மே
லவிரொளி பரப்ப நன்பொற் குறடும்வே திகையு மாக்கிக்
குவலயத் திழியும் பொற்பூங் கற்பகக் குழைக டோறுந்
தவழ்பசுங் குழவித் தென்ற றயங்குசா ளரமுஞ் செய்தான். (௩௭)

இப்பரி சியற்றி யீசற் காலய மிதனுள் வெவ்வே
றொப்பிலங் கரன்வேள் கால வயிரவ னொடுதண் டீச
னெப்புவி களுக்குங் கண்ணு மிரவியோ டங்கத் தேவர்
செப்பிய திசையின் பால ரிவர்க்குமா லயங்கள் செய்தான். (௩௮)

அயர்வறு பசும்பொற் கோயி லின்னன வமரர் நாட்டின்
மயன்வகுத் தமைத்து முன்சொன் மாதவ னுணை யான்மேல்
வியன்மறை விதியான் முன்சொல் விநாயக னாதி யாகப்
பயிலுறு தேவர்க் கெல்லாம் பலவிதப் பதிட்டை செய்தான். (௩௯)

ஏற்றுமத் தேவர்க் கெல்லா மித்திறம் பதிட்டை செய்த
மாற்றரும் புகழ்மைத் தெய்வ மயன்றனை முனிவ னோக்கி
மேற்றவத் தயனுங் காணு வியக்குஞ்சிற் சபையொன் றின்னே
நாற்றிசை முழுதும் போற்ற நடேசனுக் கியற்று கென்றான். (௪0)

வேறு.

அன்ன வாசகங் கேட்டலு மமரர்கம் மியனதற் கிசைந்தரி தாய, மன்னு மாதவ முனிவரன் மகிழ்வுற மலரய னெனச்செய்வான் மதித்து, மின்னி லங்கிய வயிரநற் றூணிரைத் தொளிர்தர மேவிய நான்கு, பன்ம ணிக்கொடு முடியுறப் பசும்பொனாற் பலவிதழ் நாற்பதும் வனைந்து. (௪௧)

எய்த ரும்பிரத் தாரத்ர யமுமொழி விரணிய கருப்பமு மியற்றிப், பைய ராமணிக் கற்றைகான் றொளிதரும் படிகொள்வே திகை முறை புனைந்து, துய்ய செஞ்சுடர்த் தம்பமு சிறுவியோர் சூழலிற் பலகதி ரனைத்துங், கைவி னலயன் வகுப்பதொத் திலகிய கன கமன் றமுமுன தாக்கி. (௪௨)

ஆன பன்மணி துவன்றிய கனகமா வம்பலத் தலகில்பே ரின்ப ஞான நாடகம் பயின்றிடு நடேச்சுரன் றனக்குநான்மறைவிதியதனாற் பேன வெண்டிரைப் பாற்கடலமளியி லறிதுயில்புரிதருபெருமான் றன்வ ணங்குறச் சபையினைப் பதிட்டிக்கு முறைப்படி யியற்றியத்
[தலத்தில். (௪௩)

பரவு மெந்திர ராசனை விதிமுறை பதிட்டைசெய் தன்னத னுப் பண், விரவு மந்திர ராசனை யமைத்தவ னடைவுற விதியினை நோக்கி, யுரைகொள் காமரா சியவெந் திரம்வகுத் துருப்பெறு முயிர்தொறு மொன்றாய்த், திரிவி லாதுறை முழுமுதற் கிசைந்ததோர் சிற்சபை யின்னணஞ் செய்தான். (௪௪)

தேவர் கம்மிய னியற்றுமம் முழுமணிச் சபையினைத் தெரிவுற நோக்கிப், பாவ வல்வினை போக்கிய முனிவரன் மகிழ்தலு மயனடி

பணிந்து, சிவ நாயக னுநடே சனுக்குருச் செய்திட வேண்டுமென் றிசைப்பப், பூவி னுன்முக னனையமா முனிவரன் மயன்றனைப் பார்த்திது புகல்வான். (சரு)

வேறு.

பொருவரும் விதிநூல் விஞ்சையிற் றெரிந்த புலமையோய் நன்றுநீ புகன்றாய், திருநடம் புரியு மீசனுக் குருவம் வேண்டுநீ செய்யென வதுகேட், டொருவியா தரவான் மாண்டொழிற் றெய்வ கம்மிய னியற்றுவா னுவந்தா, னருவமா யுருவாய்ப் பல்லுயிர்க் குயிரா மவன்றனக் குருவம்யார் வகுப்பார். (சசு)

சுடருமிழ் பருதி யாயிர கோடி யொருங்குறத் தோன்றிய தென்னப், படரொளி பரப்புங் கோடிமாற் றிலகு பசும்பொனுங் கிருபது துலாத்தான், முடிவில்பற் பலவா மிலக்கண முளதா முகுந்தனும் பிரமனு மஞ்ச, னடிமுடி யிவையென் றெளிதினிற் காண நடேசனுக் கோருரு வமைத்தான். (சஎ)

தொழுகுலத் துரவோன் மகிழ்வுற வமரர் கம்மியின் சோதனை மயர்ந்து, விழைமறை யாள ரருளிற்சக் கரப்ரத் தாரபூ ருவமுதல் விதியால், வழுவகல் வாத்து பூசனை முதலாம் விதானத்தி னுலவண் வனைந்த, வெழுதரு மெழில்கொ ளத்திரு வுருவி லிறைவனைப் பதிட்டைசெய் திப்பால். (சஅ)

இங்கரன் முதலாம் வானவர் சோமாக் கந்தன்மற் றெவர்க்குமா முறைமாற், பொங்கெழிற் படிவம் பலபல வகுத்துப் பதிட்டையும் புரிந்துபுங் கவற்குச், செங்கதி ராழி யொன்பது மிரந்த்ர மொன்பதுஞ் சிறப்பவொன் பதுகாற், றங்குமா மணித்தேர் மானிடப் பிரமா ணப்படி சமைத்தனன் பின்னு. (சகூ)

முராரிகே தனமு முறைமறைப் பிரமன் முதலிய தேவர்கே தனமும், பொராவருஞ் சமரிற் புறங்கொடுத் திரியப் போந்தது புவனகோ டிகளுஞ், சராசர முழுது மழியும்வே லையினுந் தனி

யுயிர்த் திடுவதித் தகைய, பராவரு மிடபப் பதாகையொன் றியற்றி யின்னன பணியெலா மயர்ந்தான். (௫0)

செயலரும் பதிட்டை விதியினிற் றவறு மற்றுள குற்றமுந் தீரப், பயின்மணிக் கோயி லியற்றியாங் கதனிற் றன்பெய ரிலிங்கமாப் பண்ணி, யியல்பெறப் புரிந்து பெருந்தவ னருளா லேடவிழ் மலரய னெனலா, மயன்முக மலரத் தவத்துரு வாசன் விடைதர வானுல கடைந்தான். (௫க)

இம்முறை மயன்செ யாலய மதனுட் டெய்வவிக் கிரகமற் றெவையு, மெய்ம்மையா யகிலப் பல்லுரு வனைத்தும் வியாபியாம் பரிசினுல் வியாபித், தம்முறை தேவ ராய்மகிழ்ந் தமர்ந்தா னருந்தவ முனிவனுக் கன்பான், மும்மலந் தவிர்த்து மேலனுக் கிரகம் பண்ணுவான் முழுமுதற் கடவுள். (௫உ)

எல்லையில் பெரும்பே றெமக்கருள் பரம னின்னண முறையு நாட் பரவிற், செல்கதி யளிக்கும் பாரிசா தவனத் தெம்பிரான் றிருவுளஞ் சிறப்ப, நல்லறந் துதிக்கும் வசிட்டனே முதலா மிருடிய ரால்விழா நடத்த, மல்லன்மா தவத்தா லுயர்துரு வாச வரமுனி முயன்றனன் மகிழ்வால். (௫௩)

சித்திரை மதியில் வளர்பிறைத் திதியின் மான்றலை நாளெ னுந் தினத்தி, லுத்தம வமையத் தங்குரார்ப் பணபூ ருவமுத லாப்புரிந் துவப்பாய், முத்தல மதிக்கு நான்மறை முழங்கத் தேவதுந் துபி முறை முழங்க, வெத்தரா தலமும் புகழ்தரு வனேசற் கெழில்பெற விடைக்கொடி யேற்றி. (௫ச)

விண்டொடுந் தரள வெண்குடை தயங்க விடைநெடுந் துவசம்வா னிரவி, மண்டில முரிஞ்சப் பாற்கடற் றிரைபோன் மணிகொள்சா மரைமுறை யிரட்ட, *வெண்டரு மளவி லரமடந் தையர்க ணடித்திட விமையவ ரெவருங், கண்டுகண் களிப்பக் கணபதி முதலாங் கடவுளர் விழாத்தின மயர்ந்து. (௫௫)

**பா**தலத் துரக ஞயிரஞ் சுடிகைப் பன்மணிக் கற்றைகான் றிலங்க, வாதவன் புரவி யிரதமுந் தலைசாய்த் தயர்வுற முனமயன் வகுத்த, மேதகு கனகக் கொடிநெடுந் தடந்தேர் விழாவுமாங் கயர்ந்துசித் திரையா, மோதுநாண் மகிழ்வாற் றீர்த்தவுற் சவமு மொளிபெற வாற்றியங் குவந்து. (ருசு)

**ப**ற்றறத் துறந்த பண்ணவர் மறையோர் சூழ்வரப் பாரிசா தவனத், துற்றுவா ழெமது கண்ணுதற் கயிலை யொருவனை வெள்ளிடை வணங்கி, யற்பொடுங் கரத்தாற் ருளமிட் டுருகிக் காதர வாதரம் பெருகப், பெற்றநல் லறிவாற் றவத்துரு வாசன் பெரிதுவந் தேத் தினன் பின்னர். (ருஎ)

**ப**ரந்தொளி யிமைக்குங் கயிலையின் முளரிப் பண்ணவ னுலகினிற் பரமன், சுரந்தருள் விளைப்ப வுற்சவ மியற்று மியல்பெனத் தொன் னிலத் தெளிதின், வீரந்தருங் கனகக் கற்பக வனத்தி லின்றயர் விழாவென மலரோன், புரந்தரன் முதலா விபுதர்மற் றெவருந் தவத்துரு வாசனைப் புகழ்ந்தார். (ருஅ)

**ப**ரவைசூழ் புவனப் பரப்பினு மோரேழ் பாதலத் திடையினும் பரந்து, விரவுவா னகத்து மருவிய தேவர் விஞ்சையர் கருடர்கிம் புருடர், பொருவில்கந் தருவர் கின்னர ருரகர் தானவர் யாவரும் புரிவாய்த், துரிசிக றுருவா சன்றனை நோக்கித் தூயரா யவரவர் துதித்தார். (ருக)

**தூ**ர்வையை நிகரு மாதவன் றவத்தின் ருென்மையாற் புரந்தரன் முளரிப், பேரெழிற் பிரமன் பதமெலா நடுங்கு மெனிலவன் பெரு மையார் புகல்வார், வேரியங் கடுக்கை வேய்ந்தவ னடியார்க் கறி யலா மாதலால் விரிநீர்ப், பாரின்மா னவர்கள் யாவரும் பரமன் பத்தரே யாகவிப் பாங்கால். (சுo)

**அ**ன்னநற் றவங்க ளியற்றிய முனிவ ஞண்டரன் விழாமுடி வதனிற்,பின்னருங் களரிப் பரனையோர் கோடி மாமதி யளியொடு ம் பிறங்க, வுன்னுமோர் கோடி யாதவர் குழுமி யுதயமால் வரையிடை

யுதித்தாங், கென்னமுன் னினன்ற னிதயபுண் டரிகத் தெக்கர ணமும்விடுத் தினிதின். (௬௧)

மூஞமா தரவா லருந்தவ முனிவன் முன்னூமுன் முக்கணெம் பெருமான், வேளொடு நந்தி பிரமத கணங்கள் விண்ணவர் கின்னர ரியக்கர், கோளில்கு ரியர்பன் னிருவரெண் வசுக்கள் குலவுருத் திரர்பதி னொருவ, ராஞகந் தளிக்கு மடியரீங் கிவர்கள் சூழ்வர வாங்கெழுந் தனஞல். (௬௨)

எழுந்தருள் கயிலை யிறைவனைப் பரவிக் காண்டொறுங் காண் டொறு மிறைஞ்சிச், செழுந்தவ முனிவன் மெய்ம்மயிர் பொடிப்ட விழிபுனல் சிதறவா னந்தம், பொழிந்திடப் பலகா னெஞ்சநெக் குருகிப் புகழ்தலு மழுவலான் புரிவாற், செழுந்தவ முனியை யன் பினு ணேக்கிச் சொல்லின னீதவன் றுதிப்ப. (௬௩)

அறவரி லுயர்ந்த நற்றவத் தோய்நீ யன்பினு லெமக்கடி யவ ஞய்ச், செறிவுறு மருளாற் பூசனை புரிந்து திவ்விய வுற்சவஞ் செய்து, பெறலரும் விரதம் பூண்டனை மகிழ்ந்தேம் யாதுகா ரண மினிப் பெறுதற், குறுவரம் யாது கருதினை புகலென் றுரைத்தனன் பின்னரு முரைப்பான். (௬௪)

ஐந்தவித் தான்ற மாதவத் தோய்நீ யவாவுறும் வரங்களன்மற் றனைத் துந், தந்துனக் கருள்வோந் தொண்டருக் குதவா வரமிலை விரை வினிற் றக்க, மந்திர முறுமற் புகலென முனிவன் பின்னரும் பன் முறை வணங்கி, யிந்துசே கரன்ற னிணையடிக் கமல மேத்தியாங் கிவையெடுத் திசைப்பான். (௬௫)

சகதல முழுதும் வியாபியா யழியாச் சராசர வுயிர்க்கெலா முயி ரா, யகமொடு புறமா யிருவினைப் பயனுய்ச் சுவர்க்கமா யருநர கமு மாய்த், தகைபெறு மறிவாய் மறவியாய்ப் பிறிவில் சச்சிதா னந்தவா ரிதியாய், நிகரிறப் பரமா நிருமல வரந்தா னின்றறி சனத்தின்மே லுளதோ. (௬௬)

பற்பல விரத மருச்சனை யோக பாவனை யிவையெலாம் பயின் றும்; பிற்பெறுபயன்யா துன்றரி சனமாம் பேறலாற் பிறிதுவே றுள தோ, வற்புதா வுன்றன் றிருவனுக் கிரக மருள்வதே பெருவர மதன்மேற், சொற்றிடும் வரம்யா னறிகிலேன் றெரியச் சுருதிக ளுரைப்பது மிதுவால். (கூஎ)

அலகிலா ரணங்க ளாகம புராண மருமறை மற்றுள பலவாங், கலைகளு முனது காட்சியே பயனென் றியம்பிடு முனிவரர் கருத்தா, னிலைபெற வுரைக்கு மொழியுமீ தன்றி நின்றரி சனமலா வரத்திற், பலன்வறி தெனப ரெவருமா தலினு லெனக்கிது வேபெறும் பலனும். (கூஅ)

ஆரண முழுது மறிவுரு நீயின் றறிவுற வீண்டெழுந் தருளுங், காரண மடிகேள் யாதெனக் குனது காட்சியாற் பாக்கிய மனைத் தும், பூரண மாவின் பெய்திய தடியேன் புனிதனு யினனுன தரு ளான், மேருவுந் திரண மெனக்கினை யொருவர் விண்ணினு மண் ணினு முளரோ. (கூக)

மெல்லிய திரண மாயவென் றனக்கு வெளிப்படத் தோன்றினை யதனூற், புல்லிய னெனினு நின்னனுக் கிரகத் தினுக்குரித் தாயி னேன் புரியும், பல்பெருந் தவமும் பயிலுநான் மறையுஞ் செபங்க ளுங் கைவரும் பலனு, நல்கின வெளியேற் குன்றரி சனத்தா லெனப்பல வின்னன நவின்று: (எ0)

அளிதவ ழிதழித் தெரியல்வா னவனைப் பின்னரு மருந்தவன் வணங்கித், தெளிவுறு மறிவா லீதெடுத் துரைப்பான் சிவபுரத் திறைவனீ யென்பாற், களைகணு யளிக்கும் பெருவர முதவக் கரு தினு லஃதுரைத் தருள்பின், பெளியனீ புகலு மவ்வரங் கேட்ப னென்னலு மெம்பிரா னியம்பும். (எக)

தீவலரும் விரத முனிவரின் மேலாந் தவத்தினே யடியவர் தமக் கும், புவிமுத லொருமூன் றுலகினு மற்றைப் புறத்தினும் பூருவங்

கொடாத, வுவமையில் வரமும் பயனுமில் லெனமுன் புரைத்தன மினியுரை யுளதோ, விவனுனக் கியன்ற வரமிது வெனக்கூ றென முனி வரனுமீ தியம்பும். (எ௨)

அண்ணனீ கனகப் பொதுவினிற் புலிக்கா லருந்தவன் பதஞ்சலி பரவப், பெண்ணணங் கொருபான் மகிழ்வுற வமரர் பிரமன்மா லிந்திரன் பிறரு, முண்ணெகிழ்ந் திறைஞ்ச வனுக்கிர கந்தா ...ல கெலாஞ் செயும்பொருட் டேவோ, ரெண்ணரும் பரமா னந்தநா டகமுன் பியற்றினை யங்நட மின்னும். (எ௩)

யான்றவ மிழைக்கு மித்தரு வனத்தி லினமணிக் கற்றைகான் றிலங்கி, வான்றொடுங் கனகச் சிகரமா மன்றின் மலைமக ளொடு நடித் தருணீ, யான்றநல் விரத மித்தலத் தடியே னுற்றிய தப் பொருட் டெனக்கன், றீன்றவா னென்னக் கரைந்துமா தவனீ தியம்பமேற் பரமனு மிசைப்பான். (எ௪)

சச்சிதா னந்தத் தாண்டவந் தொழுதத் தரிசனந் தனைப்பெற நாளு, மிச்சையா முனிவ வம்முறை நடன மியற்றுவோ மெனப் பின்னு மிசைப்பான், முச்சகம் பரவுங் கந்தமா தனத்தி லறுபதி னுயிர முனிவர், மெச்சிய சைவ நெறியுளார் புனிதர் மாதவம் யாவையு மிருந்தோர். (எ௫)

அந்தநற் றவர்கள் பாலர்தம் பாலர் சிறுவர்நற் கிளையொடு மமர்ந் தோர், மந்திர மறையோ ராங்கவ ரெமது மாநடத் தரிசன மகிழ்ந்து, வந்தனை புரியுங் கருத்தினால் விரதம் பூண்டெமை வழுத்துவோ ரின்னோர், தந்தமர் முதலர் மனைவரும் பாற்ப கற்பத்தி லிம்பரிற் சார்வார். (எ௬)

மாலைவெள் ளருவி மணிகொழித் திழியுங் கந்தமா தனவரை மருங்கிற், சால்புறு முனிவ ரெய்துநா ளெமது தாண்டவ தரிசனந் தருவோ, நாலிரு திசையும் புவனமுந் தொழுநீ யவரொடு தரிசன நயந்து, மேலுறத் துதிசெய் தவருறு மளவு மித்தரு வனத்தினில் விரும்பி. (எஎ)

பூசனை யயர்ந்து சச்சிதா னந்தப் பொதுநடத் தரிசன மின்று
நேசமா முனிவ கண்டதாக் கருதி நீயயிர்த் திடாதுறை லவவே
லீசனு லுனக்கு மறையுப தேச மியற்றுவிப் போமென வியம்பி
மாசிலா விரத முழுவதும் புரியம் மாதவற் கபயமும் வழங்கி. (எஅ)

வேறு

பாகசா தனன்பொன் னாட்டிற் பாரிசா தவன நாப்ப
ணாகலோ கத்தின் காறு நண்ணியே சுயம்பு மூர்த்த
மாகிய சிவலிங் கத்தி னருந்தவன் பரமா னந்த
போகவா ரிதியின் மூழ்க மறைந்தனன் கயிலைப் புத்தேள். (எகூ)

அருந்தவத் துயர்ந்தோன் பின்ன ரத்தலத் தவர்க ளோடுந்
திருந்திய கயிலை யீசன் றேவரைக் காக்குஞ் செவ்வே
ளிரந்தவர்க் கருள்செம் முக்க ணிமயமா தெனுமின் னோர்க்குப்
பொருந்திய வறிவாற் பூசை விதிமுறை புரிந்து பின்னும். (அ௰)

ஆலய மெழுகி மீது ரன்பினு லலகு மிட்டுக்
கோலிநந் தனவ னங்கள் கொழுமல ரோடை செய்தாங்
காலமுண் டவற்கு நாளு மபிடேக மாதி யாக
வேலுநற் கரும மாற்றி யின்னண மொழுகுங் காலை. (அக)

வேறு.

மேம்படு தவத்து வியாதனே முதலா மிருடிக ளனைவரும் விர
விப், பரம்பரை யார்த்த பராபர முதலா நிருமலன் பாரிசா தவன,
மாம்பதி மருவி யாட்டயர் வோமென் றறைந்தது மருந்தவ னறி
வாற், றீம்பறப் புரியு மொழுக்கமுங் கேட்டு மகிழ்வொடுந் தருவ
னஞ் சேர்ந்தார். (அஉ)

சாங்கியம் பியாகற் காதையை யுரைப்போ ரினிதுறக் கேட்பவ
ரிவர்யாற், பாங்குறப் பயின்ற பண்பினே ரின்னோர் தம்மொடும் பரி
வுறப் பகர்வோ, ராங்கவர் குலத்துட் டோன்றினே ரெவரு மளப்

பரும் போகமுற் றளிகொ டேங்கமு ழிதழித் தெரியலெம் பெரு
மான் கயிலையி லெய்துவர் திண்ணம். (அ௩)

பாரிசாத வனச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௧௫௯.

## மூன்றாவது

## நிருத்தச்சருக்கம்.

மாமறை தெரிக்கும் வியாதனே முதலா மாதவர் தருவனத்
தடைந்து, தாமுறை புரியு மொழுக்கமுங் கந்த மாதனத் தடவரை
மருங்கிற், றேமில்பன் முனிவர் வந்திழைத் ததுவுஞ் சுருதிமே
லவனடித் ததுவு, மேமுறப் பிரமன் றருமுனி கேட்ப நந்திவா னவ
னிவை யிசைப்பான். (௧)

தென்னிகர் பசும்பூங் கற்பக வனத்திற் சார்ந்திடும் வியாதனே முத
லா, மன்னமா தவரோ டிலகெலா மளிக்கு நிமித்தமா வகிலகோ
டிகளின், மன்னுயிர்க் குயிரா மொருவனைக் கருதி யிரவியின் மண்
டிலங்கடுக்கப், பொன்னிலத் திமையோர் வெருவுறத் துருவா சன்
பெருமாதவம் புரிந்தான். (௨)

அருமறை வியாதன் கண்ணுவன் பரத்து வாசன்பார்க் கவனெ
னும் பெரியோன், பெரியபிங் கலன்கார்க் கியனுவ மனியன் பிரு
துசு கோத்திரன் பிரமன், றருமுதத் தியுன்மாத் தியுந்தனன் மங்கு
சதசிறன் பிராதிருத் தகைசேர், திருதுசங் கிருதி யுசிநரன் றிரு
வண் மவுனபார்க் கவனெனக் கிளர்ந்தோர்.

அத்திரி யேக நேத்திரன் றால லோசன் னங்கிரா விரத, வித்தகம் புரியுஞ் சங்குமா தவனிங் கிவர்தமா ணுக்கரும் விரவி, வித்திலம் வயல்சூழ் களந்தையி னளவுஞ் சாலைகள் புடைதொறு நெருங்கப், பத்தியி னியற்றிச் சுற்றொரு குரோசப் பரப்புற மருவினர் பரிவால். (௪)

நாற்கதி யகற்றி மும்மலங் களைந்து நால்வகைத் தோற்றமுங் கடிந்து, மேற்கதி யளிப்ப வாங்கவ ரெவரும் வேறுவே றிலிங்கமுண் டாக்கிப், போற்றரும் பூசை விதிமுறை யயர்ந்தும் பொருவில்சற் குருபுகல் விதியின், பாற்பட மறையின் மேற்படுந் தெய்வ வைந் தெழுத் தையுமுறை பயின்றும். (௫)

உணர்வினு லணியு முன்பெரும் பாவம் போக்கிடு முருத்திர வக்க, மணிகொண்மா லிகையை யழகுறப் புனைந்து மறையினுற் றிருவெண்ணீ றணிந்தும், பணவர வசைத்தோன் சச்சிதா னந்த நாடகங் காண்குறும் பரிவா, லிணரிள நறும்பூங் கற்பக வனத்தின் மாதவ மெய்தியு மிருந்தார். (௬)

அவிகொளா குதிசெய் புகையிருட் படல மவிர்கதி ராயிரம் பரம்புந், தவனமண் டலத்தி னெல்லையுங் கடந்து சேறலாற் றுளி முகி றவழு, மிவரிளம் பசும்பூங் கற்பக வனத்தி லிருடியர் தவாக் கினிக் கிடருற், றுவமையி லிரவி யொளித்தன னெனவாங் கிரவியி னொளிமழுங் கிடுமால். (௭)

ஓதுநான் மறையின் முழக்கினுற் றவள நீற்றொளி பரப்பலா லுலவாப், போதமா தவத்தால் வீக்கிய சடிலச் செந்துகிர்க் கற்றையின் பொலிவாற், றீதக னளின வக்கமா லையுமேற் றரித்தலாற் பாற்கடல் சிவணு, மேதகு நறும்பூங் கற்பக வனத்திற் றவம்புரி யிருடியர் வெள்ளம். (௮)

காலமங் குணர்ந்து மஞ்ஞைமுகில் பொழியு மாறெனக் கதுமிலம் முனிவர், வேலைதோ றோறு நான்மறை விதியா னித்திய வினையெ லாம் புரியச், சூல்வளை யினங்கள் வயிற்றினீன் றிடுற வெண்மணிச்

சோதிகான் றிமைக்குஞ், சேலுலாம் வயல்சூழ் நாடெலா விதிகள் சிறந்துபல் வளமுமா யினவால். (௯)

ஈங்கிவர் புரியு மாதவப் பெருமை யொருவரா லுரைப்பரி திவரிற், றீங்கற நகரு முண்டிநீத் தமைந்தோர் சிலர்புனல் பருகுவோர் சிலர்க, டேங்கிய வுதகத் தமிழ்ந்திரு பவர்கள் சிலர்மதி வதனமே நோக்கி, யோங்கிநிற் பவர்கள் சிலர்சரு கருந்தி யுறுபசியொழிப்பவர் சிலரால். (௧௦)

இருவகை புரியுஞ் சாந்திரா யணநோன் பியற்றுவோர் சிலருயிர்ப் பொடுக்கித், தருவெனப் பகர நிற்பவர் சில்லோர் தாளுற நிற்பவர் சிலர்தாட், பெருவிர லூன்றி நிற்பவர் சிலர்பஞ் சாக்கினி மத்தியிற் பிரியா, தரியநல் விரத மாற்றுவோர் சிலர்யோ கடைபவ ரலகின்மா முனிவர். (௧௧)

ஐம்பகற் கொருகா லுண்பவ ரநேக ரறுமதிக் கொருபொழு தயின்று, வெம்பசி தவிர்ப்போ ரவரினும் பலர்மூ வைந்துநாட் செலவுணல் விரும்பு, நம்புநீர் முனிவர் பலர்களின் னணநா நாவித நற்றவம் புரிந்தா, ரிம்பரெம் பெருமான் ஞானநா டகஞ்செ யமையமு மணித்தினெ ய்தியதால். (௧௨)

மிகுமணி யருவிக் கந்தமா தனமா மோங்கலின் மேவிநல் விரதம், புகரறப் புரியு மோரறு பதினா யிரவரும் புதுமதி புனைந்து, துகிரிளங் கதிர்தோய்ந் திலகிய சடிலத் தோன்றல்கற் பகவனத் திமைந்து, மகிதலந் துதிக்க ஞானநா டகஞ்செய் காலமங் குணர்ந்திவண் வந்தார். (௧௩)

வேறு.

நண்ணு மாதவர் தாந்துரு வாசனை நயந்தா
ரெண்ண ருந்துரு வாசனுச் சிரமமின் றெய்தி
மண்ணி னேமலம் புனிதமா யினமுனம் வகுத்த
புண்ணி யப்பய னிதுவெனப் பின்னரும் புகல்வார். (௧௪)

## வேறு.

அனைய மாதவற் காவிறை யாமுதற்
புனித னானந்த நட்டம் புரியுமா
லனைய மாமுனி சீரினை யந்தமா
றனைய னாயினுஞ் சாற்றுதற் கொண்ணுமோ. (௧௫)

என்ன மாதவர் யாவரு மின்னன
பன்னி யேத்தினர் பன்முறை யத்தவ
மன்ன னிங்கிவர்க் கண்டு மகிழ்வுறச்
சொன்ன யந்துபல் காற்றுதித் தானரோ. (௧௬)

மங்கை பாகன் றிருவரு ளான்மறை
யெங்கு மோது மியல்பி னிருடியுந்
தங்கு மன்புறு தன்னடி யாரொடு
மங்க வர்க்குப சாரமிக் காற்றினான். (௧௭)

இப்பண் பாக வியற்றிடு மாதவ
னாப்பி னல்லுப சார முவந்தன
ரப்ப யன்களு மெய்தின ராமென
வப்பெ ருந்தலத் தாங்கவர் வைகினார். (௧௮)

வதியுமா தவர்க ளனைவருங் கனக கற்பக வனேசன்மா மணிப்
பொற், பொதுவிலா னந்த நடம்புரிந் தருளு மளவும்வெண் புனிதநீ
றணிந்து, விதியினா லரிய வுருத்திர வக்க மாலிகை விதமுறப்
புனைந்தாங், கிதயநெக் குருகி யன்பினா லரனை யெண்ணியீங் கிவ
ருறும் வேலை. (௧௯)

திண்ணறும் பசுந்தோட் டளிதவழ் முளரிச் சதுமுகன் றாளமொத்
திசைப்ப, மண்ணரும் வயிரக் கிரிநிகர் பஃறோள் வாணன்வன் குட
முழ வியம்பப், பண்ணமை நரம்பிற் றிவவியா ழிருவர் பல்லிசை
யின்னமு துகுப்ப, நண்ணரும் புவனங் கிழியவிண் ணதிர நந்திமத்
தளியொலி திளைப்ப. (௨௦)

கடையுகத் ததிரு மிடியெனத் தேவ துந்துபி பன்முறை கறங்கக், கொடிபுரை மருங்குற் றரளவெண் முறுவற் குழைதவழ் கொடிய வாட் டடங்கட், பிடிநடைக் களபப் புணர்முலை யிமவான் பெண்ணணங் கின்னகை பிறங்கப், படிமுழு தளந்த சுடருமிழ் திகிரி மாதவன் முறைமுறை பரவ. (௨௧)

பணமணிச் சுடிகை யாயிரம் பரப்பும் பாதலத் தரகனு நறும்பூ, மணமலி பசும்பொற் கற்பக நாட்டின் வலாரியுங் காண்டொறும் வணங்க, விணரொளி தருமா தவர்கள்பன் னிருவ ரெண்டிசைப் பாலர்களின் றிறைஞ்சத், துணையில்வெள் விடைமேல் வருமுருத் திரர்கள் பதினொரு வருமுறை துதிப்ப. (௨௨)

வானவர் கருடர் சித்தர்கந் தருவர் கின்னரர் மருவுகிம் புருடர்
தானவ ருரகர் விருத்தரா காச வாசர்விச் சாதர ருரையா
மோனர்பன் னரிய வுத்தர குருவோ ரிங்கிவர் முறைமுறை பணிய
மேனகைத் திலகுந் தாரகைத் திரளும் பூதமும் விரவிமுன் றுதிப்ப.

பிள்ளைவெள் ளெகின மெனுநடைத் துவர்வாய்ப் பிறைநுதற் பேரெழிற் றிருவுங், கள்ளவிழ் கூந்தற் கலைமக ளோடு கவிரிதழ்ப் புலோமசை யணங்கும், வள்ளையங் குழைதோய் சேயரிக் கருங்கண் மதிமுக வுருப்பசி முதலாங், கிள்ளையங் குதலை யரமடந் தையருங் கிளருமன் புறத்தனி பரவ. (௨௪)

மூன்றரைக் கோடி தீர்த்தமுந் தெய்வ நதிகளுந் துகிர்க்கொடி முரித்துக், கான்றொளி விடுக்கும் வெண்மணி வரன்றிக் கரைதொறு மெறிதிரைக் கடலும், வான்றவப் பயனு வுருப்பல வெடுத்து விருபமாய் வலம்வர மகிழ்வாற், சான்றமா தவர்கள் குழுவெலா நெருங்கித் திசைதொறுஞ் சார்ந்துசே விப்ப. (௨௫)

பாதல முழுதும் பொன்னடித் துணையா வம்பர மருங்குலாப் பரந்த, மாதிர மனைத்துங் கரங்களா வயங்கத் தாரகை மாலிகை வனைந்து, மீதுயர்ந் திலங்கும் பிறைகுலா மவுலி யண்டத்தி னப்

புதம் விளங்க, வாதவன் கனற்று மெரிமதி யெனுமூன் றருள்விழி சுரந்தருள் விளைப்ப. (உ௬)

மருவிரி முளரித் தாளிலொன் றூன்றி யொருபதந் தூக்கிவான் முகட்டிற், றிரிதரு மிரவி யாயிர முதித்தாங் கெனவுமிழ் சேயொளி பரப்பத், தருவனத் திலகு மாமணிப் பொதுவிற் சக்கரச் சுழலெனத் தயங்கப், பிரமதாண் டவஞ்செய் தருளினன் றவளப் பிறைகுலா மவுலியெம் பெருமான். (உ௭)

மூவரும் பிரம ஞயிர நயனப் புரந்தரன் புணரியை யுழக்கித், தேவர்கட் கமுத முதவிய திகிரிச் செங்கண்மா யவனெனுந் திறத் தோர், ரேவரு முணர வரியவா னந்த நடம்புரி வேலையி னவரு, மோவியப் படிவ மொத்தனர் கரண காரிய மனைத்தையு மொழிந் [illegible]ார் (உ௮)

வேறு.

வெவ்வரா வுலவிய வேணி யான்புரிந்
தெவ்வுயிர் முழுவது மியக்கு மிந்நட
மவ்வியந் தவிர்தரு வாச னன்பினாற்
செவ்விய மனமுறத் தெரிசித் தானரோ. (உ௯)

ஆரண முழுவது மாய்ந்து மேம்படு
பேரறி வாற்றரி சித்த பேர்சிலர்
வாரியிற் றிரண்முனி வரரின் மாலகல்
சீரிய மனத்தினாற் றெரிசித் தார்சிலர். (௩௦)

கந்தமா தனகிரி யகன்று கண்ணுற
வந்தமா தவர்தரு வாசன் வியாதன்பின்
முந்துமா முனிவரர் பிறரு முற்றியாங்,
கிந்தவா றரனடந் தரிசித் தேத்தினர். (௩௧)

## வேறு.

வையக முதலா மைந்து பூதமும் பிறவு மற்றத்
தெய்வமு மிறையிற் பூழி யாயிறத் திரிக்குஞ் சூலத்
தையனின் ருடு மாற்றுற் றிருக்கள ரெனும்பே ராகி
யெய்திய புவன மூன்றின் மேன்மைபெற் றிலங்கிற் றன்றே. (௬௨)

கமலையிற் பிறந்து மேலாங் காசியி லிறந்துங் கண்ணு
லமைவுறு பசும்பொற் றில்லை யம்பலங் கண்டு மன்பாய்
விமலன்வா ழருணை நாளு முன்னியும் வீடு காண்பார்
சமைதிருக் களருள் யாதொன் றியற்றினு முத்தி சார்வார். (௬௩)

அலர்தலைப் புவன மீதிற் சிவபதி யனைத்தி னுந்தண்
மலர்விரி பாரி சாத வனமுதற் றலமாம் யார்க்கும்
புலைமல மூன்றும் போக்கி யிருவினைப் புணர்ச்சி நீக்கித்
தொலைவில்பே ரின்ப நல்குந் தூயவீ டளிக்கு மாதோ. (௬௪)

விருப்புறக் குருவின் றாரம் விழைந்தன ரேனு மாருச்
செருக்கினுன் மறையோர் பாலர் தெரிவையர்ச் செகுத்தா ரேனு
முருத்தெழுந் தொருவன் செய்த வுதவியைக் கொன்று ரேனுந்
திருக்கள ரடைந்தா ராயிற் றேவர்க்குந் தேவ ராவார். (௬௫)

முகிழ்விரி யிதழி வேய்ந்த புரிசடை முதல்வ னின்ன
தகையவாங் கனகப் பைம்பூந் தருவனச் சபையி னுப்ப
ணகிலமு முனிவர் விண்ணோ ரனைவரு மன்பி னோக்கி
மகிழ்வுற விருத்தந் தெய்வ வருடமட் டளவுஞ் செய்தான். (௬௬)

அண்டராண் டளவுந் தாண்ட வம்புரி யண்ணல் பின்ன
ரெண்டரு மனத்தாற் றியானித் திடுந்துரு வாசன் காமத்
தண்டிரைப் பரவை நீத்த தவமுனி வரையு நோக்கிக்
கண்டிரோ வெமதா னந்த நடமெனக் கழறி னுனல். (௬௭)

அம்மொழி யறையக் கேட்ட தவத்துரு வாச னுதி
யெம்முனி வரர்கள் யாரு மின்பமுற் றிறைஞ்சி யன்பான்

மெய்ம்மயிர் பொடிப்பப் பொங்கி விழிபுனன் மாரி சிந்த
மைம்மறை மிடற்றோன் கேட்ப வின்னன மகிழ்ந்து சொல்வார். ()

அறுபகை துரந்து நீங்கா மும்மல மகற்றி நான்கா
யுறுகதி யொருவி யோரே ழுற்பவந் துடைத்தார்க் கேனும்
பிறையணி யிறைவ நீசெய் பிரமதாண் டவத்தைப் பேணி
மறுவிலிந் தியத்தாற் றுய்ய மனத்தினு லறிதற் பாற்றோ. (௩௯)

எல்லையி லண்ட கோடி யெனுமொளிர் தரளங் கோத்து
மெல்லிடைச் சுணங்கு போர்த்த வெம்முலைக் கணியுங் கோலப்
பல்வளைத் தளிர்க்கை முக்கட் பராபரை யன்றி யுன்ற
னல்லெழிற் பரமா னந்த நடமெமக் குணர லாமே. (௪0)

ஆயினு மடியோ மெங்க ளறிவினுக் கியைந்த வாற்று
னியுகந் தாடு மாட னெஞ்சநெக் குருகி நோக்கி
மாயிரும் பிறவிப் பௌவ மலச்சுறா விழுங்கா வண்ணந்
தீயவை தவிர்க்கு ஞானப் புணையினு னீந்திச் சென்றோம். (௪௧)

இருவினை கழிந்தோங் காமத் தெல்லையுங் கடந்தோ நாளு
நிருமல மானோம் யாங்க ணிகழ்த்திய வபரா தத்தை
யருள்கொடு பொறுத்தி நீயென் றருமறை முனிவர் யாரும்
பரவருங் காதல் கூர்ந்து பன்முறை வணங்க லுற்றார். (௪௨)

வணங்கிய முனிவர் தம்மைப் பின்னரு மகிழ்ந்து நோக்கி
யணங்கரா வணியும் வேணி யமலனி துரைக்க லுற்று
னுணங்கிய வறிவின் மேலா மந்தணீர் றும்பாற் கந்த
னுணர்ந்துயர் துருவா சற்கன் றுதவிய வரத்தான் மேவும், (௪௩)

பதயிருந் தனுமா தத்திற் சுக்கில பக்கத் தாறுந்
திதிபுனற் கிறைநாள் கூடிற் கதியரு டினம தாகும்
வதியுமத் தினத்தின் மேவுங் குகனெழுத் தைந்தும் வாய்த்த
விதியினு னுங்கட் கெல்லாம் விரித்துப் தேசஞ் செய்வான். (௪௪)

கெழுமறைக் கிறுதி யாய வைந்தெழுத் தடைவிற் கேட்டுப்
பழுதற வுணர்ந்து காமப் பரவையின் பரப்பு நீத்திட்
டழிவுறாப் பரமா னந்தப் பெரும்பத மடைவீர் நீவி
ரெழுகவென் றிசைத்துப் பின்னு மெம்பிரா னியம்ப லுற்றான்.(சரு)

பாரிலின் றுதி யாகப் பாரிசா தவனத் தோங்குஞ்
சீரிய முழுமா ணிக்கச் சிற்சபை தெரிசித் தோர்கள்
சார்வரு மெமதா னந்தத் தாண்டவந் தரிசித்தார் போற்
றேரில்யா ரேனு மெய்தாச் சிவகதி யடைவர் திண்ணம். (சகு)

என்னவீ துரைத்து வாக்கா லிவ்வர மீந்தோ மிந்தத்
தன்னிகர் புனித க்ஷேத்ரந் தனிலெனச் சாற்றி யேத்து
முன்னருந் தவத்தோர்க் கெல்லாம் விடைநல்கிக் கயிலை முன்னிச்
சின்மயப் பயனு மெங்கோன் சிவகணத் தோடுஞ் சென்றான். (சஎ)

அந்தநாண் முதலா யாவ ராயினு மமரர் நாட்டின்
மைந்தரு வனஞ்சூழ் செம்பொற் பன்மணிச் சபையை நோக்கி
வந்தனை புரிவ ராயின் மழுவலான் வரத்தான் மாயாப்
பந்தவல் வினையை நீங்கிப் பரகதி யடைவர் மாதோ. (சஅ)

ஏழ்வகைப் பிறப்பிற் றோன்று மெவ்வுயி ரெனினுஞ் சேரிற்
றாழ்வறப் புனித மாக்குந் தருவனச் சபையின் மேன்மை
யூழ்முறை விரும்பிக் கேட்போ ரியம்புவோ ருலவா வின்பத்
தாழியின் மூழ்கி நாளு மழிவுறாப் போகந் துய்ப்பார். (சகூ)

கும்பமா மதியில் வைகும் பூரணைத் திதியிற் கோமா
னம்பிகை யோடு மிப்பே ரம்பலத் தாடன் மேவு
நம்புமத் தினத்தின் மாலைப் பொழுதினி னயந்து சேவித்
தெம்பெரு மானைப் போற்றில் விசேடமென் றியம்ப லாமால். (ருo)

இத்திற மாலைப் போழ்தி லிறைவனைத் தரிசித் தாராற்
பத்தியிற் கணிகை மார்தோண் முயங்கிய பழியும் வாயா

வித்துவே யெனக்கூ ருத பாவமு மிமைப்பி லேகுந்
துய்த்திடா விடத்தி லுண்ட தோடமு மிறையிற் போமால். (௫௧)

வேறு.

அடைந்த வர்க்கருள் பாரிசா தவனத்தி லரனுறை யாலய முன்ன, ரிடந்து மேற்றுரு வாசனுக் கியதுவா னிமையவர் முதலி னோ ரெவரும், படர்ந்து சூழ்வது லோகலோ காக்கிய மெனும் பெயர் பரித்ததோர் தீர்த்த, மிடங்கொ ளப்பெருந் தீர்த்தத்தி னண்பக லெய்தியங் கதனிடை மூழ்கி. (௫௨)

இயன்ற வான்பொரு ளந்தணர்க் கீந்துபொன் னிவர்சடை முடித்துரு வாசன், வியந்து போற்றிய தருவனத் தீசனை விதிமுறை தரிசனம் புரியி, லயர்ந்த பாவமு மிருவினைத் தொடர்ச்சியு மகன் றிடு மலகிலா வின்பம், பயந்து மேற்கதி தருமிது சத்திய மெனப்பர னியம்பினன் பரிவால். (௫௩)

வேறு.

சிறந்ததரு வனமோங்குந் தேவர் போற்றுந்
திருக்களர்மா நகர்மேவுஞ் சிவனை யோர்கா
லறிந்துதரி சித்தனரா யினும்யா தொன்று
மறியாமற் றரிசித்தா ரெனினு மன்னோர்
செறிந்தகிளை யொடுமெவர்தம் வழியு ளாய
தென்புலத்தோ ரொடுமுறையிற் சிவலோ கத்தி
லுறைந்திடுவர் சத்தியஞ்சத் தியமா மிந்த
வுரைதவறென் றோர்நரகத் துறுவ ராமால். (௫௪)

புலையரொடு பொல்லாத பதித ரேனும்
பொன்னவிர்பூந் தருவனத்திற் பொருந்துஞ் செங்கே
ழிலகுமணிப் பெருங்கோயில் வைகு முக்க
ணீசனைத்து ரத்தனுகி யிறைஞ்சி னோரேற்

குலவுவர்முத் தியிலிதுசத் தியமாந் தீராக்
   கொடியவினைப் பாவிகளுங் கோவு மாவு
மொலிகொள்பற வையுமளியும் புழுவு மேனுந்
   தரிசித்தாற் சிவலோகத் துறையு மாதோ. (௫௫)

தொண்டர்தமக் கரனுதவாப் பொருளொன் றுண்டோ
   தொல்லுலகிற் சிவனடியார் பெருமை சோதித்
தண்டர்தொழுஞ் சிவபெருமா னறிவ தன்றி
   யகிலகோ டியிலொருவ ரறியார் காண
கண்டன்மிகு பெருமைதனை யவரே யன்றிக்
   கருதுவா ரிலையதனாற் கமலத் தோனிற்
றெண்டிரையிற் றுயில்வோனிற் றேவர் தம்மிற்
   சிவனடியார் பெரியரெனச் செப்ப லாமால். (௫௬)

வேறு.

அநந்தமா யிரகோடிப் பிறவியிற்புண் ணியம்புரிந்தார்க் கல்லா லீசன், கனிந்துகா தலித்துருகு மிந்தமுழு மணிச்சபையின் காட்சி யெய்தா, மனந்தனு னினைப்பினுமேற் கதியளிக்கு மிச்சபையின் மகிமை யாவும், புனைந்துநா ருயிரமா முகமெனினு மனந்தனுக்கும் புகலொ ணாதால். (௫எ)

இளம்பருதி யொருகோடி யெனவிமைக்கு மிச்சபையின் மகிமை யீச, னளந்தறிவ தன்றியரி பிரமபுரந் தரர்முதலோர்க் கறிய லாமோ, கிளந்தமொழி யிவையனைத்துஞ் சத்தியஞ்சத் தியமிதனைக் கேட்போர் கற்போ, ருளங்குளிர வுரைத்திடுவோர் யாவரா யினுங் கயிலை யுறைகு வாரால். (௫அ)

விருத்தச்சருக்க முற்றிற்று.

---

ஆக்ச் செய்யுள் உ0௬

## நான்காவது

### பஞ்சாக்கரச்சருக்கம்.

பனிமதி நிலவி னவிரொளி பரப்பும் பவளவார் சடைமுடிப் பரமன், கனைகதிர் விரியும் பொற்றரு வனத்தி னுடகங் கனியுமின் ருடி, முனிவரர் பரவக் காட்சியாங் களித்த வரன்முறை முழுவதும் வியப்ப, நனிவிதந் துரைத்த நந்தியை நோக்கிச் சனற்குமா ரன்னிவை நவில்வான். (க)

மறைகளா றங்கம் பதக்கிர மங்கண் மனுமுதன் மிருதியா கமங்க ளறிவுறு புராண மேழெனுங் கோடிமந்திரமனைத்துமைந்தெழுத்திற் பிறவியென் றுரைப்பக் கேட்டன னுநா விதங்களாப் பேசரு மறைகட் கிறையென விசைக்கு மவ்வெழுத் தைந்தின் மான்மியம் விளம்புதற் கெளிதோ. (உ)

ஆயினும் விதிபூ ருவத்தொடு சாங்க மாம்படி மந்திரோத் தாரந், தூயமா மறையா மியந்திரோத் தார மோடுநாற் குலத்தவர் துதிக்கு, மேயவைந் தெழுத்தும் புகன்றிடு விதமு மந்திரத் திறையின்மான் மியமு, மாயையின் முனிவர்க் கறுமுக னுரைக்கு மார்க்கமுங் கூறென வுரைத்தான். (ந)

உந்திநாண் மலர்மே லயன்றரு முனிவ னுரைத்தலு மறுமுக னுவப்பா, யந்தமா தவரா மோரறு பதினு யிரர்க்கர னுனையா லறையு, மந்திர விதியு முறைமையு முணர்ந்து மலவிரு டிரக்குமா ஞான, நந்திவா னவனு மகிழ்வொடு முனிவ னயப்புற வீதென நவில்வான். (ச)

நன்குண முனிவ கேட்டியைந் தெழுத்து நவின்றிடிற் பேதமு மோரைந், தென்பரவ் வெழுத்தின் பகுதியா லவைதா மியம்பிடு மைந்தெழுத் தோடு, பின்பிரு மூன்று நாலிரண் டீரைந் தொருபனி ரண்டெனப் பெரிது, மின்புற வுரைக்கு மக்கர விதமுண் டைந் தெழுத் தாதியா விசைப்பார். (ரு)

கிரமமாவிருடி சந்தசு தியானந் தெய்வவந் தனத்தொடு கிளக்கும், வரன்முறை யிவற்றுற் பகர்வது முதல்யாம் வகுத்துரைத் திடுமெழுத் திவையுங், குருதிகொப் பளிக்கு நெட்டிலைச் சுடர்வேற் குழகனித் திறமியம் பினனுங், கிருடியர் பதினு யிரர்க்கொரு முகமா வறுமுகத் தாலெவ ரெவர்க்கும். (சு)

இன்னண முனிவ ரெனுமறு பதினு யிரர்க்கறு முகனினி தியம்பிப், பின்னரா ங்கவர்க்குச் செபித்திடும் விதியுந் தியானமும் விதியி னுற் பேறும், பன்னின னவற்றுட் சிறிதியா னுரைப்பன் பாங்குறக் கேட்டியென் றெவர்க்கு, முன்னுறும் பிரமன் றிருமகன் றனக்கு நந்தியம் பகவனு மொழிவான். (எ)

மோக்கசா தனமாஞ் சுத்தமாம் பஞ்சாக் கரம்பிர ணவத்தொடு மொழியி, லாக்கிய போக மோக்கசா தனமாஞ் சாந்தயாந் தத்தொடு மறையி, னீக்குதற் கரிய காமிய மளிக்கு நெறியிலா வறுமையை முழுதும், போக்குமோ ரிரண்டு சாந்தயாந் தத்தோ டகமகிழ்ந் தன்பினுற் புகலில். (அ)

செப்பிய சாந்த யாந்தமுன் றுடனே யைந்தெழுத் தையுமுறை செபிக்கி, லொப்புறு நலனும் வசீகர மளிக்கு முணர்வினு லித்திற முரைப்போர்க், கெப்பய னரிய தாங்கவ ரகத்து ளிச்சையாம் பொருளெலா மளிக்குந், தப்பறப் புகலுஞ் சாந்தயாந் தத்தின் றன்மையை யளப்பதற் கரிதால். (கூ)

செங்கதிர் விரிக்கும் பவளவார் சடைமேற் சிறுபிறை யிலகவா னுரக, கங்கணங் கமலக் கரந்தொறு மிலக வபயமும் வரதமுங் காட்டிப், பொங்கிய புலித்தோ லரைமிசை யார்த்துப் பொலிவுறும் வடிவமாய்ப் புரக்கு, மங்கணு யகனை நினைவது விதியா மோக்கபஞ் சாக்கர மறையில். (கo)

பண்ணவ னியற்று முலகெலா மழுந்தப் படுமெணி திரையெறிந் திழியுந், தண்ணதி பெருகும் வேணியுஞ் சயிலத் தையலோர் பாகமுந் தவள, வண்ணமு மாசப் பரமனைக் கருதி வாய்த்தலாற் காமிய மாகு, மெண்ணரும் போகப் பயன்றரு மிறவா முத்தியு மெய்தலா மியல்பால். (கக)

**பா**னிலா விரிக்குந் தடந்திரை யமுதப் பாகவான் பிறைச்சடை முடியுந், தேனுலாங் கமலக் கரதலத் தபய வரதமு மழகுறச் சிவனை, யானபொற் பசுந்தோட் டம்புயா தனத்தி லிருப்பதா வகமுறக் கருதி, மேன்முறை யட்டாக் கரத்தையு முரைக்கின் மிடியெலாம் வேரறக் கெடுமால். (கஉ)

வேறு.

**செ**ல்வ நல்குமெட் டிலக்குமி யொடுமெணி றிளக்கும்
பல்ல ணிக்கலன் பயிலலங் காரமும் படைத்து
மல்கு வண்ணமா நம்பனை மனமுறக் கருதிச்
சொல்லி லின்பமாம் வசியபஞ் சாக்கரச் சுருதி. (கங)

**அ**ட்ட மூர்த்தியா யனைத்துமாய் விளங்கிய வரனை
யிட்ட சித்தியி னிமித்தமா வின்னணங் கருதி
மட்டி லாரண மேழெனுங் கோடியா மறைகட்
கெட்டொ ணாதபஞ் சாக்கரஞ் செபித்திட லியல்பாம். (கச)

வேறு.

**எ**ந்திர முதலாம் பிரணவ மதனை யிருவிலத் திரேகையுண்டாக்கிச், சந்திர பீசங் கலைமுறை மாத்ரா வேட்டனம் விதியினுற் சமைத்து, முந்துமோ ரெழுத்தான் முத்திரை யாமைந் தெழுத்தினை முற்றுற வளைத்துத், தந்தவெந் திரத்தை மாயையால் வளைப்பிற் சத்திநல் லியந்திர மதுவாம். (கரு)

**பொ**ற்பசுந் தகட்டி லாயினும் வங்கத் தகட்டொடு பூர்சமே யெனினு, முற்பகுத் துரைத்த வியந்திரம் பொறித்து முறையினு வாகனம் பண்ணி, யற்பொடு பதினா றுமுப சாரத் தொடுமிருத் தருச்சனை புரிந்து, மற்றவை தரித்து மறையினுற் சந்தி வந்தனை செயிற்பவ மாளும். (கசு)

**கூ**றிய விதியா லியந்திரத் தகடு புனைந்துளோன் குவலயமுழுது, நீறுசெய் திறையிற் றரித்திடுங் கவர்வாய் நெட்டிலைச் சூலமொன் றேந்தி, யீறிலா னந்த நாடக மியற்று மீசனு மென்பது சரதம், வேறுரை யுளதோ வின்னணம் பலவு மெய்த்தவர்க் கறுமுகனு ரைத்தான். (கஎ)

உரைத்தமெய்ப் பஞ்சாக் கரத்தினைப் பரமன் சந்நிதி யினுமுமை முன்னுந், தரைக்குண்மிக் காய தெக்கணா மூர்த்தி சந்நிதி யினு மருந் தவத்தோ, ரருத்திசெய் துருவா சன்முத லெவரு முன்பொடு செபித்துவிண் புகழுந், திருக்கள ரீசன் வெளிப்பட வரங்கள் பெற்றனர் முத்தராய்ச் சிறந்தார். (கஅ)

ஆதலா லுணர்வின் மிக்கமா தவத்தோ யாத்தசற் குருவினை யடைந்து, மோதிய தரங்கச் சுரநதி யழைப்பான் முயன்றவ னெனப்பல முயன்று, மேதகு மறையு மறிவுறு வைந்தக் கரத்தை யும் விதிமுறை கேட்டுத், தீதறச் செபிக்கி லொருவனுங் கவனே சிவனெனச் செப்பலாந் திண்ணம். (கக)

சிவத்தினு லன்றிச் சித்தியா தைந்தக் கரமறை தெரிக்குமித் தலத்திற், றவப்பெரும் பயனு லோருருச் செபிக்கிற் றகுமுருக் கோடியாய்த் தவிராப், பவக்கருக் களைந்து மலபரி பாகம் பண்ணி மேற் கதியினைப் பயக்கு, முவப்பொடு மகிழ்ந்து பலவுருச் செபிக்கி லதன்பய னுரைப்பவ ரிலையால். (உ0)

அஞ்செழுத் துபதே சம்பெறுங் கால மாதியா யாண்டுதோறு மஞ்சினந் தவழும் பொழிற்றிருக் களருள் வருமுரு கனுக்கபி டேகம் விஞ்சிய சுவையா னிவேதனம் புரிந்து விசேடமாம் பூசனை யயர்ந்து நெஞ்சுறப் புகழ்வோர் தேவர்கோ னுகி நிச்சய முத்தரா குவரால்.()

வள்ளிமென் களபப் புணர்முலைக் குவடு தைவரு மணிநெடும் பணைத்தோள், வெள்ளிலைச் சுடர்வே லறுமுகக் கடவுண் முற்புகல் விதியுப தேசங், கொள்பவ ரெவரு முடிவில்பல் பிறவிக் குரை புனற் பரவையை நீங்கித், தெள்ளிய ஞானப் பெருவரம் பயக்குஞ் சிதைவிலா முத்தியைச் சேர்வார். (உஉ)

திருவெண்ணீ றணிந்தோ ருருத்திர வக்கத் தெரியல்பூண் டவர்சதா சிவன்பா, லுருகுமன் புடையோ ரிங்கிவர்க் கன்றி யைந்தெழுத் தோதுத ரீதாங், குருவுப தேச முறைமையி லைந்தக் கரத்தையுஞ் செபித்திடக் குணிப்பி, விருநிலத் தெவரு மெம்பிரான் கயிலை யெய்துவர் முத்தராயிருப்பார். (உ௩)

பூருவத் தெடுத்த வனந்தமாம் பிறப்பிற் புகலரு மிருதியும் பொருவி, லாரிய மறையு மியம்பிய நெறியிற் சேர்ந்துறு மவர்களா யமைந்த, சிரியர் பரம வனந்தெழுத் தினையுஞ் செபித்திடப் பெறுகுவர் செபித் தோர், பேரினை யுரைக்கி லிரிந்திடும் பூதப் பிரேதமும் பேய்களும் வெருவி. (உச)

அரிமுதற் றேவ ரெவரையும் புவன* மனைத்தையு மிறுதியிற் றிரித்து, விரிகதிர்ச் சூல மேந்திநின் ருடும் விமலனை யன்றிவே றுலகிற், புரிவுறுங் கடவு ளுண்டெனு மறிவில் புத்தரே யாதியாப் புகலும், பரசம யப்புன் னெறியடைந் தோர்க்குப் பரமனைந் தெழுத்தையும் பகரார். (உரு)

மனுமுதன் மிருதி யாவையு நான்கு மறைகளும் புராணமு மாறு, நனிவிதந் துரைக்கு மாகம மொருநா லேழையு முண்மையா நவிலும், புனிதரா யரன்பா லன்புளோர் தமக்குப் பொருவில்சற் குருமுயற் சியினாற், றனிமுதற் பரம னைந்தெழுத் தினையும் புகல்வது விதியெனத் தகுமால். (உசா)

சரதவே தாந்த சாரமாம் பஞ்சாக் கரத்தினைச் சண்முகன் மகிழ, வரனுப தேசஞ் செய்தனன் புரக்கு மந்தமந் திரத்தினை மறையான், முருகனே ரிருபத் தைந்தெனும் விதமாப் பணிவிடை முயன்றிடு முனிவர்க், கிருளறப் புகன்ற னம்முறை பேதா பேதத்தாற் பயன் களு மெய்தும். (உஎ)

அடிமுதற் சடில முடிபரி யந்த மக்கர ரூபமா னந்த நடமிடு மகேசற் காதலாற் பிரம தாண்டவ மாகுமா னடனஞ் சடைமுடி துளக்கிச் சச்சிதா னந்தத் தாண்டவந் தனைப்புரி நடேசன் வடிவிலோ ரைந்து வண்ணமாங் காலை யாதியா மாலையி னளவும்.()

காலையோர் யாம நண்பக லபரா னியமிருட் கலந்தெழு மாலை யேனுமிக் கால மைந்தினு மான்பாற் செந்துகிர் வெங்கன லிலகுங் கோலநற் பசும்பொன் மணியெனத் திகழுமாதலானடேசனைக்குலவு ஞாலமும் விசும்புஞ் சங்கம மெனவே நவின்றிடு நாமமு மாமால். ()

மிகவரம் பயக்கு முலோக்கிய தீர்த்த வாவியில் விருப்பொடு முழுகி, யகமெகிழ்ந் தொருகாற் றிருக்கள ரீசன் றனைத்தரி சிக்கி லாங் கவர்க்குப், புகருறு மவித்தை யால்வரும் போக வாழ்க்கையு மிருவினைப் புணர்ப்புந், தகவினு ணீக்கி யரன்சிவ கதியைத் தருமிதற் கையமொன் றுளதோ (௬0)

பல்லுயிர்க் குயிராம் பூரபர னுருவே யைந்தெழுத் துருவம்வேற் பகவ, னல்லதீண் டொருவ ரந்தமந் திரத்தை யறிந்தியம் புநரிலே யரன்பான், மெல்லியல் சிறிது மேலெழ வுணரு மதிற்கடு களவு வேல் விமலன், சொல்லின னென்பா லத்துணை யுரைத்தேன் முற்று நான் சொற்றிட வரிதால். (௬௧)

பாழிசால் பரமன் றிருத்தல மனந்தம் பகரினும் பாரிசா தவனங் கேழுறக் கிளர்ந்த தித்தல மிதனிற் கிளையொடும் வாசமா யுறைவோ ராழிசூ ழகிலத் தொருவரைப் பார்க்கி லாங்கவர்க் காற்றுதற் கரிதா மாழ்கிய பாவம் யாவையு மொழிந்து மழுவலா னுலகில்வீற் றிருப்பார். (௬௨)

மாகமா மதியின் மார்கழி மதியின் வளர்திதி யாறுறி னவர்க்கு மோகையாந் தருமத் தினமதின் முருகற் குவப்புட னித்தலத்துகந்து பாகமா மமிர்த மைந்தினுற் பலத்தாற் பான்மது முதலிய பிறவும் யோகமாம் பொருளான் மஞ்சன மாட்டி நிவேதனம் விதிமுறை [யுதவி. (௬௩)

மதுவிரி நீல வுற்பலத் தெரியல்வனைந்துவேற் குகன்பதம்வணங்கித் துதிசெயி லொருவ ராங்கவர் தமக்கெண் ணெண்கலை முழுவதுந் தோற்றுங், கதிருமிழ்ந் தவிரு முழுமணிச் சுடிகைச் சேடனுங் கரஞ் சிரங் கம்பித், ததிசய முறநல் லறிவுறும் பின்பு கந்தசா லோக்கிய மணுகும். (௬௪)

திங்களுக் கொருகான் மருவிடு முயர்கார்த் திகைவரு தினத்திலா யினும்பார், பொங்கொளி விரிக்கும் பிருகுவா ரத்தி லாயினும் புனிதமென் புனலாற், செங்கனித் திரளாற் பஞ்சகவ் வியத்தாற் றெள்ளமு தைந்தினுற் சிறப்ப, வெங்கதிர் வடிவே லிறைக்கபி டேகம் விதிமுறை செய்துபின் வியப்பால். (௬௫)

சுவையிரு மூன்றுந் தருவிவே தனங்கள் செய்துபின் றூபமே முதலா, மவ்வயெலா முறையாற் புரிந்துதண் ணலரா லருச்சனை விதியுளி யாற்றிப், புவனமும் விசும்பும் புகழ்திருக் களருளா றுமுகக் கடவுளைப் போற்றி, னவதலத் தெவருந் தனதனைப் போன்று நன்மலர்த் திருவொடு நயப்பார். (ருசு)

மகவிலா தவரு மகவினைப் பெறுவார் வறியவர் திருவொடும் வாழ்வர், மிகுபெரும் போகம் வேண்டினோ ரதனை மேவுவர் கல்வியை விரும்பி, மகிழ்வுற வேண்டு மவர்க்கது மருவும் வகுத்திவை யுரைப்பதென் முன்னம், பகர்விதி முருகற் கியற்றுவோர் வடிவேற் பகவன தருவினைப் பெறுவார். (ருஎ)

எயினர்தங் குலத்தி லேய்ந்தவன் றீயோ னெல்லையில் கொலைத் தொழி லியற்றி, யுயிரெலாஞ் செகுத்து நாள்பல கழித்தோ னொருவனித் தலத்தினி லொருநாட், பயின்மலர்த் தொடைய லறிவுறா தணிந்து பரமனுக் கன்னவன் பாவச், செயலெலா மகன்று திருபத யுதித்தா னித்தலப் பெருமையார் தெரிப்பார். (ருஅ)

என்றிவை யனைத்து நந்திவா னவன்றா னியம்பலு மகிலமற் றெவையு, மன்றுதந் தவனல் கியமுனித் தலைவ னுர்வசீக் கொள மகிழ்ந் தனனீண், டொன்றிய காதை நவையற வுரைப்போ ருணர்த்துவோர் கேட்பவ ருலகி, லென்றும்வாழ்ந்தளவில் போகமுற் றிறவா முத்தியு மெய்துவ ரினிதால். (ருகூ)

பஞ்சாக்கரச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் உசஅ.

---

# ஐந்தாவது
## மாலாதாரகச் சருக்கம்.

முருகவிழ் துளவத் தெரியன்மா யவனும் பிரமனு முறைமுறை பரவுந், தருவனத் தரனுக் கொலியலை வேடன் றானுணா ராதுமுன் சார்த்த, வருண்மிகு பூசை யாகியாங் கவன்றான் மன்னவ னாந்திற மடிகே, ளுரையெனு மலரோன் றருமகன் கேட்ப நந்தியம் பகவனீ துரைப்பான். (க

பகருமித் தலத்தின் முழுமணிச் சபையின் பான்மையைப் பரி
வுறக் கேட்பி, னகலும்வல் வினையும் பிறவியும் வாய்மை யாதலா
லவற்றினை யுனக்குப், புகலுவன் கேட்டி முன்னமோர் காலத்
தவனியிற் புயன்மழை வறந்து, மிகுபயிர் சிறிது மின்றிமா நதியின்
வெண்டிரைப் புனலுமஃ தியதால். (௨)

## வேறு.

இலகு மாதரும் பால்குறைந் தனவுண விகந்து
பலவி லங்கொடு பறவையுங் குறைந்தன படிகு
ழலையி னீர்மையுங் குறைந்தன வமரர்கட் காற்றுங்
குலவு பூசனை குறைந்தன குறைந்தன தருமம். (௩)

ஆற்ற ரும்பசி நோயினுன் மன்பதை யனைத்துங்
கூற்று வற்குண வாயின வுயிரெலாங் குலைந்த
போற்று போகமு மிருவகை யறங்களும் புவனத்
தூற்று வான்புன லில்லையே லெங்ஙன முளவாம். (௪)

உன்னு வான்புன லொன்பது வருடமா வுதவா
தின்ன வாறெலாம் பல்லுயிர் முழுவது மிரங்க
வன்ன காலையின் மீன்றசை மாதின மருந்துந்
துன்னு கானவ ரெழுந்தனர் கொலைத்தொழில் சூழ்வோர். (௫)

## வேறு.

எழுந்து நான்மறை யாளர்த மில்லெலாஞ்
செழும்பொ ருட்கவர்ந் தும்புரி தீமையை
விழைந்தி யற்றியு மேதினி மாந்தர்க
ளழுங்க வேசில நாட்டிரிந் தாரரோ. (௬)

ஆய காலையி லித்தலத் தாலயம்
போயுலைந்து பொறியழற் போந்தகட்
சீய மும்புலி யுந்திரள் வேழமு
மேய கானக மாகி விளங்குமால் (௭)

மசல்வி லங்கும் படிசினை யோங்கியே
பல்வி லங்கும் பறவையும் பம்பலா
லல்வி ருட்செறி யிவ்வனத் தாழிசூழ்
தொல்வி ரும்புவி மானவர் துன்னிடார். (அ)

இங்க ணிவ்வனத் தெய்தினன் முற்புகல்
வெங்கொ லைத்தொழில் வில்லெயி னர்க்குளோர்
செங்கண் வேடுவன் றீமை திருத்துவோன்
றங்கு யிர்க்குச் சமனெனத் தோன்றினன். (கூ)

உடுப்பு மெல்வி ர லாலுட லோம்புவோ
னெடுத்த வெஞ்சிலை யிற்றொடை யேற்றிமேல்
விடுக்கும் வாளியி னன்மிரு கங்களை
யடுக்கல் போலக் குவிக்கின்ற வாற்றலான் (க0)

மேவி யோர்பக லன்னவன் வெவ்விலங்
காவி கொன்று புலவுண வாசையான்
மாவி லம்பொடு மிந்த வரணுயர்
காவி னூடு கரந்துறைந் தானரோ. (கக)

கரந்த வேடுவன் கண்ணுறுங் காட்சியிற்
புரிந்து தான்புனை வானப் புனத்திடை
விரந்த நாண்மலர் கொய்து விரையளி
பரந்த மாலை பலபல வீக்கியே. (கஉ)

மாலை யிற்கொடு வந்து மடிந்ததொல்
லாலை யத்தில்வைத் தானவண் கீழுற
ஞால மேவ மறைந்தது நன்குள
தேல வாங்க ணிலிங்க மிருந்ததால் (கங)

ஆங்கு றுஞ்சிவ லிங்கத் தணிமுடிக்
கீங்கி வன்றரு மாலை யியைந்தது
பாங்கில் வேட னறிந்திலன் பண்புறத்
லாநல் வினைப்பயன் செய்ததால். (கச)

போது போக்கத் தொடுத்திடும் பூமலர்க்
கோதை யைப்பின் கொணர்ந்து கிராதனு
மீது றப்புனைந் தோர்புன மேவியே
காத லோடு கரந்திருந் தானரோ. (கரு)

வெம்பு னத்தினில் வேறு கரந்துவி
லம்பி னுன்மரை பன்றி யழுங்குமா
னிம்ப ரோடு முயல்பல கொன்றிவை
நம்பு றக்கொணர்ந் தேகுடி னண்ணினுன். (கசு)

வாச மாலை யரன்முடி வாய்த்தது
மீச னுலைய மென்பது மோர்கிலா
னுச மின்றி யுயிர்தொறு நண்ணிய
வாசி லெந்தை பெயரு மறிகிலான். (கஎ)

புரிவ தென்றும் பிறர்மனைப் போகமே
தெரிவ தென்று முடற்குறுஞ் செய்கையே
பரிவ தென்றும் பழிதரும் பாவமே
திரிவ தென்றுமா சேர்வுறுங் கானமே. (கஅ)

கொணர்வ தென்று மறையவர் கொள்பொரு
ளுணர்வ தென்றும் புலாலி னுணவையே
புணர்வ தென்றுங் கொடுவினைப் புன்மையே
யணிவ தென்றுங் கொலைத்தொழி லாண்மையே. (கசு)

இன்ன வாறுகி ராத னியற்றியே
முன்னை நல்வினை யின்பயன் முற்றலாற்
பன்னு றாறு பருவமும் பார்மிசைத்
துன்னி யிவ்வுட னீத்தனன் றூய்மையால். (உ0)

மலங்கி வீந்த வனசரன் றன்னைமேல்
லலங்கல் வேய்ந்த வறப்புய னுலரன்
கலிங்க தேசத்திற் காவல னுய்ப்பிறந்
திலங்க நல்லரு ளீந்தன னன்பினுல். (உக)

## வேறு

கற்பகப்பூந் தருவனத்தின் காரணமோ நான்மறையுங் கருதொ ணுத, சிற்பரமாஞ் சிவலிங்கத் தின்பரிசோ வித்தலத்திற் சிறந்த மேலா, மற்புதமோ வித்திறமென் றறிந்திலேன் மாலயனு மமரர் கோனும், பற்பலவா மிமையவரு மறிகுவரோ சிவனருளின் பான் மைதானே. (உஉ)

முன்னமறி யாதமலன் சிவலிங்கத் திருமுடியின் முருகு நாறு, மென்மலர்மாலிகைவேய்ந்த வறப்பயனு லரன்கருணை விளைப்ப வேட, னின்னலுறுங் கொடும்பாவ வினையகன்று கலிங்கநாட் டிறைமை பூண்ட, மன்னவன்றன் குலத்துதித்து மாலாதா ரகனெனும்பேர் புனைந்தான் மாதோ. (உந)

அளிமுரலு மலர்மாலைமுன்னமரன் றிருமுடியி லணிந்த வாற்ற, லிளிவுறுமுற் பிறப்பதனில் வேட்டுவனுய்ப் பிறந்துகொலை யிழைத்த வாறுங், குளிர்மலர்மாலிகையுணரா தரன்முடியி லணிந்ததனுற் கொடிய பாவம், விளிவுறமன் னவனுய்வந் துதித்ததுவு முணர்ந்த னன்மேல் விளைவு மோர்வான். (உச)

நீதிமனு முதலான மிருதிகளுஞ் சுருதிகளு நெறியி னோர்ந்தா, ஞதிமனு முறைமையென வரசுரிமைத் திறம்புரிந்தா னருளிற் றாயோன், மாதொருபா கனையிரவு நன்பகலு மறவாமன் மனத்து ளோர்வான், யாதுமர னுளமகிழ நல்லறமல் லாதுபிற வியற்றி டானல். (உரு)

கறைமிடற்றெம் பெருமானுக் காலயமு மணிக்கொடிநீள் கன கத் தேரு, நறைமகிழ்நந் தனவனமு நளினமலர் வாவிகளு நாளு மாக்கிக், குறைவில்சிவ னடியார்கள் வேண்டுவன பலவுதவிக் கொடிது நீக்கி, யுறுகலிங்க நாடளிக்கு மாலாதா ரகன்சின்னு ளொழுகும் வேலை. (உசு)

நிலந்தருமக் கினிகருப்பன் விசாலாக்க னற்றரும கீர்த்தி நாடு, மலங்கிருதி யெனநால்வர் மாலாதா ரகன்றவத்தா லரன்பா லன் புங், குலந்திறம்பா வொழுக்கமுநல் லறிவுமறத் திறந்தவருக் குண முமெய்தி, யிலங்கவுதித் தனர்முறையாற் றந்தையினு மளியரென வியம்ப லாமால். (உஎ)

தினையமொரு நால்வரின்முன் னவன்றனக்கு மணிமகுடந் தரித்து மேனாள், வினையகற்றி யருள்பாரி சாதவனத் தரன்கோயின் மிடித்த ஞெக்கிப், புனைதன்முயன் றதுகரந்து கங்கைநதிப் புனலாடப் போவான் போன்று, நனிபொருளெண் கோடிகொணர்ந் தவ்வரசன் றருவனத்தி னண்ணி ஞனல், (௨அ)

எய்தியடைந் தோர்க்கருளுந் திருக்களரு ளடவியெலா மிறுத்து நூறித், துய்யதம னியத்தகட்டாற் பொதிந்தமுழு மணிச்சபையுஞ் சுடர்கு லாவுந், தெய்வவிமா னமுமதிலுங் கோபுரமு மண்டபமுஞ் சிறப்ப மேனு, ஞய்யமய னியற்றியதி ஞன்மடங்காம் படியமைத்தா னுரவுத்தோளான். (௨௯)

வகுத்தமுழு மணிக்கோயில் புனிதமுறும் வினைபுரிந்து மறைகள் யாவும், பகுத்துணரு மறிவாளர் தமையழைத்து விதிமுறையாற் பதிட்டை பண்ணி, மிகப்பரமன் றனக்கியைந்த பூசனையன் பாலியற்றி விழைந்து நாளு, மகத்திருணீத் துணர்வுதரு மமலன்மகிழ் பணிவிடைக ளாற்றி ஞனல். (௩௦)

முன்னவனுக் கரசனியற் றிடும்பூசை யரிபிரமன் முதலோரேனும்,பன்னலரி தெனிற்பகரும் பரிசுளதோ வின்னனவாம் பணிகளாற்றி, மன்னுமறை யவர்களொடுந் தருவனத்தில் வதிந்தரசன் வாணுள் போக்கிப், பின்னர்மழ விடைப்பாக னனுக்கிரகத் தான்முத்தி பெற்ரு னன்றே. (௩௧)

உணராம லரன்முடியிற் றனக்கணியத் தான்றொடுத்த வொலியல் சூட்டித், தணவாத கொலைபுரிந்த வேட்டுவன்முத் தியையடைந்தான் றகவி ஞேடு, மணநாறு மலரிலைதூய்த் தொழுதுசிவ பெருமானை மகிழ்ந்து நாளும், பணிவார்கள் பெறும்பயனுக் களவுளதோ வனந்தனுக்கும் பகரொ ணுதால். (௩௨)

தியர்புரியுங் கொலைவேட னுணராம லொருபகற்ருன் றொடுத்த கோதை, யயனிறைஞ்சு சிவன்முடியி லுறவவன்பே றிதுவானு லன்பு நீத்தும், பயன்விழைந்துங் குலமுறையி னுயர்ச்சியைவேண் டியும்பலரும் பணியு மேண்மைச், செயனினைந்துஞ் சிவபூசை யாற்றுவோர் பெறும்பயன்யான் றெரிக்கற் பாற்ரே. (௩௩.)

ஊறுசெயும் வேட்டுவனுக் கிப்பயனீந் தனனன்பா லொருமை
யோடும், வேறுசிவ னறம்புரியிற் சிவன்றரும்பேற் றினையெம்மால்
விளம்ப லாமோ, தேறுமுனி வரமற்றோர் யாவருமிக் காதைதனைத்
தெரியக் கேட்கிற், பேறுதருந் திருக்கயிலை யெய்துவர்பின் முத்தி
யையும் பெறுவர் மாதோ. (ருச)

வேறு

நிந்தி யீச னயந்திவை யாவையுஞ்
சிந்தை கூர மகிழ்வொடு செப்பலும்
புந்தி மீதுறக் கேட்டுப் புனைமலர்
வந்த நான்முகன் மைந்த னியம்புவான். (ருரு)

காய்ந்து முப்புரஞ் செற்றவன் காதலா
லேய்ந்த வித்தலத் தின்னு மடைந்துமேல்
வாய்ந்த பேறு மருவின ராயிடி
ஞய்ந்து ரைத்தி யென்வறைந் தானரோ. (ருசு)

ஈது கேட்டரு ணந்தி யியம்புவா
ஞதி யாய தருவனத் தாங்கடைந்
தேத நீக்கி யிருப்பவர்க் கெல்லையப்
போத னேனும் புகன்றிட வல்லனோ. (ருஎ)

ஆயி னுஞ்சிறி தோதுவ னூர்வமாய்த்
தூய மாதவ கேளெனச் சொல்லலுந்
தாயி லன்புடை யோயவை சாற்றென
மேய மாமுனி கூற விளம்புவான். (ருஅ)

வேறு

பொன்னிலங் காவல் பூண்ட புரந்தரன் முதலா மற்றை
விண்மணி மவுலி வானோ ரனைவரும் வியாத னாதி
நன்முனி வரரு மேனை னற்றரு வனத்தி னண்ணி
நின்மலன் றிருத்தாள் போற்றி நித்தலும் பணிந்து பின்னர் (ருகூ)

வேறு

மண்டி வான்றட வும்பனைக் கற்பக வனநான்
கெண்டி சைக்கட்கு ரோசமைந் துட்பட விலகும்

புண்டரீகமா புரமயி ராபத புரமட்
டண்டர் மாதவர் யாவரு மேவின ரதன்பால் (௪0)

அங்கண் மேவியே யரன்றிரு வாலய மனந்த
மங்கு லெய்திய மயன்புனைந் தானென வகுத்துச்
செங்கண் மாலயன் றேடருஞ் சிவன்றிரு விலிங்கந்
தங்க ளமைத்தா லியற்றினர் தனித்தனி தவத்தோர். (௪௧)

அவ்வி லிங்கங்க ளனைத்தையு மாலயந் தோறுஞ்
சைவ நூன்முறை பதிட்டைசெய் தவரவர் தகவாற்
செவ்வி நாண்மலர் தூய்த்தொழு தாங்கவர் தீய
வெவ்வி னைப்பவம் வீட்டினர் வீடுபெற் றுய்ந்தார். (௪௨)

இந்த வாறுமுன் முனிவரர் வானவ ரெவரு
மந்த நற்கதி யெய்தின ரித்தலத் தமர்ந்த
முந்து தீர்த்தத்தின் மூழ்கிமேற் கதிபெற்ற முதலோர்
சிந்து விண்மணி லினும்பல ரவரையார் தெரிப்பார். (௪௩)

எனப்பு கன்றரு ணந்தியம் பகவனை யிறைஞ்சி
யனைத்து நீயுணர்ந் தாயுனக் கறிவதற் கரிதா
வினைப்ப தொன்றிலை யவையுநீ விளம்பென விகரில்
சனற்கு மாரமா முனிசொல நந்தியுஞ் சாற்றும். (௪௪)

## தீர்த்தமகிமை.

அற்புதமா யிமையவரு முனிவரரு மாலயனு மன்பா லேத்தத்
தற்பரனு னந்தநா டகம்புரியு முழுமணிப்பொற் சபையின் சார்பிற்
சுற்றுறவோர் குண்டத்தி னளவேனும் புனல்காணிற் றொல்லை
ஞால, முற்றபல தீர்த்தத்தின் மேலான தீர்த்தமென வுரைக்க
லாமால். (௪௫)

திருவனத்தி லரன்கோயிற் சன்னிதியிற் றுருவாசன் றவத்தாற்
செய்த, பொருவரும்லோக் கியதீர்த்த முளததனிற் றினம்மூழ்கிற்
போகம் யாவு, மருளுமதின் மூழ்குதற்கு விசேடதினம் விதியாத
மயனத் தோடு, கிரணமருத் தோதயஞ்சங் கிராந்திகவி மதியெனு
மிக் கிழமை யாமால். (௪௬)

ஈண்டுரைத்த தினங்களிலப் புனன்மூழ்கி யிட்டமுறும் பொருள்க ளேனு, நீண்டபுவி யோதனந்தா னியமேனு முதவிலவர் விமல ராவார், வேண்டுமவர் வாவியத னிடைமூழ்கிப் பிண்டமுட்ன் விரும்பு நல்லான், மாண்டதிலோ தகம்வழங்கிற் றென்புலத்தோ ரின்பமுற்று மகிழ்வார் மன்னோ. (சஎ)

உயர்பிரம தீர்த்தமென வீசனுக்குத் தென்றிசையி லுளதத் தீர்த்தத், தியன்மறையோர் பலர்மூழ்கி முத்திபெற்றா ரீசனுக்கு மேல்பா லென்றும், பயிலுமுருத் திரதீர்த்தங் கற்பாந்தத் தாருத்தி ரர்கள் பலரு மூழ்கி, நயனுறுமத் தீர்த்தத்தின் மூழ்கிலுருத் திர லோக நண்ண லாமால். (சஅ)

வேறு

ஆனவுருத் திரதீர்த்தத் ததனின் மாசி
யாமதியி லிரவியெழு மளவின் மூழ்கி
ஞானமருள் பரமனுக்கு மறையோர் கட்கு
நற்கலிங்க மிரண்டுதவி நம்பன் றாளிற்
றேனிமிரு மலரிலைதூய்த் தொழுது தூபந்
தீபமுத லுபசாரஞ் செய்வா ராயிற்
போனபவத் துறுவினையு நீங்கி நாநா
போகமுமுற் றரனுலகம் புகுவர் மாதோ. (சகூ)

மொழியுமுருத் திரதீர்த்தந் தன்னி லோது
முறைமூழ்கி யெம்பெருமான் முளரித் தாளில்
வழுவின்று மலரிலைதூய்த் தொழுது தூப
மணித்தீப முதலியற்ற மாட்டா ராயிற்
பழுதின்மறை முழுதுமுணர்ந் தறியா ஞானப்
பராபரனுக் கப்பரிசாற் பணிந்து பூசித்
தழிவில்பதம் பெறுவோரை மகிழ்ந்து போற்றி
லரன்வெளிப்பட் டவர்க்குமுத்தி யளிப்ப னன்றே. (ரு0)

பரமனுக்கு வடதிசையி லுளது மேவிப்
படிந்தோர்க்கு மெய்ஞ்ஞானம் பயக்கு மாற்றாற்

திருஞான தீர்த்தமெனும் பெயரா மந்தத்
 தீர்த்தத்திற் கார்த்திகையா தித்த வாரத்
திரவியெழுங் காலையினின் மூழ்கி மேலோர்க்
 கினியகறும் பாற்குடமீந் திட்டா ராயி
னரியகுட்ட நோய்முதலா மனைத்து நோயு
 மகன்றுசிவன் சாலோக மடைவா ரன்றே (௫௧)

போதமீந் திடும்வாவி தன்னின் மூழ்கிப்
 பொற்சபையி லீசனுக்கும் புவன மீன்ற
மாதினுக்கும் விதிமுறையாற் பூசை யாற்றில்
 வாய்த்தபெரும் போகமெலா மளிப்ப ராமீண்
டோதியவா வியின்மாசித் திங்கண் மேவு
 மோங்குசிவ ரிசியினில்வந் தொருகான் மூழ்கிற்
பூதலத்தி லெவரேனு மிமல னென்றே
 புகல்வதல்லான் மனிதரெனப் புகலொ ணாதால் (௫௨)

சிவரிசியின் ஞானவா வியினீ ராடிச்
 சேரிரவிற் றுயினீக்கிச் செழுமென் போதா
லவிர்கயிலைப் பெருமானை யாமந் தோறு
 மருச்சனைசெய் திரவியெழு மளவின் மீண்டும்
பவமாள வதின்மூழ்கிச் செம்பி னற்செய்
 பாத்திரந்தண் ணிறைத்தியன்ற பசும்பொ னோடுந்
தவிராமந் திரமறையோர்க் கீந்து நீடுந்
 தருவனத்திற் கனகமணிச் சபையைச் சார்ந்து. (௫௩)

ஆனந்த நாடகஞ்செய் தருளுங் கோமா
 னடிக்கமலந் தனைத்தரிசித் தன்பி னோடு
ஞானந்த னுற்றுதித்தா லவர்க டம்மை
 நம்பன்மகிழ்ந் திடும்பசும்பொ னச்சி னோர்தாந்
தேனுண்டு மதுகரங்கள் கீதம் பாடுந்
 திருக்களரீ சனுக்கினிதிற் றிகழ்கண் ணாடி
தானல்கி லளகைநகர் புரக்கும் வேந்தன்
 றனைப்போன்மா நிதிபெறுவர் சரத மாமால். (௫௪)

வேறு

திரண்டளிகள் வரிபாடுந் திருக்களரீ சனைப்பணியச் செல்கு வோமென், றிரண்டடிசென் றுலவர்க்கோ ரயமேத பலனுளதாம் யாவ ரேனும், விரைந்தொருமுன் றடிசென்றுற் சிவலோகம் பெறு வர்முற்று மேவிப் போந்தோர், பொருந்துபல னுரைக்கடங்கா தயன்றனக்கும் வரையறுத்துப் புகலலாமோ. (ருரு)

பங்குனித்திங் களின்மருவு பவுரணையிற் கௌவியத்தாற் பாலாற் றேனுற், றிங்கள்புனை வேணியனுக் கபிடேக நன்பகலிற் செய்து மேன்மேற், பொங்கியெழுந் தார்வமிகக் கனிந்துருகி விழிவழிநீர் பொழிய மூன்றுந், தங்கரணம் புனிதமுறப் பன்முறைபோற் றிப்ப ணிந்து சாற்றுங் காலை. (ருசு)

விடையிவருந் தருவனத்தின் மேவுசிவ னிலிங்கமதின் மேன் மேற் றோன்றுஞ், சடையுமர வுரியுமுயர் தண்டினொடு குண்டி கையுந் தாங்கி முத்தி, யடையுமருந் தவர்கடமைக் காணலாந் தரி சனத்தா லகலாப் பாவந், தொடருமெழு வகைப்பவமுந் தொலைந் துலகி லெவரேனுஞ் சுத்தராவார். (ருள)

அற்றவருக் கருள்புரியுந் திருக்களரீ சனைப்பணிய வன்பான் மேவு, மற்றொருவ ருடன்றமது காரியத்தாற் பத்தியின்றி மருவிக் காண்ட, லுற்றவருஞ் சிவலோக பதம்பெறுவ ரளவிலற முஞற்றி னோரே, பெற்றிடுவ ரித்தலத்திற் சிவலிங்க தரிசனந்தான் பிறர்க் குண் டாமோ. (ருஅ)

இன்னனபன் னியவனைத்து மதிகரக சியப்பொருளா மிதனை மேலோய், சின்மலனுக் கன்புமிகு பத்தியும்வாய் மையுசின்பா னிகழ்த லாலே, முன்னியுரைத் தனமச னினையென்று மிருக்கு முதன் மொழியு நூலிற். சொன்னபொருள் பிரமாண மிலையெனவு மிசைப்பவர்க்குச் சொல்லறீதாம். (ருகூ)

உரைத்தல்பழு தெனப்புகலு மங்கவர்கேட் டுண்மையுறு ரதனு லோவா, தருத்தியில்பா தகமடையு மவர்க்கடையும் பாதகம்போ லன்னோர்க் குன்னி, விரித்துமொழி பவர்க்கடையு மாணுக்கன்

பிழைகுரவன் மேற்றூந் திண்ணம், கருத்திலயிர்த் திடலதனூற் சிவனருளெய் திமெவர்க்கே கழறல்வேண்டும். (சுo)

வேறு

இப்பெருங் காதைப் பெருமையுங் கேட்போர் முறைமையு மெமக்குமேல் விதியாற், செப்பிய குரவன் சொற்பரி சேயான் செப்பின னியுமித் திறத்தாற், றப்பற வுரைத்து விளம்புதி யெவர்க்குஞ் சராசர முழுவதுந் தானூ, மொப்பிலா வொருவன் றிருக்கதை கேட்போ ரொருமையோ டெழுபிறப் பொழிவார். (சுக)

வேறு

பத்தியின்றி யுணவினுக்காக் கிருமியொடு சிறகரளி பறவை யேனுஞ், சித்திதருந் திருக்களரீ சனைமுக்கால் வலம்வந்தாற் றேவர் கானூ, முத்திதனை யேயடையு மையுறலென் றயன்பயந்த முனிவன் கேட்பச், சத்தியஞ்சத் தியமிதுசத் தியமென்றூ னந்தியெனுந் தவத்தின் மேலோன். (சுஉ)

அளிபறவை கிருமியொடு மறியாமலுண வினுக்கா வமலன் றன்னை, வளையமுக்கால் வலம்வரினுஞ் சிவலோக மெய்துமென்றால் வானோர் போற்று, மொளிகொடரு வனப்பெருமை யிப்பரிசென் றுரைக்கவற்றோ வுலவா வின்பக், களிதருமிக் காதைதனைக் கேட்பவர்கற் போர்பகர்வோர் கயிலை சேர்வார். (சுக.)

மாலாதாரகச்சருக்கம்

முற்றிற்று.

ஆகச் செய்யுள் ௩.கக.

## ஆறாவது

### மகாரதன் புத்திரப்பேற்றுச் சருக்கம்.

இன்னங் கனக தருவனத்தி லெய்தி யிறைவர் கதிபெற்றோர்
தன்மை யுரையென் றயன்பயந்த சனற்கு மார முனிகேட்ப
மின்னும் பவளத் தொளிததும்பும்வேணிப்பெருமான் விரைக்கமலப்
பொன்னங் கழற்று ளிணைகருதி நந்தி யீச னிவைபுகன்றான் (க)

வேறு

தவப்பயனி லாமனித ராயினுந்தற் பரன்சரிதை தன்னைக்கேட்கி,
லவித்தையினு விறுமாந்து பாசவலை யிடையகப்பட் டழுங்காவண்
ணம், புவிக்குளர னடியாரின் மேலாகிச் சிவகதியிற் புகுவார்நா
ளுஞ், செவிக்கமுதா மிக்காதை யுண்மையுறக் கேட்டியெனுச்
செப்ப லுற்றான். (உ)

வேறு

பான லுந்தமிழ் சிறந்தது மேலறு பதுநான்
கான நல்வினை யாட்டினைக் கூடலி லமலன்
றானு வப்புடன் புரிந்திட வுயர்ந்தது தலைமை
நானி லத்தினு மிருந்தது பாண்டிநன் னாடு. (ங)

அந்த நாட்டினை மனுமுறை நாடொறு மளிப்போன்
வெந்தி றற்சிலை மகாரத னெனும்பெயர் வேந்தன்
சிந்து ரம்பரி தேரொடுந் தானையிற் சிறந்தோன்
முந்தும் வென்றியி லிவனிக ருளர்கொலோ மொழியில். (ச)

செறியு மின்னுயி ரோம்பலிற் செங்கண்மா லொப்பா
னறிவி லாயிரம் பஃறலைச் சேடனை யனையா
னெறியி னீங்கிடு மீகையிற் றருவினை நிகர்ப்பான்
மறுவி னீதியின் மனுவெனத் தகுவனம் மன்னன். (ரு)

சைவ நானெறித் தகைமைசான் றவன்றன தனைப்போன்
மையின் மாமதித்! தலைவனல் லறத்திறம் வழாதோன்
பொய்யுந் தீமையும் புன்மையுங் கீழ்மையும் போக்கி
மெய்யு நன்மையு மொழுக்கமு மேற்கொளும் விறலோன். (சு)

அன்ன காவல னரும்பெறற் புதல்வரற் றழுங்கிப்
பன்னு மோர்பதி னாயிரம் வருடமாப் பரிவுற்
றின்னல் கூர்ந்துத னமைச்சனுந் தன்மகீர்த் தியையீ
தென்ன காரண மெனத்தனி புலம்பலுற் றியம்பும். (எ)

தேவர் பூசனை முறைமையிற் றிரிந்ததோ சிவனு
ரேவ லாளர்தா மின்னலுற் றார்கொலோ விகழாத்
தாவில் வேதிய ரறப்புறங் குறைந்ததோ தகவான்
மேவு நற்குடி யிறைமுறை பிழைத்ததோ விளம்பில். (அ)

இனைய செய்தியி லெப்பிழை யுலகில்யா மிழைத்தோ
மனைய தீதென விளம்புதி யமைச்சனீ யெனலு
நினைவின் மேல்வரும் வினையெலாஞ் சூழ்ச்சியா னிகழ்த்துந்
துனியில் கேள்விய னரசனைத் தொழுதிது சொல்வான். (கூ)

ஐய நீமனு முறையளித் தாயறந் திறம்புஞ்
செய்கை யிற்சிறி தாயினும் புரிந்திலை திறத்தா
லெய்த முன்னைநா ளியற்றிய புண்ணிய மிகத்தி
லுய்ய நல்லற மயர்ந்திடு மதலையா யுதிக்கும். (ம)

ஆய வாற்றினுன் மகப்பெறும் புண்ணிய மதனை
நீயி யற்றிலை முற்பவத் தளப்பரு நிதியாற்
றாய தானமற் றியாவையு மாற்றினை தொன்று
ளேய வப்பய னுலுதித் தனையுல கிறையாய். (கக)

தயங்கு நன்மணித் திரள்களுந் தமனியக் குவையு
முயர்ந்த தொல்குல மகளிரு மறுவகை யுறுப்பு
மியைந்த செல்வமு மெய்தினை மகப்பெற வின்னு
முயன்றி லாயற மினியஃ தியற்றுதன் முறையால். (கஉ)

வேறு

எனவெடுத் துரைக்குந் தன்ம கீர்த்தியை யினிதி னோக்கி
யினிமகப் பெறுதற் கேய்ந்த நல்லற மிசைப்பா யென்னப்
பனிமதிக் கவிகை வேந்தன் பகர்தலும் பரிவான் மன்னன்
றனதடி வணங்கி மேலா மந்திரத் தலைவன் சொல்வான். (கங)

பூந்திரை விரிக்குந் தெய்வப் பொன்னிநன் னாட்டிற் போத
மீந்திடும் பாரிசாத வனமுளா ததனி லெய்தின்
மாந்தர்வா னவர்க ளாவார் மதிபுனை மகேச னோடு
மேந்தெழிற் றலமத் தானத் திணைபிறி தில்லை மன்னே. (௧௪)

அந்தநற் றலத்தி னீசென் றனந்த நடன மாடு
மிந்துசே கரனூர்க் கேற்ற வபிடேக மினிதி னாற்றி
மந்திர விதியான் மிக்க நிவேதனம் புரிந்து மாறில்
சிந்தைநைந் துருகி யன்பாற் றிருந்தவே பூசை செய்து. (௧௫)

அலகின்மா தவர்கள் போற்று மங்கல ரதனி லாய்ந்த
புலமிகு மறைவல் லோர்க்குப் புரிவொடுந் தான நல்கிற்
பலநனி யுளதா மந்தப் பலத்தினா லுனக்குப் பார்மேற்
றலைமைசான் றறிவிற் றூய தனயரு முளரா மன்னே. (௧௬)

புதல்வரைப் பெறுவ தொன்றோ புரிசடை முடியிற் பொன்னா
ரிதழியும் பிறையும் வேய்ந்த வெம்பிரான் வெளிப்பட் டியார்க்கு
மதிசய மளிக்கு மேலாம் வரமுமாங் களிப்ப னீதென்
மதியினா லுணர்ந்து கூறு மாற்றமன் றைதுங் கேட்டி. (௧௭)

புனைமணி வயிரத் தோளாய் முன்னர்யான் புதல்வ ரின்றி
மனனுறுந் துயரால் வாடு மெல்லையின் மறைக ளாய்ந்த
வினைவருந் தவத்தின் மிக்கோ னிரையிதழ்க் கமலத் தண்ண
லனையவன் சுமந்தென் றோது மரும்பெயர் முனிவன் வந்தான் (௧௮)

பாரத கண்டந் தன்னின் மகிழ்வொடும் பரமன் வைகுஞ்
சீரிய தலங்கள் பேசி லனந்தமாச் செப்பு வாரப்
பேரெழிற் றலங்கள் யாவுஞ் சரித்தவப் பெரியோன் வந்தெ
னாரனூர் நோக்கி யென்னோ வாகுலங் கோடி யென்றான். (௧௯)

என்றவ னுரைப்பக் கேட்டாங் கிப்பரி சியம்பி னேற்கு
மன்றலங் கமலப் புத்தே ணிகர்த்திடு மறைவ லாள
னன்றெனக் கியம்பி னானித் திறமெலா மதனைக் கேளாச்
சென்றனன் பாரி சாதத் தெய்வமா நகரி னுற்றேன். (௨0)

உற்றியான் சுமந்து மேனு ளுரைத்திடும் படியே யாற்றிப்
பெற்றனென் மகப்பே றென்னும் பெருவர மதனைப் பேணி
யிற்றைநா ளளவு நீகேட் டிலையென வியம்பி லேன்யான்
பற்றுறக் கேளா முன்னம் பகர்ந்திடி லுண்மை யாமோ. (உக)

வேறு

மாதவ மியற்றல் பூசனை புரிதன் மாமறை மந்திரஞ் செபித்த
றீதக றெய்வ நதியொடு தீர்த்த மாடுதல் சிறப்புறுந் தான
மீதனல் லொழுக்க மாற்றிட லுணர்த லின்னன யாவையு மியல்பான்
மேதக வுரைக்கு முண்மையா லன்றிப் பயன்றரா வெனமறை
விளம்பும். (உஉ)

சிலையொடு கனக மிந்தன மிவற்றிற் றெய்வமு மிலைமறையனைத்து,
மலகில்பல் லெழுத்தா லியன்றதே யன்றி யதிற்பய னிலையென
வறையுங், ஈலர்தமக் கவர்கள் கருதிய படித்தாங் காண்குறும் பய
னுரு ததனு, னலனுறு மொருமை காரண முலகி னல்லறங் கட்
கெலா நவிலில். (உங)

அனந்தகா லமுநன் மந்திர மொருமை யகன்றவ ராயினுமறையின்,
மனங்கவர் பயனுங் கவர்பெறா ரின்னுண் மருவரு முண்மையான்
மகிழ்ந்து, வினைந்தியம் பினரா லளப்பரும் பயன்க ணிகழ்ந்திடு மாத
லா னிருப, நனந்தலை யுலகிற் றெய்வமு மறையு முண்மையாற்
பயனெலா நல்கும். (உச)

இன்னண முரைத்த பொருளெலா மொருமை யாய்மனத் தெண்
ணிநீ யியற்றி, லன்னநல் லறமும் புதல்வரும் பயனு மடைந்திடு
மரசவென் றமைச்சன், றன்னமர் காத லொடும்புகன் றிறைஞ்சத்
தகுவன விவையெனத் தரளப், பன்மணி மவுலிப் பார்த்திபன்
றரும கீர்த்தியை மகிழ்ந்தனன் பரிவால். (உரு)

மகிழ்ந்துநல் லமைச்ச னுரைதரு வனந்தான் மருவுதற் கியைந்
துமா விதியு, மிகுந்தநன் பொருளும் பலபல கொணர்ந்து நால்வ
கைச் சேனையு மேவப், புகுந்தனன் விரைவிற் றும்பிர நதியிற்
போந்துபொங் கலைப்புனன் மூழ்கி, யகங்களிந் தளவி றனமீந்
தப்பாற் போயின னரசரின் மிக்கான். (உசு)

சென்றவன் கருப்பா ரணியமுங்கடந்துசிறந்ததீத்திகிரியிற்சிவணி
யொன்றிய விதிகண் மறையவர்க் குதவி யோதன மறுசுவை யோடு
மன்றுவே தியர்கள் பலர்தமக் கினிதி னளித்தறம் பலபல வாற்றிப்
பொன்றிக ழெயில்சூழ் மதுரைமா நகரிற் போந்தனன் புரவலன் பரிவால். (௨௭)

கூடலின் மருவிக் கொடுவினை யகற்றுங் குலவுபொற் றாமரைத்தடநீ
ராடியன் றரனார் மண்சுமந் திளைத்த வருங்கரை யோங்கிய நதியிற்
பீடுறப் படிந்து சுந்தர நடன மியற்றிய பிரான்பதம் வணங்கி
யீடினற் றான மளவற வுதவிக் கந்தமால் வரையிடை யெழுந்தான்.

கந்தமால் வரையிற் போந்துபின் பிடப கிரியினிற் காவல னெய்தி
யந்தர கங்கை யெனும்பெய ருடைய தீர்த்தத்தில் விதிமுறை யாடி
முந்துறு தான மறையவர்க் குதவி முதன்மையாந் திரிசிரேச்சுரத்தில்
வந்திப வனமுற் றுமிரா ரணிய மாநகர் கடந்தனன் மாதோ.

கடந்துசெல் வடிவேற் காவலன் பீம வனத்தொடு கனவடாரணிய,
மடர்ந்திடும் பலாச வனத்தொடு முயர்ந்த வக்கினீச் சுரமரும் தவர்கண், மிடைந்திடுஞ் சந்த்ர ரேகைவான் மகிழுஞ் சிரக்கண்டேச் சுரமலர் விரியுந், தடம்பயி லன்னேச் சுரமுயர் வசிட்டேச் சுரமெனும் பதியெலாந் தணந்தான். (௩0)

தணந்துபி னரிவ ராகவாக் கியமுந் தண்பயில் காசிகா வனமு
மணங்கமழ் வில்வ வனமுயர் வேத்ர வனத்தொடு விகற்பகா ரதமு
மிணங்கிய நயனப் பிரதமும் புகழுந் திருவிரா மீச்சுர மிவற்றோ
டணங்கறும் பிரம ரேச்சுர மயூர நாதமா நகருமுற் றகன்றான் (௩௧)

அப்பதி யனைத்துங் கடந்துசெல் பொழுது மந்நகர் தோறுமவ் வரசன், செப்பிய செல்வ மியைந்தநற் குணத்தாற் சிவனையு மமையையுந் திறத்தா, லொப்பில்பூ சனைசெய் தன்றியாங் ககலா னன்னவனவையெலா மொருவி, விப்பிரர் குலவு முன்னிநதிக் கரையின் மேவினன் பூசனை விழைவால். (௩௨)

மூளிநதிக் கரையி லெய்தியக் நதியின் முறைமையான் மூழ்கியாங் கியைந்த, பனிமதிச் சடையோன் மகிழயிராப தேச்சுர நகரினைப் பரவித், தனிமுதற் பரனே டுமையையும் விதியாற் றக்கபூ சனைபுரிந் தரசன், மனமுறத் தொழுது பாரிசா தவன மாநகர் மருவினன் வணங்கி. (௰௩)

திருவன மருவி மகாரதன் பரிவாற் றனையரைப் பெறுவது விரும்பி, யருளொடு முனிசெ யுலோக்கிய மெனுந்தீர்த் தத்திடை மூழ்கியப் புனலாற், றெரிவருந் தேவர் மகிழ்தருப் பணமுஞ் செய்துபின் றிலோதகம் பிதிர்கட், குரிமையின் வழங்கிப் பிண்டமும் வகுத்தாங் கந்தணர்க் கனமுத லுதவி. (௰௪)

தென்புலத் தவர்க்கத் திறத்தினுன் மகிழ்ச்சி செய்துபின்மகே சனைத்தெரிசித், தன்புற வணங்கப் போதரு நெறியி லரன்றிருச் சந் நிதியணுகி, மன்பெருந் தவங்கள் புரியுமார்க் கண்டன் மறை பயின்றிருந்தன னவனைத், தன்றிரு முடியால் வணங்கின னரசன் றவமுனித் தலைவனு மகிழ்ந்தான். (௰௫)

மகிழ்ந்துமா தவனு மிறைவனுக் காசி வழங்கிநீ யிவண்வரும் வழி யா,துகந்துறை யெனலு மிவன்கருத் தமைதி யுரைத்தலு முயர்முனி கேட்டு. மிகும்புக ழரசன் மனத்தினை யுணர்ந்து விரதமொன் றுரைப்பனவ் விரதந், தகும்பரி சியற்றி லருமக வளிக்கு மெனச் சொலிப் பின்னருஞ் சாற்றும். (௰௬)

உலகினி லிசைபெற் றோங்கிய தீர்த்த முலோக்கிய தீர்த்தமாங் குவப்பாய்ப், புலரியின் மூழ்கி மனைவியி னொடுநீ தீர்த்தமேற் கரை யினிற் பொருந்தி, யிலகிய கனக பாத்திர மதனிற் சருக்கரை பழ னொடா வின்பா, லனுறக் கலந்திட் டடிசிலோர் பாதி நிவேதித்து நம்பனுக் கன்பால். (௰௭)

மற்றொரு பாதி யோடுபூ சணிக்காய் பாகிலை வளத்தினுக் கியைந்த, நற்பொரு ளமைத்து மறையவர் தமக்கு நல்கினான் பரனருண் மிக வும். பெற்றிட வேண்டு மெனமுறை பரவிப் பின்னுகன் றனக்கபி டேக, முற்றவா றயர்ந்து நிவேதனம் புரிந்து மறையவர்க் கோதன முதவி. (௰௮)

## வேறு.

விடமுமிழ் தாரை வெள்வேல் வேந்தநீ யின்ன வாற்றான்
முடிவுற விரத மாற்றின் முக்கண்மா முதல்வற் காளாய்ப்
படிபுகழ் குணமுந் தூய வொழுக்கமு மருவிப் பாங்காம்
வடிவுறு சிறுவர் தம்மை யெம்பிரான் மகிழ்ந்து நல்கும். (௩௯)

தானமுந் தவமு நோன்புஞ் சாற்றுமந் திரமு மீசற்
கானபூ சனையு மிந்த நற்றலத் தாற்றி னோரேல்
மேன்மையாம் பதங்க ளெல்லாம் விரைவினி லவர்க்கு மேவும்
நானுவல் விரத மின்னே நயந்துநீ புரிதி யென்றான். (௪0)

மிருகண்ட முனிவன் மைந்த னின்னன விளம்பக் கேட்டுப்
புரவலன் மனைவி யோடு முலோக்கியப் புனலின் மூழ்கி
யுரியபா லடிசி லட்டாங் கிலக்கம்பூ சனிக்கா யோடு
பரவுதக் கணைய டைகாய் பலபல மறையோர்க் கீந்தான். (௪௧)

மீண்டுமெவ் வரசன் றன்ம கீர்த்தியோ டினிதின் வெவ்வே
றூண்டுபஃ றான நல்கி யானந்த நடேசற் கன்பின்
வேண்டுறும் பூசை செய்து மறையவர் விளம்பு மாசி
பூண்டுவே லிறைவன் சின்னாட் டருவனத் துறையும் போழ்தில்.

மல்கிரு டுரக்கும் வெய்யோ னெனக்கதிர் துயங்க வெல்லாப்
பல்விலக் கணமு மேய்ந்த பாலரோ ரிருவர் தம்மை
வெல்படை யிறைவன் றேவி பயந்தனண் மகிழ்ந்து வேந்த
னொல்லையிற் றரங்க நன்னீ ராடின னுவகை பூண்டான். (௪௩)

தண்புனல் படிந்து வேந்தன் சதுமறை யவர்க்குத் தான
மெண்பயி னியுத மான நிதிகொடுத் தீச னார்க்கும்
பண்பினு லபிடே கங்க ணிவேதனம் பரிவி னாற்றிக்
கண்கவர் மணிகள் வேய்ந்த கலன்பல வுதவிப் பின்னும். (௪௪)

காமர்வெண் டரள மாலைக் கவிகையோ ரிரண்டும் வீசுஞ்
சாமரை யிரண்டு நல்கித் தமனிய வியுத மீந்து
தேமலி பாரி சாத வனத்தரன் றிருத்தா ளுன்னித்
தாமவேற் றடக்கை வேந்தன் றவத்தினை வியப்ப தானான். (௪௫)

வயங்கெழிற் புதல்வர்க் கேய்ந்த மங்கல வினைக ளாற்றி
வியந்திடு மரசன் பின்னர் மேவுமோர் பதினு ருநாட்
டயங்கமுன் பிறந்த சேய்க்குச் சிவதத்த னெனும்பேர் சாத்தி
யிளையந்திடு தேவ தத்த னெனும்பெய ரிளையோற் கீந்தான். (சகூ)

வேதியர் புதிய நாம வினைமுதற் கரும மெல்லாந்
தீதற முடிப்பப் பாலர் திருமுக நோக்கி மன்னன்
மாதவந் தருமஞ் செல்வ மாநிதி முழுதும் பெற்றேன்
யாதெனக் கரிய தென்று மகிழ்ந்தன னின்பங் கூர்ந்தான். (சஎ)

இன்புறு மரசர் கோமா னிறைவனுக் கியைந்த பூசை
யன்பினுற் புரிந்து தானு ளரும்பெற லூட்டி லேந்தூர்
வன்கலிற் சூலந் தீட்டி மகேசனுக் குதவி மாலா
லென்புநெக் குருக வேத்திப் பன்முறை யிறைஞ்சி னுனல். (சஅ)

பலமுறை வணங்கி யேத்திப் பரமனை விடைகொண் டப்பாற்
புலமிகு மார்க்கண் டன்பாற் போந்தடி பணிந்து போற்றி
யலகின்மா தவர்கண் மற்றோர் பலரையும் விடைகொண் டப்பா
லலனுறு பாண்டி நாட்டின் மகாரத னண்ண லுற்றான் (சகூ)

அரும்பெறற் றவத்தாற் பெற்ற பாலர்நல் லமைச்ச ரோடும்
பெருங்கடற் றானை சூழமகாரதப் பெயரின் வேந்தன்
றிருந்திய மனத்தை யீசன் பாலுற விருத்தித் தேறல்
பொருந்திய மலர்க ளுறுந் தன்றிரு நாட்டிற் புக்கான். (டுo)

மகவினை வேண்டி நோற்று மகாரதன் பெறுமா போல
மிகுபுகழ் பாரி சாத வனத்திடை மேவி மேலாந்
தொகுமறை விரதம் பூசை தூயநல் லறங்கள் சின்னாட்
டகவொடும் புரியில் வல்லோர் சார்வரும் பயன்கள் சாரும். (டுக)

வெண்டிரைப் புவனத் தோங்கு மித்தல மன்றி வேறு
மெண்டல மவற்றிற் றான மந்திர மீசற் கேற்ற
தொண்டுறும் பூசை தூய விரதங்க டொலைவில் பன்னாட்
டொண்டியற் றிடினும் போகப் பயன்மறு பவத்திற் கூட்டும். (டுஉ)

ஆதலா லுலகின் மேலா மித்தல மதனை வேதப்
போதனும் புகழு நாளும் புண்டரீ கக்கண் மாலுங்
காதலாற் றுதிக்கு மற்றைக் கடவுளர் கருதுந் தோறுந்
தீதகல் பாரிசாத வனமெனத் தெரிப்பர் திண்ணம். (ருக)

மகாரதன் மகவு வேண்டி வான்றவ மிழைத்த காதை [ஞோர்
பகாரமாய்ப் பகர்வோர் கேட்போர் பயன்வருத் துரைப்போ ரன்
தகாநெறி தவிர்ந்து நோற்ற தவத்தினைப் புரிவோர் யாரு
நகாவரு மழலைத் தீஞ்சொ னன்மகப் பெறுவர் மாதோ. (ருச)

நில்லறத் துறையு ளாய நவமணி மன்ற நாநாப்
பல்பெரும் போக மோக்கம் பயக்குமோர் கணத்தின் பாதிச்
செல்பொழு தேனு மிந்தத் திருநகர் வைகிற் றீய
வல்லல்போ மனுக வொண்ணு மனோரத மனைத்து நல்கும். (ருரு)

இத்தல மான்மி யத்தை யொருதரங் கேட்கில் யார்க்கும்
பத்தியுஞ் சிவனுக் கன்பும் புனிதமும் பயக்கு மூவா
முத்தியு மளிக்குங் கோடி சனனத்தின் முயன்ற பாவ
மெத்தனை யெனினு நீங்கு மெய்துதற் கரிய துண்டோ. (ருசு)

உயர்ந்ததீர்த் தங்க ளோடித் தலத்தினை யொருகாற் சூழ்ந்தா
லியைந்தபூ வலம்வந் தாற்போன் றெய்திடும் பயன்க ளீறில்
பயன்றரு பகிரண் டத்திற் றலமெலாம் பணிந்து பார்மே
லியங்கிய தீர்த்தம் யாவு மாடிய பலனு மெய்தும். (ருஎ)

ஆயவித் தலத்திற் செம்பொன் முட்டையி னளவை யேனு
மீயிலோர் சுவண மேரு வுதவிய பலன்வந் தெய்துந்
தூயனை மொருவர்க் கீந்தாற் கோடிநான் மறையோர் துய்க்கு
மேயநற் பலமாஞ் செய்யுந் தருமமு மினைய வாமால். (ருஅ)

வான்றவ மீசற் கீந்த பூசனை மகிழுந் தான
மேன்றவிச் செயல்க ளெல்லா மித்தலத் தியற்றி ஞேர
லான்றதோர் கோடி யாக விருத்தியா யடையும் போகஞ்
சான்றவ ருவக்கு மேலா முத்தியு மளிக்குஞ் சால்பால். (ருகூ)

இன்னன வியம்பி மேலா மித்தல மதனி லெய்து
நன்முனி வரர்கள் யாருஞ் சிவனரு ளயர்ந்தோர் நாளு
மன்னிய சிவனுக் கன்பாய் வழிபடுந் திறத்தோர் நாளுந்
தன்னிக ருருத்தி ராக்க மாலையுந் தரிக்குந் தூயோர். (கூ0)

அனையநன் முனிவர் நாளு மத்தலத் தமர்ந்தோ ரெம்மா
லினையரென் றுரைக்க லாகா ரித்தலப் பெருமை யிந்தப்
புனையுரை கேட்போர்க் குள்ளம் புனிதமாம் பவமுந் தூய்தா
நனிபுரி கருமந் தூய்தா ஞானமு நண்ண லாமால் (கூக)

எனப்பல வினைத்து நந்தி யீசனு மியம்பக் கேட்டுச்
சனற்குமா ரன்று ணர்வ மீக்கொளத் தகவு பூண்டு
மனக்கினி யுளதோ துன்ப மிலையென மகிழ்ந்து நம்பன்
றனக்கிணை யாய நந்தி தாண்மலர் வணங்கி னுற்றல். (கூஉ)

[வேறு] நந்தி யீசனு மயன்றரு சனற்குமா ரனுநயந் துரையாடி
முந்து சங்கையாற் பயனுறப் புகன்றது முதுமறை யொருநான்கு
மந்த மில்புரா ணங்களு மிருதியு மகனுறத் தொழற்காய
விந்த மாக்கதை மான்மிய மளவறுத் தியம்புதற் கரிதாமால் (கூங)

இனைய மாக்கதை யுரைப்பவர் கேட்பவ ரிங்கிவர் தமையேத்திக்
கனிவு கூர்ந்தருள் சிறப்பவர் யாவருங் கயிலைமால் வரைமேவித்
துனியி லேம்பெரும் பூதமு மரிமுதற் சுரர்களும் மிறத்தோன்றி
யனலு லாவிய காலையு மழிவில்பே ரின்பவீ டடைவாரால்.(கூச)

மகாரதன் புத்திரப்பேற்றுச்சருக்கம்

முற்றிற்று

ஆகச்செய்யுள்-௩எரு.

## ஏழாவது

## தீர்த்தமான்மியச்சருக்கம்.

தவம்புரி சனற்கு மாரன் றருவனத் தகைமை யெல்லா
நவின்றன னந்தி யீச னவிலலு நயந்து கேட்டுப்
பவங்கெட மகிழும் போழ்திற் பாங்கரி னிருந்த சூத
னுவந்திடு சனற்கு மாரற் கின்னன வுரைக்க லுற்றான். (க)

திருவனத் தியல்புந் தீர்த்தத் தன்மையுஞ் சாற்று ஞானத்
திருநடம் பரமன் மேனாட் செய்தது நந்தி யீசன்
பரிவொடு முரைப்பக் கேட்டா யாயினும் பண்பால் யானும்
புரிவுற வுரைப்ப னென்னாப் பின்னரும் புகல்வ தானான். (உ)

அத்தலப் பெருமை யெல்லா நந்திமா தவனுக் கல்லா
லெத்தலத் தினிலும் பாங்கா லியம்புதற் கொருவ ருண்டோ
வித்துணை யெனவத் தானத் தியல்பெலா மிசைக்க மாட்டேன்
பத்தியாற் சிறிது தீர்த்தப் பரிசினை யுரைப்பே னென்றான் (௩)

என்றவ னுரைத்த லோடு மீரெழு புவியு மீந்த
மன்றலங் கமலப் புத்தே டருமுனி மகிழ்ச்சி பொங்கித்
துன்றிய தவத்தின் மிக்க சூதனைத் துதித்து நோக்கி
யின்றெனக் குரைப்பா யென்னச் சூதனு மியம்ப லுற்றான். (ச)

வேறு

திங்கொளி விளங்கும் பாரிசா தவனத் தெம்பிரான் சந்நிதி முன்னர், மங்கலப்படிவ மாயது நாளு மன்னிய நல்லறக் கடவுடிங்களிற் றயங்குந் திருமுக மலரச் சிறந்தினி திருப்பதோர் தீர்த்த மங்கண்வா னமர ரனைவருந் துதிக்கு முலோக்கிய மதன்பெய ரறையில். (ரு)

அப்பெருந் தீர்த்தந் தன்னின்மா ஞாலத் தெய்திய மன்பதை யனைத்து, மெப்பொழு தவந்து மூழ்கினும் போகத் தோடுவீட் டின்பமும் பயக்கு, மிப்பரி சுடைய தாயினுங் கால விசேடமுண் டெண்ணிய பலன்க, டப்பறத் தருவ தவையிவை யெனவே சாற்றுவன் கேட்டிமா தவத்தோய். (கூ)

தேளில்வா னிரவி யெய்திய மதியிற் றினகரன் பெயருடைத் தினத்திற், கோளறும் புனித வான்றிரு மெழுக்குந் தூர்வையுங்கரத் திடைக் கொணர்ந்து, மூவருமன் பெழக்கா யத்திரி மறையை மொழிந்துலோக் கியப்புனன் மூழ்கி, னூறுமெப் பவத்து மியற்றிய பாவ மகற்றிமேற் கதியினை நல்கும். (எ)

முன்புகன் மதியிற் றிங்கள்வா ரத்தி னன்பக லிடைமுனி தீர்த்தத், தன்புற மருவிச் சோமமந் திரமுச் சரித்துநீ ராடிநீ றணிந்து,

பொன்புனை யுருத்தி ராக்கமா லிகையைப் பூண்பெஞ் சாக்கர மறை
யை, நன்பொருள் விதிறான் முறையினுற் செபித்து நட்டனைத் துதி
யினு னவின்று. (அ)

உளப்பொருட் கியன்ற தக்கணை யடைகா யிருதுகி லொருதுகி
லேனு, மளப்பிலா னந்த நாடகம் புரியு மமலனுக் கீதென மறை
யோர், கொளக்கொடுத் தீசன் றனக்குமம் பிகைக்கு மியன்றவான்
பொருளினுற் குளிரத், திளைத்தபி டேக மாட்டியா யிரமிந் தீவர
மலர்த்தொடை யணிந்து. (கூ)

அறுசுவை யடிசி னிவேதன மாற்றி யானந்த நாடக மாடும்
கறைமிடற் றெந்தை பூங்கழல் வணங்கிக் காதர வாதரம் பெருக
முறைமுறை பரவின் மறிதிரைப் புவன முழுவது முடிபுனைந்
தளித்து, மறுவில்பல் போக நுகர்ந்துபி னவர்க்கு மருவரு முத்
தியில் வாழ்வார். (க0)

மொழிபுமத் தினத்தி லீசனுக் கபிடே கங்கிவே தனம்விதி
முறையால், வழுவறப் புரியி லவர்க்கொரு கோடி சிவங்கிப் பெரும்
பயன் மருவு, மழுவலா னடியார்க் கனம்புன லடைகாய் வழங்கிலத்
தினத்திலோர் கோடி, விழுமியோர்க் களித்த பலனுறு மீது சத்தி
யஞ் சத்தியம் விளம்பில். (கக)

சீரபியி னறுநெய் யாயினு மெள்ளின் றயிலமே யாயினுஞ்
சொரிந்து, மருவுறு லேந்தா லொருதிரி யிணக்கி மணங்கமழ் திருக்
களர் மகேசற், கிருளற விமைப்ப விருசுட ரேனு மொருசு டராயினு
மேற்றிற், பரனரு ளுறுவ ரவர்பிதிர் மரபிற் கோடிமன் னுயிர்பெ
றும் பதவி. (கஉ)

விருதகர் மதியிற் பௌரணைத் திதியி லிரவியின் மந்திரஞ் செபித்
துப், பொருவிலைந் தெழுத்தும் புகன்றரன் றனக்குத் தென்றிசை
மருங்கில்வான் புகழு, முருகனு வயத்தி லாடகத் தான முதுமறை
யவர்களுக் குதவிப், புரிவினு லயில்வே லிறைவனுக் கபிடே கஞ்
செய்து புதுமலர் புனைந்து. (கங)

இன்னமு தனைய வாலரி யடிசில் விதிமுறை நிவேதன மியற்றி
யன்னறுந் தூப முதலுப சாரத் தொடுகயந் தருச்சனை செய்து

துன்னியாங் கவன்றன் போற்றிடிற் றனையர் மாதர்மற் றுறும்பொரு ளோடு, முன்னரும் போக நுகர்ந்துபின் பிறவா மொழிதரு முத் தியே பெறுவார். (கச)

பாதுகஞ் செருப்புக் கவிகைசா ந் தாற்றி பரமனுக் குவப்புறப் பரவித், தீதகல் சிவனே சருக்களிப் பவர்பின் செனனமு மரணமு மகல்வா, ராதவன் விடையில் வந்துறு மதியி லிந்துவு மிரவியு மணுகு, மேதகு தினத்தி லிருவினை கடியு முருத்திர தீர்த்தத் தின் மேவி. (கரு)

சொல்லுமந் திரத்தின் முதன்மையா வுரைக்குந் துமக்கினே ருத்திர மென்னு, நல்லதொன் மறையை நவின்றுநீ ராடி நகைமதிக் கண்ணிகம் பனுக்கும், வல்லிய முரித்தோன் றனதடி யவர்க்கும் வெண்ணிறக் கோவினை வழங்கிற், பல்வினைப் பிறவி தீர்ந்துருத் திரர்கள் பதவியிற் செல்குவர் பாங்கா. (கசு)

ஆவினை யளிக்க வியன்றிடா தாயி லப்பெருந் தீர்த்தத்தி லாடிக், கோவினை வழங்க வாங்கஃ திலேயேற் கொடுத்திட வராகனென் றஃது, மேவிடா தென்னில் வராகனிற் பாதி யீந்திட வெண்ணிறப் பசுவொன், றீவதற் கிணையாப் பயன்றருஞ் சுரபி யுலகமு மெய்தலா மினிதின். (கஎ)

மாசியாந் திங்க ளொடுபுரட் டாதி யாடிமார் கழியெனு மதியி, லீசனுக் கிடபம் பிதிர்களுக் குவகை யெய்திட விதிமுறை யீந் தோர், வீசிய விடையின் மெய்ம்மயி ரொன்றுக் குகமொரு கோடி யா மிகுநா, ளுசமில் கயிலைப் பெரும்பத மடைந்து நம்பனுக் கன் பரா யிருப்பார். (கஅ)

விதந்துரைத் திடுமார் கழித்திரு மதியி னடேசனுக் கருமறை விதியாற், பொதிந்திடு நறைமென் சந்தனக் குழம்பா னனியபி டேகமும் புரியின், மதம்படு கபோலக் கரியுரி போர்த்த மழுவலான் மகிழ்ந்துதான் மருவி, வதிந்திடுங் கயிலைப் பெரும்பத மருளி முத் தியு மன்பினால் வழங்கும். (கசு)

ஞானவா வியினின் மாகமா மதியி னண்ணிய பரணிநாண் மருவிப், பானுவின் புதல்வ னருமறை மொழிந்து படிந்துவேய்ப் பாத்திர மெனினு, மானவேத் திரத்தாற் செய்கல மெனினு மட்கல மாயினு மமைத்து, மேனிறைத் தழுந்து மூவிரு குறுணி விமலனுக் குவகையால் வழங்கி. (௨௦)

பொருந்திய பொருளாற் றருவனத் திறைக்கு மலைமக ளுக்கு நன் புனித, வருந்தவர் பணிய நடம்பயின் மகேசன் றனக்குமா ராதனை யயர்ந்து, சுரும்பருண் டுவக்குஞ் சண்பக நறும்பூத் தொடுத் தணிந் திடினமன் றுரக்கும், பெரும்பயம் பிணியற் றிரவியு மதியு முளபகல் விருத்தியைப் பெறுவர். (௨௧)

குறையிலா தமைந்த நாடொறு முன்னர்க் கூறிய தீர்த்தத்தின் மூழ்கி, யறுசுவைப் பொருளான் மகாளயஞ் சிராத்த மாற்றிடி லளப் பருஞ் செல்வஞ், செறிவுறு மந்நாட் டிலோதகம் பிண்டம் விசேட மாச் செய்திடிற் கயையை, யுறுபய னினுமோர் கோடியின் மடங் காப் பிதிரரோ டுயர்கதி யடைவார். (௨௨)

சிவநிசி விரத முண்டிடீத் திருந்து கன்னலின் சாறுசெந் தேற, லவியொடு நறும்பா னனியபி டேகஞ் செய்தம லன்றனக் கந்நாட், புவியிடை விளைந்த தானியப் பொருளை மனையறம் பூண்டரன் பொற்றுட், குவகைபெற் றுயர்ந்தோர்க் குதவிலோர் கோடி குலத் தொடுங் கயிலையி லுறைவார். (௨௩)

சாத்திரம் பயின்றோ ராதுல ரநாதர் சான்றவர் தாமொரு மூன்று, நேத்திரத் தமல னடியவ ராயி னிகரிலித் தலத்திலாங் கவர்க்குக், கேத்திரந் தனதா னியத்துடன் சமைத்த திருகமீந் திடினிதி ளார்ந்து, பூத்திடுஞ் செல்வ மணிமுடி யரச ராகியிப் பூதலம் புரப்பார். (௨௪)

நிமலன்மெய் யடியார்க் கித்தல மதனி னிகரிலா நன்கலை யளிப் போ, ரமலனு ளுலக மெய்திவீற் றிருப்பா ராய்ந்தவைந் தேறலுண் டறுகாற், றமரவண் டிமிரு நறுமல ரவிழு நந்தன வனம்வகுத் தவர்தா, முமையவன் கணவன் றனைப் பதம்வே றுவமையாங் கவர்க்கிலை யுலகில். (௨௫)

கொழுமலர் கமழுந் திருக்களர் மருங்கிற் குரோசமைந் துட்ப டக் குறுகிச், செழுஞ்சிழற் பந்தர் வைத்தவர் வாவித் தீம்புன னல்கி னோர் சிறப்பாற், றொழுமதி யுலகிற் றெள்ளமு தருந்திச் சுரர்களாய் வாழ்குவர் தொல்லைப், பழமறை புகழு மித்தலப் பெருமை யுரைப் பவர் யாவரோ பரிசால். (உசு)

மாதொரு பாக னமர்திருக் களருண் மறுவறு தானமீந் திடு வோர், மேதினி முழுதும் புரப்பர்நற் புனித ராகுவர் வேறுவே றெடுத்தாங், கோதினு மடங்கா தித்தலப் பெருமை யெமக்குரைப் பரிதென வுணர்வாற், சூதமா முனிவ னிவையெலாஞ் சனற்கு மாரற்கு மகிழ்வுறச் சொன்னான். (உஎ)

மாமறைக் கிழவன் றருமுனி சூத மாதவன் மாற்றிய வினைத்துங். காமுற வுவந்து கேட்டலு மகிழ்ந்து காதர வாதரம் பெருகி, யாமு றையுணர்ந்து திருக்களர்ப் புராணத் தொன்மையு மாங்கதன்சிறப்பு, நீமொழிந் தருளென் றருந்தவன் கேட்பச் சூதனுங் கேளென விகழ்த்தும். (உஅ)

மறைதெரி வியாதன் முதலிய முனிவ ரோதிய மூவறு வகையா வறைதரு புராணங் களிற்பவு டியமென் றுங்கொரு புராணமுண் டதனிற், செறியுமுத் தரகாண் டத்தினோர் சாரிற் கேத்திர கண்டத் திற் சேர்ந்து, பிறிவருங் காதை முதற்றரு வனத்தை விதந்துதான் பேசிய வாறும். (உகூ)

பாரிசா தவன வரவெனுங் கதையும் பண்ணவர் பணிந்திடப் பரமன், சீரிய நடனஞ் செய்திடு மாறு முத்திபஞ் சாக்கரச் சிறப்புந், தேர்வுறு விதமுந் தெரித்திடு மாறுந் தீம்புனற் றீர்த்தநா மத்தின், காரண மொழியு மகாரதன் றவத்தாற் காதலர் தமைப்பெறு மாறும்.

ஏய்ந்தவிச் சருக்க மாறு முன் னந்தி யீசனிற் கியம்பிய வீற்றில், வாய்ந்தவிக் காதை யான்புக றீர்த்த மான்மியச் சருக்கமேழ் வகையா, மாய்ந்தவிச் சருக்க மப்பெருங் காண்டத் தாதியி லறு பதோ டிருபான், வேய்ந்தவேழ் சருக்க மாதியா வுரைக்குந் தன்கய மிக் கதையென விரிப்பார். (௩௧)

இன்னநற் காதை யொருமுறை முழுதுங் கேட்கல ராயினு மிதனிற், பன்னுமோர் சருக்க மாயினு மதனிற் பாதியா யினுமொரு பாட, லென்னினு மாங்கோர் பதமுரை யேனும் பதத்தினி லோ ரெழுத் தேனு, முன்னுறக் கேட்போ ரளப்பரும் போக நுகர்ந்துபின் முத்தியை யடைவார். (௩௨)

இந்தநற் கதையை மகிழ்ந்து புத்தகத்தி லெழுதினோ ரதனிலோ ரெழுத்துக், கந்தமில் கோடி யுகமரி பிரமர் புகழ்திருக் கயிலையை யடைவார், முந்துறும் புராண முழுவது மளந்த முறையினிற் றீட் டியாங் களிப்ப, வந்துறும் பலனு மிதனிலே டொன்று வரைந்தடி யார்கட்கு வழங்கில். (௩௩)

கொலைபுரிந் திடினும் பிறர்மனைப் போக நுகரினுங் குரவரைப் புரவா, தலைதுயர் செயினு மயலவர் பொருளைக் கவரினு மதியினை யகற்று, புலைமது வினிதி னருந்தினும் பகராப் பொய்ம்மொழி யுரைக்கினு மொருகா, லுலகெலாம் புகழு மிக்கதை யுரைக்கி லவை யகன் றுயர்கதி யுறுவார். (௩௪)

எனவிவை யனைத்து மளவறு புராண மியம்பிடுஞ் சூதமா முனிவ னெனவிரி கமல நறுமல ரமளி நான்முகத் தெம்பிரா னல்குந் துனியறு சனற்கு மாரமா முனிக்குச் சொல்லினன் சூழுறக்கேட்டே யினியமாதவங்கள் புரிசனற் குமாரனெய்தருமுத்தியையடைந்தான்.

வேறு

வானவர் வாழ்க முத்தீ மறையவர் மகிழ்ந்து வாழ்க
வானின மிகவும் வாழ்க வலைபுனல் சொரிக நாளுந்
தேனிமி ரலங்கல் வேந்தன் செழுமணிக் குடைமீ தோங்க
நானிலத் திலகுஞ் சைவ நன்னெறி சிறக்க மாதோ. (௩௬)

தீர்த்தமான்மியச்சருக்கம்

முற்றிற்று.

ஆகச்செய்யுள்-சகக.

திருக்களர்ப்புராணம்

முற்றிற்று.

## திருக்களர்ப் புராணச்

# செய்யுளகராதி.



| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| அக்கினிசைலேச்சுரம் | ௯ | அருமறைவியாதன் | ௩0 |
| அங்கண்மேவியே | ௫௪ | அல்லல்வினைப்பவ | ௧௨ |
| அஞ்செழுத்துபதே | ௪௪ | அலகிலப்பதிக்கு | ௬ |
| அட்டமூர்த்தியா | ௪௩ | அலகிலாரணங்க | ௨௭ |
| அடிமுதற்சடில | ௪௫ | அலகின்மாதவர்கள் | ௬௧ |
| அடைந்தவர்க்கருள் | ௩௯ | அலர்தலைப்புவன | ௩௬ |
| அண்டராண்டளவுந் | ௩௬ | அவ்விடமுழுது | ௫ |
| அண்ணனீகனகப் | ௨௮ | அவ்விலிங்கங்க | ௫௪ |
| அத்தலப்பெருமை | ௬௯ | அவிரொளா[illegible]குறி | ௩௧ |
| அத்திரியேக | ௩௧ | அளவில்போகத் | ௧௭ |
| அந்தணரரசர்கள் | ௭ | அளிதவழிதழித் | ௨௭ |
| அந்தநற்றலத்தி | ௬௧ | அளிபறவைகிருமி | ௫௮ |
| அந்தநற்றவர்கள் | ௨௮ | அளிமுரலுமலர் | ௫௧ |
| அந்தநற்றீர்த்த | ௧௮ | அற்புதமாயிமைய | ௫௪ |
| அந்தநாட்டினை | ௫௯ | அற்றவருக்கருள்புரி | ௫௭ |
| அந்தநாண்முதலா | ௩௮ | அறவரிலுயர்ந்த | ௨௬ |
| அந்தமாங்கதை | ௫ | அறுசுவையடிசி | ௭0 |
| அநந்தகாலமுநன் | ௬௨ | அறுபகைதுரந்து | ௩௭ |
| அநந்தமாயிரகோடிப் | ௪0 | அன்றவணிழைத்த | ௨0 |
| அப்பதியினைத்துங் | ௬௩ | அன்றுகேட்டியான் | ௫ |
| அப்பெருந்தீர்த்தங் | ௬௯ | அன்னகாதையை | ௫ |
| அம்முனிபுரியுந் | ௧௮ | அன்னகாவல | ௬0 |
| அம்மொழியறையக் | ௩௬ | அன்னநற்றவங்க | ௨௫ |
| அயர்வறுபசும்பொற் | ௨௧ | அன்னமாதவன் | ௪ |
| அரிமுதற்றேவ | ௪௫ | அன்னவாசகங் | ௨௨ |
| அருந்தவத்துயர்ந்தோன் | ௨௯ | அனையநன்முனிவர் | ௬௮ |
| அரும்பெறற்றவத்தாற் | ௬௬ | ஆங்குறுஞ்சிவ | ௪௯ |
| அரும்பெறற்றவத்தின் | ௨0 | ஆதலாலுணர்வின் | ௪௪ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| ஆதலாலுலகின் | ௬௭ | இப்பண்பாக | ௩௯ |
| ஆதிநாயகனை | ௧௩ | இப்பரிசியற்றி | ௨௧ |
| ஆயகாலையி | ௪௮ | இப்பெருங்காதையின் | ௬ |
| ஆயசொற்றலைமேற் | ௨௰ | இப்பெருங்காதைப்பெரு | ௫௮ |
| ஆயவாற்றினன் | ௬௰ | இம்முறைமயன்செ | ௨௪ |
| ஆயவித்தலத்திற் | ௬௭ | இமையவர்தன்மை | ௧௭ |
| ஆயவிந்நதியி | ௧௫ | இயன்றவான்பொரு | ௩௯ |
| ஆயினுஞ்சிறி | ௫௩ | இருவகைபுரியுஞ் | ௩௨ |
| ஆயினும்விதிபூ | ௪௧ | இருவினைகழிந்தோங் | ௩௭ |
| ஆயினுமடியோ | ௯௭ | இலகுமாதரும் | ௪௮ |
| ஆர்வமீக்கொள | ௪ | இலங்குமாதவன் | ௩ |
| ஆரணநான்கு | ௨ | இளம்பருதியொருகோடி | ௪௰ |
| ஆரணமுழுது | ௨௭ | இறையிற்சூழியும் | ௧௭ |
| ஆரணமுழுவது | ௩௫ | இன்புறுமரசர் | ௬௬ |
| ஆலயமெழுகி | ௨௯ | இன்னங்கனக | ௫௯ |
| ஆவினையளிக்க | ௭௧ | இன்னணமியம்பிய | ௮ |
| ஆற்றருந்துயர்மிகுத் | ௭ | இன்னணமுரைத்த | ௬௨ |
| ஆற்றரும்பசி | ௪௮ | இன்னணமுனிவ | ௪௨ |
| ஆனந்தோரிலிங்கப் | ௧௮ | இன்னநற்காதை | ௭௪ |
| ஆனந்தநாடகஞ்செய் | ௫௬ | இன்னபொன்னிணர் | ௧௬ |
| ஆனபன்மணி | ௨௨ | இன்னமுதனைய | ௭௰ |
| ஆனவயிராவதமுந் | ௧௧ | இன்னவாறுகி | ௫௰ |
| ஆனவிக்காதை | ௧௪ | இன்னனபன்னிய | ௫௭ |
| ஆனவுருத்திரதீர்த்தத் | ௫௫ | இன்னனவியம்பி | ௬௮ |
| இங்கணிவ்வனத் | ௪௯ | இனையசெய்தி | ௬௰ |
| இத்தகையகாவிரி | ௧௬ | இனையநற்றலத்து | ௮ |
| இத்தலங்களிலே | ௧௩ | இனையமாக்கதை | ௬௮ |
| இத்தலமான்மியத்தை | ௬௭ | இனையமாதவற் | ௩௯ |
| இத்திறம்பலகா | ௧௯ | இனையமாநதியிற் | ௧௫ |
| இத்திறமாலைப் | ௩௮ | ஈங்கணியம்பிய | ௧௨ |
| இந்தநற்கதையை | ௭௪ | ஈங்கியம்பியநற் | ௨௯ |
| இந்தமாநதியிற் | ௧௫ | ஈங்கிவர்புரியு | ௩௨ |
| இந்தவாறுமுன் | ௫௪ | ஈண்டியம்பியநற் | ௧௪ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| ஈண்டுரைத்தினங் | ௫௫ | என்றவனுரைப்பக் | ௬௧ |
| ஈண்டெடுத்துரைக்கு | ௧௯ | என்றிவையனைத்து | ௪௭ |
| ஈதுகேட்டரு | ௫௩ | என்றுபுகலித்திற | ௮ |
| ஈறின்மாதவனின் | ௧௯ | என்னமாதவர் | ௩௩ |
| உகிர்வாளுறுத்தி | ௧௭ | என்னவிதுரைத்து | ௩௮ |
| உடுப்புமெல்விர | ௪௯ | எனப்பலபுகன்று | ௧௯ |
| உணர்வில்விலங்கும் | ௧௭ | எனப்பலவனைத்து | ௬௮ |
| உணர்விஞலணியு | ௯௧ | எனப்புகன்றரு | ௫௪ |
| உணராமலரன்முடி | ௫௨ | எனவருள்சிறப்பச் | ௧௪ |
| உந்திநாண்மலர்மே | ௪௧ | எனவிவையனைத்து | ௭௪ |
| உயர்ந்ததீர்த்தங்க | ௬௭ | எனவெடுத்துரைக்கும் | ௬௦ |
| உயர்ந்திசைக்கு | ௧௦ | ஏய்ந்தவிச்சருக்க | ௭௯ |
| உயர்பிரமதீர்த்தமென | ௫௫ | ஏலவார்குழலி | ௨௦ |
| உரைத்தமெய்ப் | ௪௪ | ஏழ்வகைப்பிறப்பிற் | ௩௮ |
| உரைத்தல்பழுதெனப் | ௫௭ | ஏற்றுமத்தேவர்க் | ௨௨ |
| உரைதருமறையு | ௨ | ஐங்கரன்முதலாம் | ௨௩ |
| உலகினிலிசைபெற் | ௬௪ | ஐந்தவித்தான்ற | ௨௬ |
| உலகெலாமெனப்பா | ௨ | ஐம்பகற்கொருகா | ௯௨ |
| உளப்பொருட்கியன்ற | ௭௦ | ஐயநீதெரிசித் | ௪ |
| உற்றியான்சுமந்து | ௬௨ | ஐயநீபுவனத் | ௧௯ |
| உன்னுவான்புன | ௪௮ | ஐயநீமனுமுறை | ௬௦ |
| ஊறுசெயும்வேட்டு | ௫௩ | ஒழுக்கநெறியுணராத | ௨ |
| எக்குலத்தாயினு | ௭ | ஓதுநான்மறையின் | ௩௧ |
| எந்திரமுதலாம் | ௪௯ | ஓலமொன்றுததி | ௬ |
| எயினர்தங்குலத்தி | ௪௭ | கடந்துசெல்வடிவேற் | ௬௩ |
| எய்தரும்பிரத்தாரத் | ௨௨ | கடையுகத்ததிரு | ௯௪ |
| எய்தியடைந்தோர்க் | ௫௨ | கண்ணுதலோன்கயிலை | ௯ |
| எழில்வாய்ந்திலகு | ௧௬ | கந்தமாதனகிரி | ௩௫ |
| எழுந்தருள்கயிலை | ௨௬ | கந்தமால்வரையிற் | ௬௩ |
| எழுந்துநான்மறை | ௪௮ | கமலையிற்பிறந்து | ௩௬ |
| எல்லையில்பெரும்பே | ௨௪ | கரணமோர்நான்கு | ௧௪ |
| எல்லையிலண்ட | ௩௭ | கரந்தவேடுவன் | ௪௯ |
| என்றவனுரைத்த | ௬௯ | கருணைமிகுநந்தி | ௯ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| கல்லிலையானிழலமர் | ௩ | சுவையிருமூன்றுந் | ௪௭ |
| கற்பகப்பூந்தருவனத் | ௫௧ | செங்கதிர்விரிக்கும் | ௪௨ |
| கறைமிடற்றமல | ௨௦ | செப்பியசாந்த | ௪௨ |
| கறைமிடற்றெம்பெருமா | ௫௧ | செயலரும்பதிட்டை | ௨௪ |
| காமர்வெண்டரள | ௬௫ | செல்வநல்குமெட் | ௪௩ |
| காய்ந்துமுப்புரஞ் | ௫௩ | செல்விலங்கும் | ௪௯ |
| காரளிகளிசைபயிலு | ௧௧ | செறியுமின்னுயி | ௫௯ |
| காலமங்குணர்ந்து | ௩௧ | சென்றவன்கருப்பா | ௬௩ |
| காலையோர்யாம | ௪௫ | சைவநூனெறித் | ௫௯ |
| கிட்டுறுமுன்றுய | ௧௧ | சொல்லுமந்திரத்தின் | ௭௧ |
| கிரமமாவிருடி | ௪௨ | ஞானவாவியினின் | ௭௨ |
| கும்பமாமதியில் | ௩௮ | தங்கொளிவிளங்கும் | ௬௯ |
| குறையிலாதமைந்த | ௭௨ | தண்ணறும்பசுந்தோட் | ௩௩ |
| கூடலின்மருவிக் | ௬௩ | தண்புனல்படிந்து | ௬௫ |
| கூறியவிதியா | ௪௩ | தணந்துபினரிவ | ௬௩ |
| கெழுமறைக்கிறுதி | ௩௮ | தயங்குநன்மணித் | ௬௦ |
| கொணர்வதென்று | ௫௦ | தருவனத்தியல்புந் | ௬௯ |
| கொலைபுரிந்திடினும் | ௭௪ | தருவனத்திலரன் | ௫௪ |
| கொழுமலர்கமழுந் | ௭௩ | தருவனமருவி | ௬௪ |
| சகதலமுழுதும் | ௨௬ | தவப்பயனிலாமனித | ௫௯ |
| சச்சிதானந்தத் | ௨௮ | தவம்புரிசனற்கு | ௬௮ |
| சரதவேதாந்த | ௪௫ | தவமிலாதவ | ௫ |
| சாத்திரம்பயின்றோ | ௭௨ | தவலரும்விரத | ௬௭ |
| சித்திரைமதியில் | ௨௪ | தன்னிகர்பசும்பூங் | ௩௦ |
| சிலையொடுகனக | ௬௨ | தனையொரு நால்வரின் | ௫௨ |
| சிவசின்னந்தனைப் | ௩ | தாதிவரளகச் | ௨ |
| சிவத்திறலன்றிச் | ௪௪ | தானமுந்தவமு | ௬௫ |
| சிவசியின்ஞானவா | ௫௬ | திங்களுக்கொருகான் | ௪௬ |
| சிவசிவிரத | ௭௨ | திரண்டளிகள்வரி | ௫௭ |
| சிறந்ததருவன | ௩௯ | திரமுறுகனக | ௮ |
| சுடருமிழ்பருதி | ௨௩ | திருக்கோடிசங்கர | ௧௦ |
| சுந்தரப்பெயரா | ௧௩ | திருத்தியநீறு | ௭ |
| சுரபியினறுநெய் | ௭௦ | திருவெண்ணீறணிந்தோ | ௪௪ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| திருவெண்ணீறணியா | ௬ | பதரிவனஞ்சுர | ௧௧ |
| துயர்புரியுங்கொலை | ௫௨ | பரந்தொளியிமைக்குங் | ௨௫ |
| தூர்வையைநுகரு | ௨௫ | பரமனுக்கு வடதிசை | ௫௫ |
| தெண்டிரைப்புவியி | ௨ | பரவுமெந்திர | ௨௨ |
| தென்பழனுகுத்த | ௧௫ | பரவைசூழ்புவனப் | ௨௫ |
| தென்புலத்தவர்க் | ௬௪ | பரையுவக்கும்பார்ப் | ௧௦ |
| தென்றிருக்கமலைச் | ௧௩ | பல்லுயிர்க்குயிராம் | ௪௬ |
| தேசுறுதில்லைச் | ௧௨ | பலமுறைவணங்கி | ௬௬ |
| தேவர்கம்மிய | ௨௨ | பலவகையண்ட | ௧ |
| தேவர்பூசனை | ௬௦ | பவளமுமுழுமா | ௨௧ |
| தேளில்வாணிரவி | ௬௯ | பற்பலவிரத | ௨௭ |
| தொண்டர்தமக்கர | ௪௦ | பற்றறத்துறந்த | ௨௫ |
| தொழுகுலத்துரவோன் | ௨௩ | பனிமதிங்லவி | ௪௧ |
| நண்ணுமாதவர் | ௩௨ | பாகசாதனன்பொன் | ௨௯ |
| நந்தியீசனயந் | ௫௩ | பாதலத்துரக | ௨௫ |
| நந்தியீசனு | ௬௮ | பாதலமுழுதும் | ௩௪ |
| நல்லறத்துறையு | ௬௭ | பாதுகஞ்செருப்புக் | ௭௧ |
| நலந்தருமக்கினி | ௫௧ | பாரதகண்டந் | ௬௧ |
| நறியகொன்றையான் | ௫ | பாரிசாதவன | ௭௩ |
| நன்குணமுனிவ | ௪௧ | பாரிலின்ருதி | ௩௮ |
| நாடுமாதவனங் | ௧௯ | பாழிசால்பரமன் | ௪௬ |
| நாற்கதியகற்றி | ௩௧ | பானறுந்தமிழ் | ௫௯ |
| நிமலன்மெய்யடி | ௭௨ | பானிலாவிரிக்குந் | ௪௩ |
| நினைந்துபற்பல | ௧௮ | பிள்ளைவெள்ளெகின | ௩௪ |
| நீதிமனுமுதலான | ௫௧ | புதல்வனைப்பெறுவ | ௬௧ |
| நீர்கொண்டசெழுங் | ௧ | புரிவதென்றும் | ௫௦ |
| பகருமித்தலத்தின் | ௪௮ | புலவுண்டுவெக்கும் | ௧௬ |
| பங்குனித்திங்க | ௫௭ | புலையரொடுபொல் | ௩௯ |
| படிகளேழினையு | ௨௧ | புனைமணிவயிரத் | ௬௧ |
| பண்ணவனியற்று | ௪௨ | பூசனையயர்ந்து | ௨௯ |
| பணமணிச்சுடிகை | ௩௪ | பூந்தளவுறுமுகைப் | ௭ |
| பத்தியின்றியுண | ௫௮ | பூந்திரைவிரிக்குந் | ௬௧ |
| பதமிகுந்தனுமா | ௯௭ | பூருவத்தெடுத்த | ௪௫ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| பூருவம்பிரம | ௩.௫ | மாதவமியற்றல் | ௬௨ |
| பெண்ணொருபாக | ௯௬ | மாதொருபாக | ௭௯ |
| பெறலருமானிடப் | ௮ | மாமலர்க்கோதை | ௧ |
| பொங்கும்பிரசத் | ௧௭ | மாமறைக்கிழவன் | ௭௩ |
| பொருந்தியபொரு | ௭௨ | மாமறைதெரிக்கும் | ௯0 |
| பொருவரும்விதி | ௨௩ | மாலையிற்கொடு | ௪௯ |
| பொற்பசுந்தகட்டி | ௪௩ | மாலைவெள்ளருவி | ௨௮ |
| பொன்னிலங்காவல் | ௫௯ | மிகவரம்பயக்கு | ௪௬ |
| போதநீற்றினை | ௭ | மிகுமணியருவிக் | ௯௨ |
| போதமீந்திடும் | ௫௬ | மிடையிருள்சித்துத் | ௨0 |
| போதுபோக்கத் | ௫0 | மிருகண்டமுனிவன் | ௬௫ |
| மகவிலாதவரு | ௪௭ | மின்றிரண்டிலங்கு | ௨௧ |
| மகவினைவேண்டி | ௬௬ | மீண்டுமெவ்வரசன் | ௬௫ |
| மகாரதன்மகவு | ௬௭ | மீண்டுமொய்யிடையி | ௧௮ |
| மகிழ்ந்துநல்ல | ௬௨ | முகிழ்விரியிதழி | ௯௬ |
| மகிழ்ந்துமாதவ | ௬௪ | முண்டகாசனத் | ௪ |
| மங்கலஞ்சிறந்த | ௧௫ | முந்துபூதலம் | ௪ |
| மங்கைபாகன் | ௩.௩ | முராரிகேதனமு | ௨௩ |
| மடனறத்தெரிந்து | ௧௩ | முருகவிழ்துளவத் | ௪௭ |
| மண்டிவான்றட | ௫௯ | முன்புகன்மதியிற் | ௬௯ |
| மதுவிரிசீல | ௪௯ | முன்னமறியாதமலன் | ௫௧ |
| மந்திரவிதியா | ௧௮ | முன்னவனுக்கரச | ௫௨ |
| மருமலரணையில் | ௧ | முனிநதிக்கரையி | ௬௪ |
| மருவிரிமுளரித் | ௯௫ | முனிவரினுயர்ந்த | ௫ |
| மல்கிருடுரக்கும் | ௬௫ | மூனுமாதரவா | ௨௬ |
| மலங்கிவீந்த | ௫0 | மூன்றனைக்கோடி | ௩.௪ |
| மற்றொருபாதி | ௬௪ | மெல்லியதிரண | ௨௭ |
| மறைகளாறங்கம் | ௪௧ | மேம்படுதவத்து | ௨௯ |
| மறைதெரிவியாதன் | ௭௯ | மேவியோர்பாக | ௪௯ |
| மன்னியவானவர் . | ௮ | மொழியுமத்தினத்தி | ௭0 |
| மனுமுதன்மிருதி | ௪௫ | மொழியுமுருத்திர | ௫௫ |
| மாகமாமதியின் | ௪௯ | மோக்கசாதனமாஞ் | ௪௨ |
| மாசியாந்திங்க | ௭௧ | யான்றவமிழைக்கு | ௨௮ |

# செய்யுள் அகராதி


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| வகுத்தமுழுமணிக் | ௫௨ | விண்டொடுந்தரள | ௨௪ |
| வணங்கியமுனிவ | ௩௭ | விண்ணுறும்பதவி | ௨௧ |
| வதியுமாதவர்க | ௩௩ | விதந்துரைத்திடு | ௭௧ |
| வயங்கெழிற்புதல்வ | ௬௬ | விப்பிரர்சூழ்பற்ப | ௯ |
| வருதகர்மதியிற் | ௭0 | விருப்புறக்குருவின் | ௩௬ |
| வுள்ளிமென்களபப் | ௪௪ | விரும்புநல்வரங்க | ௬ |
| வாசமாலை | ௫0 | வெண்டிரைப்புவனத் | ௬௬ |
| வாய்த்தகாளாஞ் | ௯ | வெம்புனத்தினில் | ௫0 |
| வான்றவமீசற் | ௬௭ | வெவ்வராவுலவிய | ௩௫ |
| வானவர்கருடர் | ௩௪ | வெள்ளிமால்வரை | ௪ |
| வானவர்வாழ்வு | ௭௪ | வேதியர்புதியநாம | ௬௯ |
| விடமுமிழ்தாரை | ௬௫ | வையகமுதலா | ௩௬ |
| விடையிவருந்தரு | ௫௭ | | |


## சருக்க அகராதி.


| சருக்கம். | பக்கம். | பாடற்றொகை |
|---|---|---|
| அநுகூலச்சருக்கம். | ௪ | ௫௪ |
| தீர்த்தமான்மியச்சருக்கம். | ௬௮ | ௩௬ |
| விருத்தச்சருக்கம். | ௩0 | ௫௮ |
| பஞ்சாக்ஷரச்சருக்கம். | ௪௧ | ௩௯ |
| பாயிரம் | ௧ | ௧௩ |
| பாரிசாதவனச்சருக்கம். | ௧௫ | ௮௩ |
| மகாரதன் புத்திரப்பேற்றுச்சருக்கம். | ௫௯ | ௯௪ |
| மாலாதாரகச்சருக்கம். | ௪௭ | ௬௩ |


ஆகச்செய்யுள் ௪௧௧.

———:0:———

பக்கம்.

6. குலோத்துங்கசோழன் = இவன் சாலிவாகன சகாப்தம் 1100-ல் பட்டத்துக்குவந்த மூன்றாவது குலோத்துங்க சோழன்; இவன் காலத்திலேதான் ஒருசிற்றரசனாகிய திருவேகம்பமுடையான் அமராபரணன் சீயகங்கனது அவைக்களத்தில் பவணந்திமுனிவரால் 'நன்னூல்' இயற்றி வெளியிடப்பட்டது; கலிங்கத்துப்பரணியின் தலைவனுமிக்குலோத்துங்கசோழனே; இவனையே விசயதரனென்பார். இவ்வரசனுக்குரிய "புயல்வர.......... மணிவளரப், புலியானை" என்னும் வஞ்சிச்சீரானியற்றியுள்ள கட்டுரை ஒன்று திருவுசாத்தானக் கோயிலில் வரைந்திருக்கிறது.

7. குடினைக்கல் = நிறுத்தலளவைக்குரியகல்; இதனைக்குடினை யென்பதுமுண்டு.

,, வு = வரவு.

,, கழஞ்சு = ஒன்றேகால் வராகனிடை.

,, மஞ்சாடி = மஞ்சாடிக்கொட்டையினளவு. இதனையே யானைக்குன்றிமணியென்ப.

8. ஒரணை = இரண்டு.

,, ஆட்டை = வருஷம்.

9. இராஜராஜதேவர் = இப்பெயர்பெற்றோர் பலராயினும், இவ்வரசன் சாலிவாகனசகாப்தம் 930-ல் அரசாண்ட முதல் இராஜராஜச்சோழன்.

10. திருமன்னிவளர = இது இராஜேந்திர சோழதேவன் கட்டுரை. அவ்வரசன் வேற்றரசர்களைப் போரில் வென்றமையும் வெற்றியாற்பெற்ற நாடுகளையும் தொகுத்துக்கூறுகின்றது. இதனை "திருமன்னிவளர விருநிலமடந்தையும், போர்ச்செயப் பாவையுஞ் சீர்த்தனிச்செல்வியும்" 'இன்னுஞ்சில செய்யுளும் ஆசிரியப்பா வெண்பாவோடு மாறுகொண்டு போலிவெண்பாவாகும்.' என்பர் வீரசோழிய உரையாசிரியர் வீரசோழியம்யாப்புப்படலம்(கக)-ம் சூத்திரவுரை.

12 இராஜேந்திரசோழதேவன் = இவன் முதல் இராஜராஜச்

பக்கம்.

சோழன்மகன் இவனையே முதலிராஜேந்திரச் சோழனென்பார். இவன் மகள் அம்மங்கைதேவியார் மகனே முற்கூறிய மூன்றாவது குலோத்துங்க சோழனென்பான்.

13. அந்தராயம் = விக்கினம் ; கெடுதி.

,, சதுர்வேதிமங்கலம் = அக்கிரகாரம்.

,, படிமாற்றுக்கு உடலாக = படிக்கட்டளைக்கு ஆதாரமாக.

14. பரிகரம் = பரிவாரம்.

,, ஸ்ரீ வீர விருப்பண்ணஉடையார் = இவர் இன்ன வமிசத்தைச் சேர்ந்தவரென்று புலப்படவில்லை.

16. வீரபூபதியுடையார் = ஷை

,, சுவதந்தரம் = சுவதந்திரமென்றிருக்கவேண்டும்.

17. ஸ்ரீ விருப்பண்ணஉடையார் முற்கூறியவராதல்வேண்டும்.

18. கோ மாறவன்மா குலசேகரதேவன் = மாறவன்மாவென்பது பாண்டியர்க்கன்றி ஏனையோர்க்கின்மையின் இவன் பாண்டியனே. இதனால் இடையில் சிலகாலம் இச்சோழநாடு பாண்டியர்களின் ஆட்சியிலிருந்ததாகத் தெரிகிறது. அதிவீரராமபாண்டியன் இந்நாட்டில் சுத்தவல்லி வளநாட்டுத் தனியூரென்னும் பூர்வநாமமுள்ள மன்னார்குடியை வடகெல்லையாக அதன்தெற்கிலுள்ள பாகமெல்லாம் தான்கைக்கொண்டு தன்பெயரால் அதிவீரராமன் பட்டினமென ஒரு நகரமமைத்து அதிலிருந்து அரசாண்டனனென்பது பிரசித்தமாகையால் இதனையே சான்றாககொள்ளலாம்.

19. களப்பாள் = இது திருக்களருக்குமேல்பால் (2) மயிலிலுள்ளது. ஏழுகூறாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கூற்றுவநாயனார் அவதரித்த தலமிதுவே. முதன்முதல் அவ்வேழுகூற்றினையும் தாம் உடையராய் ஆண்டமைபற்றி அப்பெயர் பெற்றனர்போலும். இவ்வூரைக்களந்தையென்பார். இதிலுள்ள ஆதித்தேச்சுரர்கோயில் கருவூர்த்தேவராலருளிச்செய்த திருவிசைப்பாப்பெற்றுள்ளது ; பராந்தகசோழன் மக்கள் மூவருள் மூத்தகுமாரன்சாலிவாகன

பக்கம்.

சகாப்தம் 877-ல் அரசாண்ட இராஜாதித்தசோழனால் இவ்வாலயங்கட்டுவித்து அவனது பெயராலேயே பிரதிஷ்டிக்கப்பட்டது. பிற்காலத்தில்தொண்டைநாட்டிற்சிலர் அந்நாட்டில் மரூஉமொழியாற் களந்தையென்னும் பெயருடைய ஓரூரிலுள்ள சிவாலயத்தை ஆதித்தேச்சரமெனப்பெயர்புனைந்து அதுவே திருவிசைப்பாப்பெற்றுள்ள தலமென்பார் ; கருவூர்த்தேவர் இக்களந்தைக்கு அணித்தாயுள்ள முகத்தலையைச்சார்ந்த பன்னகதெருப்.பன்னகாபரணேச்சரத்தையும் கோட்டூர்சாட்டியக்குடி முதலியவற்றையும்பாடினதன்றி இவர் சோழநாட்டிலுள்ள தலங்களையே பெரும்பாலும்பாடியிருப்பதாலும் தொண்டைநாட்டிற் பிரபலமான பற்பல தலங்களிருக்க அவற்றையெல்லாம் பாடாமல் சிறிதும் புலத்துறாத அக்களந்தையைப் பாடவேண்டுவதின்மையாலும், தொண்டைநாட்டார் கூற்றுப் போலியென்றுணர்க.

19. பெரும்பலமருதூர் = பெருவடமருதூர்.

,, முடிவழங்கு சோழசதுர்வேதிமங்கலம் = இது கோயிற்களப்பாளிலுள்ள அக்கிரகாரத்துக்குப் பூர்வநாமம்.

,, ஒரு பூ = நிலத்தில் ஒருபோகம் ஸாகுபடிசெய்தல்,

21. கருவூலம் = பொக்கிஷம்.

,, வல்லபதேவன் = இவன் இன்னவமிசத்தைச் சார்ந்தவனென்று விளங்கவில்லை ; சகாப்தம் 1370-ல் விஜயநகரத்தை அரசாண்ட இரண்டாவது தேவராயனுடைய சேனாதிபதி வல்லபதேவனென்பானொருவனுளன் அவன் தஞ்சாவூரிலிருந்தனனென்று அறியப்படுகிறது. அவனே இவ்வல்லபதேவனெனில் ஜாதி பிராம்மணன் மதம் சைவம் காலம் முற்கூறியதே தந்தை ஸௌந்தரேச்சுரன் ஆச்விலாயனஸூத்திரத்தினன்.

# புராண அரும்பொருள் விளக்கம்.

பக்கம். பாடல்

௩. 11 உவந்த = சொல்லிய.
௨௨ 44 எந்திரராஜன் = பஞ்சாக்ஷரயந்திரம்.
,, ,, மந்திரராஜன் = பஞ்சாக்ஷரம்.
௨௩. 48 சோதனம் = பிம்பசோதனம்.
௨௯ 60 தூர்வை = அறுகம்புல். இதனையுண்டதனாலே துருவாசனெனப்பெயர்பெற்றனனென்பர்ஒருசாரார்.
௩௭ 44 புனற்கிறைநாள் = சதையநக்ஷத்திரம்.
௪௨ 44 சாந்தம் யாந்தம் = ஸம், யம் என்றஅக்ஷரங்களைப் பஞ்சாக்ஷரத்தினிறுதியிற் சேர்த்துக் கூறுவது.
௪௩ 16 பூர்ச்சம் = பூர்ஜமென்னுமரம் இதன் இலையில்யந்திரமமைப்பது. இது இக்காலத்தில் புஜபத்திரியென்று வழங்குகிறது.
௪௯ 10 உடும்புமெல்விரல் = உடும்பினது தோலாலமைத்த கவசத்தைப்போர்த்த கைவிரல்.
௫௩. 29 கந்தமால்வரை = பரங்குன்று.
,, ,, திரிசிரேச்சுரம் = திரிசிராப்பள்ளி.
,, ,, இபவனம் = திருவானைக்கா.
,, 30 வடாரணியம் = திருவாலங்காடு.
,, 31 வராகவாக்கியம் = வராகமெனும் பெயர்கொண்ட ஆறு.
,, 32 நயனப்பிரதம் = திருவீழிமிழலை.
,, ,, பிரமரேச்சுரம் = திருவண்டுறை.
,, 32 முனிநதி = அகத்தியநதி.
[illegible] 33 ஐராபதேச்சுரம் = கோட்டூர்.
[illegible] 48 வன்னலிற் சூலந்திட்டல் = சிவசின்னமாகிய சூலக்குறியை அமைத்து அதன்கீழ் இன்னகிராமத்தை இன்னகோயிலுக்கு இன்னாரால் விடப்பட்டது என்று எழுதி அந்தக்கிராமத்தின் எல்லைகளில் நாட்டுதல் பண்டைவழக்கு.

## சாதனப்பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 10 | றென்று | றென்றுங் |
| 11 | 14 | சங்குவொட்டல் | சங்குவோடடல் |
| ,, | 17 | லுத்திர | லுத்தர |
| 14 | 7 | அரியராய | ஆரியராய |
| ,, | 10 | யருளானின்ற | யருளாநின்ற |
| ,, | 17 | டிகண் | கண்டி |
| 22 | 3 | திருக்க்ளர் | திருக்களர் |

## புராணப்பிழைதிருத்தம்.

| பக்கம். | பாடல். | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௭ | ௧௦ | துயர்ஞால | துயர்ஞால |
| ௮ | ௨௮ | கோள | கோளா |
| ௧௨ | ௪௪ | சித்திரகூடத்தி | சித்ரகூடத்திற்றி |
| ௧௯ | ௨௪ | கொழுந்த | செழுந்த |
| ௨௧ | ௩௯ | பசும்மொற் | பசும்பொற் |
| ௨௨ | ௪௨ | யமுமொழி | யமுமெழி |
| ௨௩ | ௪௮ | கம்மியின் | கம்மியன் |
| ௪௩ | ௧௯ | பூற்சமே | பூர்ச்சமே |
| ௫௩ | ௪௦ | வணநான் | வணநன் |
| ௫௫ | ௪௫ | றவத்தினை | றலத்தினை |
| ௫௯ | ௫௧ | புகழ் பாரி | புகழ்ப் பாரி |